வானதி
பதிப்பகம்
சுஜாதா
ஆனந்த
பரமானந்த
பலகதை

பாண்டியன் பவனி

சாண்டில்யன்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.

முதற் பதிப்பு	:	பிப்ரவரி, 1984
இரண்டாம் பதிப்பு	:	ஜூன், 1985
மூன்றாம் பதிப்பு	:	ஜூன், 1995
நான்காம் பதிப்பு	:	அக்டோபர், 1996
ஐந்தாம் பதிப்பு	:	நவம்பர், 1999
ஆறாம் பதிப்பு	:	ஜூன், 2006
ஏழாம் பதிப்பு	:	மார்ச், 2009
எட்டாம் பதிப்பு	:	செப்டம்பர், 2010

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ.40.00

- Title : **PANDIAN BHAVANI**
- Author : **Sandilyan**
- Subject : Historical Novel
- Language : Tamil
- Edition : Eighth Edition, September, 2010
- Pages : 168
- Published by : **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai-600 017.
  ☎ 24342810, 24310769
  E-mail : vanathipathippakam@vsnl.net
  Website : www.vanathi.in
- Price : **Rs.40.00**

Laser Typeset at : Sivaa Graphics, Ch-94. - 55413222
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

முன்னுரை

விரகுணபாண்டியன் பாண்டிய நாட்டில் ஏற்படும் சிக்கல்களை அவிழ்க்க மிகப் பராக்கிரம சாலியான தனது தம்பியை அனுப்புவதைப் பழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறான். படை பலம் ஏதுமில்லாமல், துணை யாருமில்லாமல், தனது வாளும் புரவியுமே துணையாக அமானுஷ்ய காரியங்களை, அவன் சாதித்த விவரங்களை **'நீலவல்லி'** என்ற நூலில் விவரித் திருக்கிறேன். அந்தக் கதையின் தொடர்ச்சியாக **'பாண்டியன் பவனி'** அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கதையின் முத்துக் களவில் ஈடுபட்டவர் களைத் தண்டிக்கவும் உக்கிரன்கோட்டை அதிபனான உத்திரனை அடக்கவும் பராந்தகன் செல்கிறான் அங்கு, பாண்டியப் பிரதிநிதியாய். ஆனால், பாண்டிய நாட்டுத் துரோகியாய் இருந்த ரகுநாதபாண்டியன் திட்டங்களைப் பராந்தகன் தவிடுபொடியாக்கி விடவே, ரகுநாதபாண்டியன் தற்கொலை செய்து கொள்கிறான்.

அந்தத் தற்கொலையைப் பராந்தகன் செய்த கொலையாக மாற்றிப் பாண்டிய மன்னன் மீது அவதூறுகளைக் கிளப்பி ரகுநாதபாண்டியன் தம்பி

புரட்சிக்கு அடிகோலுகிறான். அவன் பெண் முல்லையும் அதில் ஈடுபடுகிறாள். அந்தப் புரட்சியைப் பராந்தகன் எப்படி முறியடித்தான் என்பது தான் இந்தக் கதை.

இதைத் தொடர்ந்து கதையாக 'மூக்குத்தி' பத்திரிகையில் வெளியிட்ட திரு. ஜேப்பியார் அவர்களுக்கும் புத்தக வடிவில் வெளியிடும் வானதி அதிபர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் இதைப் புத்தக வடிவில் வாங்கித் தங்களிடம் வைத்துக்கொள்ளச் சித்தமாயிருக்கும் தமிழ்ப் பெருமக்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

சாண்டில்யன்

02.02.84

பாண்டியன் பவனி

1. கடமையின் அழைப்பு

'தேன் மொழியாம் தென் மொழியாம் அதன் பெயர் தமிழ்மொழியாம்' எனக் கவிஞர்களால் சிறப்பிக்கப்பட்ட அமுத மொழிக்கொரு சங்கம் நிறுவி, அதை வளர்த்ததாலேயே பெருமை எய்திய பாண்டிய நாட்டு வீரமன்னர்களின் புராதனமான மதுரை மாநகரின் பெரிய அரண்மனையின் அந்தப்புரப் பள்ளியறையில், மெத்தென்ற பஞ்சணை மீது உட்கார்ந்து பஞ்சணையின் மென்மையையும் தோற்கடித்த வானவன்மகாதேவியின் மலர் மடியில் படுத்துக்கிடந்த வரகுணன் தம்பியான பராந்தகன் உலகத்தில் தன்னைவிட அதிர்ஷ்டசாலி இல்லையென்றே நினைத்தான். 'இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை' என்ற பழமொழிக்கு அன்றிரவில் தானிருந்த நிலையே போதிய சான்றென்று கருதிய பாண்டிய சகோதரன் படுத்த நிலையிலேயே மெதுவாகப் புன்முறுவல் செய்தான்.

அன்று தங்கள் நிஷேத தினமாக சோதிடர்களால் நிர்ணயிக்கப்பட்டு பள்ளியறையை அடைந்த பின்பும் பராந்தகன் ஒரு கணவனுடைய கடமைகளில் ஈடுபடாமல் தனது மடியில் படுத்துக் கண்ணை மூடி ஜபம் செய்வதைப் போல் கிடந்ததையும், காரணமின்றி புன்முறுவல் செய்ததையும் கண்டு சிறிது

அலுத்துக்கொண்ட சேரன் மகள், அவன் தலையைத் தனது மடியிலிருந்து எடுத்து பஞ்சணையில் கிடத்த முற்பட்டும் அவன் அதற்கு இடம்கொடாமல் தலையை அவள் மடியில் நன்றாக அழுத்திப் பிடிவாதமாகப் படுத்தான். அவள் இரும்புத் தலை அப்படி அழுத்தியதால் அவள் மலர்த் தொடையொன்று சிறிது கன்னிச் சிவந்து வலிக்கவும் செய்யவே, ''உம். எழுந்திருங்கள். உங்களைத் தாங்க என்னால் முடியவில்லை'' என்று கடுப்புடன் சொல்லவும் செய்தாள்.

''அப்படியானால் என்னை ஏன் திருமணம் செய்து கொண்டாய்?'' என்று மடியிலிருந்த வண்ணமே தனது கண்களை உயர்த்தி அவளை நோக்கி வினவினான் பராந்தக பாண்டியன்.

சேரன் மகள் அவன் பிடிவாதத்தையும் விபரீதப் பொருள் கொண்ட அவன் கேள்வியையும் நினைத்து நகைத்தாள். ''உங்களைப் போன்ற ஒரு முரடனைத் தாங்க என்னைப் போன்ற பெண்ணால் எப்படி முடியும்?'' என்று கேட்டாள் நகைப்பின் ஊடே.

பராந்தகன் தனது கையொன்றால் அவள் இடையை வளைத்தான். ''நான் என்ன முரடனா?'' என்று வினவவும் செய்தான் இடையை இறுக்கி இழுத்த வண்ணம்.

''சந்தேகமிருந்தால் எனது இடுப்பைப் பாருங்கள்'' என்றாள் வானவன்மகாதேவி.

''அதை நான் எதற்காகப் பார்க்க வேண்டும்?'' பராந்தகன் கேள்வியில் கேலி இருந்தது.

''பார்த்தால் உங்கள் யோக்கியதை, உங்கள் முரட்டுத்தனம் தெரியும். இடை கன்னிச் சிவந்திருக்கிறது.''

''அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளி?''

''உங்கள் கை பொறுப்பாளி.''

''என் கை மீது குற்றம் சாட்டாதே! அது ஒரு பாவமும் அறியாதது.''

''ஐயோ பாவம்! ஒன்றுமறியாத கை இடையிலிருந்து நழுவி முன்னால் வருகிறது. அதை உடைத்து விடுகிறேன்'' என்ற வானவன்மகாதேவி தனது கையால் அவன் கையை, முறிக்க முயன்று, அது முடியாமல் போகவே தனது கால்களை நீக்கி பஞ்சணையில் வேறுபக்கம் படுத்து உருண்டுவிட்டாள். அப்படி உருண்டதால் அந்தக் கட்டிலில் சுற்றுமிருந்த சட்டங்களில் தொங்கிக்கொண்டிருந்த மல்லி முல்லைச் சரங்கள் தங்கள் மலர்களைப் பஞ்சணை மீது உதிர்த்து நகைத்தன பராந்தகனை நோக்கி.

பஞ்சணையைச் சுற்றிலும் ஜோடிக்கப்பட்ட மலர்த்திரையி லிருந்து புஷ்பங்கள் உதிருவதைப் பார்த்தான் பராந்தகன். அவை உதிர வேண்டிய நிலை வேறு என்பதை உணர்ந்ததால் புன்முறுவலும் கொண்டான். அன்று பள்ளியறை இந்திரன் பள்ளியறையையும் தோற்கடிக்கும்படியாக அலங்கரிக்கப்பட் டிருந்தது. அறை முற்றிலும் அகிற்புகை லேசாக எழுந்து சுகந்தத்தை எங்கும் பரப்பியிருந்தது. பராந்தகனும் தேவியும் களைந்து வைத்த பெரிய நிஷேதச் சடங்கு மாலைகளில் புனையப்பட்டிருந்த செண்பகப்பூக்களின் சுகந்தம் அகிற் புகையை அர்த்தமில்லாமல் அடித்திருந்தது. இத்தனைக்கும் மேலாக பஞ்சணையில் உருண்ட பாண்டிய தேவியின் தலைத் தைலம் பராந்தகனை மெய்மறக்கச் செய்தது.

அன்று தனது மணமுடிப்பு நாளன்று வானவன்மகாதேவி யான நீலவல்லி அப்சரஸ்போல் வருவாளென்பதைப் பராந்தகன் உணர்ந்திருந்தாலும் இத்தகைய ஒரு ஜகஜ்ஜோதியாயிருப்பா ளென்று அவன் எதிர்பார்க்கவில்லை! அவள் உள்ளே நுழைந்தபோது தலையில் சூட்டியிருந்த முத்துச்சரமும் வைரச்சுட்டியும் அவள் குழலையும் சந்திரவதனத்தையும் பல ஆயிரம் மடங்கு உயர்த்திக் காட்டியதை உணர்ந்தான்.

பஞ்சணையில் தன் பக்கத்தில் அவள் சொந்தமாக உட்கார்ந்து தலைக்குழலிலிருந்து சுட்டியைப் பிரிக்க முயன்று முடியாமல் தவித்ததே பேரின்பமாயிருந்தது பாண்டியனுக்கு. ''ஏன் பார்க்கிறீர்கள்? சுட்டியைக் கழற்றுங்கள்!'' என்று அவள் எரிந்து விழுந்தது அதைவிட இன்பம் அளித்தது பராந்தகனுக்கு. ஆகவே, பஞ்சணையில் உட்கார்ந்திருந்தவன் எழுந்து அவளுக்கெதிரே வந்து தலைச்சுட்டியை மயிரிழைகளிலிருந்து மிக மெதுவாக எடுத்தான்.

அதனால் திருப்தியடைந்த நீலவல்லி, ''சிக்கலை நன்றாக அவிழ்க்கிறீர்கள்'' என்று சொல்லி மோகனப்புன்முறுவல் செய்தாள்.

''அந்தத் திறமை எனக்கில்லாவிட்டால் நான் தாமிரபரணிக் கரைக்கு வந்திருப்பேனா? அங்கு பரதவர் வேடம் போட்ட படகோட்டிச் சிறுக்கியைச் சந்தித்திருப்பேனா? அவளை மணமுடிக்க இங்கு இழுத்து வந்திருப்பேனா?'' என்று பழைய கதையை விவரிக்கலானான் பராந்தகன்.

அந்தக் கதையை நினைக்கவே பேரின்பமாயிருந்தது பாண்டியன் பத்தினிக்கு. அங்கு காட்டிலும் கடற்கரை மணல் மேட்டிலும் தன்னை எப்படியெல்லாம் புரட்டினான் தனது கணவன் என்பதை நினைத்துப் பார்த்த வானவன்மகாதேவி, ''உங்கள் திறமைகளையெல்லாம் தென்பாண்டிச்சீமையில் தான் பார்த்துவிட்டேனே'' என்றாள். நாணத்தால் தலை குனிந்தாள்.

அந்த விளையாட்டையெல்லாம் நினைத்த பராந்தகனும் இவ்வுலகை மறந்து தனது புது மனைவியை, பிற்கால பாண்டிய ராணியை பஞ்சணையில் சிறிது நகர்த்தி உட்காரவைத்து அவள் மடியில் தனது தலையை வைத்துப்படுத்தான். பிறகு அவள் புரண்ட போது தானும் புரண்டு அவளை அணைத்து, ''சேர மன்னன் புதல்வியே! எனக்கு இந்தப் பஞ்சணை பிடிக்க வில்லை'' என்றான்.

''எப்படிப் பிடிக்கும்? காட்டுத்தரையிலும் கடற்கரை மணலிலும் உருண்ட காட்டுமிராண்டிக்கு மலரணை எப்படிப் பிடிக்கும்?'' என்று வினவினாள் பாண்டியன் தேவி.

பராந்தகன் அவளை அணைத்த நிலையிலிருந்து நீங்கி எழுந்து உட்கார்ந்து, படுத்துக்கிடந்த அந்தப் பைங்கிளியை நோக்கினான். கால்களை ஒடுக்கி, ஒருக்களித்துப் படுத்த நிலையிலும் மோகனாகரமாக விளங்கினாள் நீலவல்லி. 'இந்தப் பஞ்சணைக்குப் பதில் வங்கக் கடற்கரையும் நிஷேத அறையின் ஜாஜ்வல்யமான பெருவிளக்குக்குப் பதில் சந்திரனும் இருந்தால் எத்தனை மேன்மையாயிருக்கும்?'' என்று எண்ணினான் பராந்தகன். அதனால் நீலவல்லியைப் பார்த்துச் சொன்னான்: ''வானவன்மகாதேவியென்ற பெயரைவிட உன் பொய்ப் பெயர் நீலவல்லியே எனக்குப் பிடிக்கிறது. இந்தப் பஞ்சணையைவிட அன்னை பூமியே எனக்குப் பிடிக்கிறது. மனிதன் மண்ணில் பிறக்கிறான். மண்ணில் மறைகிறான். மண்ணில் புரண்டால் என்ன? மண்ணின் சுகம் இந்த மலரணையில் இருக்கிறதா?'' என்று.

''வேதாந்தம் நன்றாயிருக்கிறது'' என்ற நீலவல்லி, ''சமய மும் இதுதான், உங்கள் வேதாந்த சிந்தனைக்கு'' என்றாள்.

பராந்தகன் அவளின் மூடிய கண்களைப் பார்த்தான். தனது இரண்டு விரல்களால் அவள் முத்துச்சிப்பி இமைகளைத் திறந்தான். பிறகு அவற்றை மூடி தனது இதழ்களை அவற்றில் பொருத்தினான். ''அடி கள்ளி! இதோ வருகிறேன் உன்னைத் தண்டிக்க'' என்று கூறிவிட்டு அறைப் பெருவிளக்கை அணைக்க எழுந்தான்.

அவன் கருத்தை அவள் உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே அவன் கழுத்தைத் தனது இரு கைகளாலும் வளைத்து அவன் தலையைத் தன்னை நோக்கி இழுத்து, ''விளக்கு இருக்கட்டும். இங்கு யாரிருக்கிறார்கள்?'' என்றாள்.

பராந்தகன் மோகத்தில் மூழ்கினான். அவள் இதழ்களைத் தனது முரட்டு இதழ்களால் தழுவினான். சரேலென அவனைப் புரட்டி வெறியுடன் குவித்தாள். அந்தச் சமயத்தில் அந்த அறைக்கதவு தட்டப்பட்டது. "தேவி தேவி" என்று பணிப் பெண் குரல் கொடுத்தாள்.

"என்ன?" என்று சீறினாள் நீலவல்லி.

"மன்னர் இளவரசரை உடனடியாக அழைத்து வரச் சொன்னார்" என்றாள் பணிப்பெண்.

வானவன்மாதேவியின் முகத்தில் ஈயம் என்னை பீறிப் பரவியது. பராந்தகன் முகத்தில் மாற்றம் மிதமிஞ்சித் தெரிந்தது. அவள் எழுந்து சென்று கதவைத் திறந்தாள். அங்கு நின்றது பணிப்பெண் மட்டுமல்ல; அவருக்குப் பின்னால் மன்னன் வரதுணனும் நின்றிருந்தான். "தம்பி உடனடியாகப் புறப்பட்டு வா. விநாடிகூட தாமதிக்காதே" என்று கூறிவிட்டு திரும்பி நடந்து விட்டான் வரதுணன். மாற்றத்தாலும் மாற்றம் அளித்த அதிர்ச்சியாலும் விக்கம்பித்து நின்றான் பராந்தகன். 'கடமையின் அழைப்புக்குத் தாமதமில்லை, தேவை மில்லை' என்று அவள் வலிய உதடுகள் முணுமுணுத்தன.

2. தொடர்ந்த முன்வினை

பஞ்சணையில் பக்கத்தில் கிடந்த பைங்கிளியைக் கொஞ்சிக் குலாவ முற்பட்ட சமயத்தில் திடீரென மன்னரால் அவசரமாக அழைக்கப்பட்ட பராந்தக பாண்டியன், மன்னர் சென்ற பின், மணவறையின் நடுவிலேயே பல விநாடிகள் அசையாது நின்றான். மணவறையில் முதல் நாளன்றுகூட மனைவியை உறவு கொள்ள அனுமதிக்காத அரசகுல வாழ்வை அந்தச் சில விநாடிகள் பெரிதும் வெறுத்தான் பராந்தகன். 'கொடுமை. அர்த்தமற்ற அதிகாரம். இதுதான் அரச வாழ்வு' என்று மனத்துக்குள் வெறுத்தவனாகத் திரும்பி

பராந்தகனை, பஞ்சணை முகப்பிலிருந்த மல்லிகைச்சரத் திரையை லேசாக விலக்கித் தலை நீட்டிய வானவன்மாதேவி, "என்ன விசேஷம்? அரசர் எதற்காக அவசரமாக வந்தார்?" என்று கவலை பாய்ந்த குரலில் வினவினாள்.

அவளுக்கு உடனடியாக பதில் சொல்லாத பராந்தகன், மலர்களுக்கு இடையே தெரிந்த அவள் கந்தரமுகத்தையும், தெவிழ்ந்த சேலையின் விளைவாகத் தெரிந்த மேல் அழகுகளையும் சில விநாடிகள் உற்று நோக்கினான். 'இந்த சௌந்தரியம் இன்றைக்கு உனக்குப் பயன்படாது. இன்றைக்கு என்ன, பல நாள்களுக்குப் பயன்படாது' என்று தன்னைப்பற்றித் தனக்குள் சொல்லிக்கொண்டு பஞ்சணையை அணுகி வானவன்மாதேவியை அப்படியே தனது கைகளில் அள்ளித் தூக்கித் தனது இதழ்களை முரட்டுத்தனமாக அவள் சங்குக்கழுத்தில் புதைத்தான். அங்கிருந்து மீண்டு உதடுகள் அவள் செவ்விய அதரங்களுடன் ஒரு விநாடி இழைந்தன. அடுத்து எந்தச் சரசத்திலும் ஈடுபடாத பராந்தகன், "நீலவல்லி, எனது பயண உடைகளையும் வாளையும் குறுவாளையும் எடுத்து வா" என்று உத்தரவிட்டு அவளைத் தரையில் இறக்கினான்.

அவன் சொற்கள் அவளைத் தணலென தகித்ததால், அவன் கட்டளையை அவள் உடனே நிறைவேற்றினாள் இல்லை. தரையில் நின்றபடி அவன் உடல் மீது சாய்ந்து தனது உடலை அவள் உடலுடன் முற்றும் இழைத்துக்கொண்டாள். அந்த இழைப்பு அந்த மகாவீரன் உறுதியையும் ஒரு விநாடி குலைத்ததால் அவனும் அவளை அணைத்துக்கொண்டான். "நீலவல்லி, கடமை என்னை அழைக்கிறது. எனது பயண உடையையும் ஆயுதங்களையும் கொண்டு வா" என்றான் உணர்ச்சிகளின் நெகிழ்ச்சி குரலிலும் தெரிய.

"கடமையா?" அவன் மீது சாய்ந்தவண்ணமே கேட்டாள் சேரன் மகள்.

"ஆம், அரசாங்கக் கடமை" என்றான் பராந்தகன்.

"மனையாளிடம் உங்களுக்குக் கடமை ஏதுமில்லையா?" என்று சினத்துடனேயே கேட்டாள் அவள்.

"இல்லையென்று யார் சொன்னது?" பராந்தகன் பதிலில் பரிதாபம் இருந்தது அவள் நிலையை எண்ணி.

"மனையாளை மணவறையிலிருந்து முதல் நாளே பிரிந்து செல்வது அத்தகைய கடமைகளில் ஒன்றோ?" என்று மீண்டும் வினவினாள் நீலவல்லி என்ற வானவன்மகாதேவி.

"தேவி!" என்று அவளை அன்புடன் அழைத்த பராந்தகன், "மன்னன் குலத்தாருக்கு முதல் கடமை அரசு தரும் கடமை. மற்ற கடமைகள் எல்லாமே அதற்குப் பிந்தியவை. மன்னர் குலத்தில் பிறந்த சாபம் அது. அதை நானோ, நீயோ மீற முடியாது. சேரமன்னன் மகளான நீ காயலில் பரதவர் பெண்ணாக ஏன் திரிந்தாய்? கடமையை முன்னிட்டு. சேரன் மகளே! சிந்தித்துப் பார். உன்னுடைய அன்றைய நிலைமைதான் என்னுடைய இன்றைய நிலைமையும். போ, உடைகளைக் கொண்டு வா!" என்று கூறி மெள்ள அவளைத் தன்னிடமிருந்து நகர்த்தினான்.

சேரன் மகள் இடை துவள நடந்தாள் அந்த அறையின் கோடிக்கு. அவள் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியும் அவள் மனத்தின் சோகபாரத்தைத் தெளிவாக்கியதைக் கண்ட பராந்தகன் மனத்தில் அவளைப் பற்றி அனுதாபமே எழுந்து நின்றது. அவள் மெதுவாகச் சென்று அறைக்கோடியிலிருந்து அவன் உடையையும் ஆயுதங்களையும் கொண்டுவந்ததும் ஆடைகளைத் துரிதமாகத் தரித்துக்கொண்ட பராந்தகன், "தேவி! என் கச்சையையும் வாளையும் இடையில் கட்டிவிடு" என்றான்.

சிந்தனை மிகுந்த மலர்விழிகளைப் பராந்தகனை நோக்கி உயர்த்தினாள் சேரன் பெற்றெடுத்த செல்வம். "மனைவி

மார்கள் புருஷனுக்கு வாளைக் கட்டிவிடுவது, போருக்குச் செல்லும் சமயத்திலல்லவா?" என்று வினவினாள்.

பராந்தகன் அவளை நோக்கிப் புன்முறுவல் காட்டினான். "தேவி! இத்தனை அவசரமாக, இத்தனை அநாகரிகமாக மன்னர் என்னை அழைத்தது விருந்துக்கென்றா நினைக்கிறாய்? போருக்குத்தான். அதுவும் படைகளை நடத்திச் செல்லும் போராயிருக்காது. முதன்முதலில் காயல்பட்டணம் வந்தேனே, அந்த மாதிரி ஒரு பணியாயிருக்கும்" என்ற பராந்தகன் அவளை இழுத்து மீண்டும் ஒரு முறை அணைத்து, "வருகிறேன் தேவி, வெகு சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று கூறி விடை கொண்டவன் அடுத்த விநாடி அங்கு நிற்கவில்லை. கதவைத் திறந்துகொண்டு வெளியே நடந்துவிட்டான்.

அவன் செல்லத் திரும்பியதுமே அவனைத் தொடர்ந்த சேர மகள் அந்தக் கதவிடமே நீண்ட நேரம் நின்றாள். "வெகு சீக்கிரம் வருகிறாராம், வெறும் பாசாங்கு. போரென்றால் அவருக்குத்தான் வெல்லமாயிற்றே. அவர் உண்மையில் மணந்திருப்பது என்னையல்ல; அவர் வாளைத்தான் மணந்திருக்கிறார்" என்று சொற்களை மிக மெதுவாக உதிர்த்து அறைக் கதவை லேசாகச் சாத்திவிட்டு மீண்டும் பஞ்சணைக்கு வந்து அதன் முகப்பில் உட்கார்ந்து முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டாள். அஞ்சாத அவள் நெஞ்சத்திலும் அச்சம் துளிர்த்து நின்றது. கணவன் எந்த அபாயத்தை நாடிச் செல்கிறானோ என்ற நினைப்பில் மெள்ள அவள் உடல் குலுங்கியது தேம்பலால். பஞ்சணையும் அசைந்து மல்லிகை மலர்களைத் துன்பத் துளிகளாக அவள் மீது உதிர்த்தது.

பள்ளியறையிலிருந்து வெளியேறிய பராந்தகன் மனத்திலும் துன்பம்தான் நிறைந்திருந்தது. 'மனையாளை மணவறையில் விட்டு ஓடுவது எத்தனை பேடித்தனம்! எத்தனை மானக்கேடு! இது ஏன் என் அண்ணனுக்குப் புரியவில்லை?' என்று

நினைத்த வண்ணம் நடந்து அரசரின் அந்தரங்க அறைக்கு வந்து சேர்ந்தான்.

அறைக்குச் செல்லும் பெரிய தாழ்வரையின் முகப்பிலேயே இளவரசனான பராந்தகனைச் சந்தித்த இருவீரர்கள் அவனுக்குத் தலைவணங்கி அரசர் அறைக்கு அழைத்துச் சென்று கதவைத் திறந்தனர். உள்ளே சென்ற பராந்தகன், அங்கு அரியணை ஆசனமொன்றில் தன்னந்தனியே முகத்தில் கவலை அலையாய மன்னர் வரகுணன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு பெரிதும் வியந்தான்.

"குரை கழற்கா லரை சிறைஞ்சக் குவலதலந் தனதாக்கின வரைபுரையு மணி நெடுந்தோள் மன்னர்கோன் வரகுண வர்மன்" என்று சின்னமனூர்ச் செப்பேடுகளால் புகழப்பட்ட வலும் மகாவீரரும், பல போர்களைக் கண்டவருமான தனது அண்ணன் கவலை மிகுந்து உட்கார்ந்திருப்பதைக் கண்ட பராந்தகன் ஏதோ கடுமையான செய்தி மன்னருக்குக் கிட்டி யிருக்க வேண்டுமென்பதைப் புரிந்துகொண்டான். ஆகவே மெதுவாக தனது வரவை அறிவித்தான் "இளையவன் வந்திருக் கிறேன்" என்று.

அதுவரை தலையைத் தொங்கப்போட்டு உட்கார்ந்திருந்த வரகுணன் தனது கண்களை உயர்த்தித் தம்பியை நோக்கி, "தம்பி! என்னால் உனக்குக் கஷ்டமே தவிர சுகம் ஏதுமில்லை" என்றார்.

பராந்தகன் அதற்கு உடனடியாக பதில் சொல்லவில்லை. "சுகம், கஷ்டம் இரண்டையும் சமமாகப் பாவிப்பதுதான் அரசகுல தர்மம். சுற்றத்தின் சுகத்தைப் பார்த்தால் கொற்றம் என்ன ஆகும்? வீரரான தங்களுக்கு இது புரியாத விஷயமல்ல. ஆகவே கட்டளையிடுங்கள். புறப்படச் சித்தமாகவே வந்திருக்கிறேன்" என்று பேசினான் பராந்தகன் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

வரகுணன் தம்பி மீது வியப்பு நிரம்பிய விழிகளை நிலைக்க விட்டார். "நான் உன்னை அழைத்தது வெளியூர் செல்ல என்பதை அறிந்துகொண்டாயா பராந்தகா?" என்று வினவினார் வியப்பு குரலிலும் தெரிய.

"வேறு எந்த அலுவலாயிருந்தாலும் மற்ற படைத்தலைவர் செய்யக்கூடிய பணியாயிருந்தாலும் தாங்கள் என்னை இத்தனை அவசரமாக அழைத்திருக்க மாட்டீர்களென்பது எனக்குத் தெரியும். தவிர..." என்ற பராந்தகன் சொற்களை முடிக்காமல் விட்டான்.

"மணவறையில் மனையாளிடமிருந்து உன்னைப் பிரிக்கும் பஞ்சமாபாதகத்தைச் செய்திருக்க மாட்டேன்" என்று தம்பியின் வசனத்தை முடித்த வரகுணன் "தம்பி! அந்த ஆசனத்தில் உட்கார்" என்று எதிரேயிருந்த ஓர் ஆசனத்தைக் காட்டினார்.

"வேண்டாம் அண்ணா, சொல்லுங்கள். இப்போது போக வேண்டிய இடம் எது?" என்று வினவினான் பராந்தகன் நின்ற வண்ணம்.

"ரகுநாதபாண்டியனை நினைப்பிருக்கிறதா உனக்கு?" என்று மன்னர் கேட்டார்.

"நினைப்பில்லாமலென்ன? காயலில் நமது பிரதிநிதியா யிருந்து நமக்குத் துரோகம் செய்து மாண்டவன்..." என்ற பராந்தகன் நிதானித்தான்.

"சாதாரணமாக மாளவில்லை அவன்" என்று திருத்தினார் மன்னர்.

"தற்கொலை செய்து கொண்டான்."

"ஏன்?"

"பாண்டிய மன்னனுக்குச் சேர வேண்டிய முத்தைத் திருடியதற்காக!"

"அதற்காக மட்டுமல்ல..."

''வேறென்ன மன்னவா?'' உறவுமுறையைக் கைவிட்டு மன்னன்- படைத்தலைவன் என்ற முறையில் பேசினான் பராந்தகன்.

மன்னர் சிறிது சிந்தித்தார். ''உன் வாள் விளைவித்த வினை'' என்று முடிவில் சொன்னார். ''தனி வாட்போரில் முதலில் அவனது ஒரு கண்ணை நீக்கினாய். பிறகு கையைத் துண்டித் தாய். மற்றும் ஒரு கையையும் எடுத்தாய். இப்படி அவனை நீ அங்கஹீனப் படுத்தியதால் அவன் தற்கொலை செய்து கொண் டான்'' என்று ஏற்கெனவே நடந்ததை மன்னர் விளக்கினார்.

''அவனுக்கு நான் அளித்த தண்டனைக்கு நியாயமிருக் கிறது'' என்றான் பராந்தகன்.

அது உண்மைதான் என்பதை ஒப்புக்கொண்ட பாண்டிய மன்னர், ''தம்பி! நீ தண்டித்தாய் ரகுநாதபாண்டியனை. தென்பாண்டிச்சீமையில் நமது அரசியலை வேரூன்றச் செய்தாய். ஆனால் ரகுநாதபாண்டியனிடம் சிறிது கருணை காட்டியிருக்க லாம்'' என்றார்.

ஆச்சரியத்தில் பராந்தகன் விழிகள் அகல விரிந்தன. ''நீலவல்லியை அவன் சீரழிக்க முயன்ற பின்புமா?'' என்ற ஆச்சரியம் பெரிதும் துளிர்த்த குரலில் வினவினான்.

''தம்பி! அவன் அயோக்கியத்தனத்துக்கு எந்தக் கொடுமை யும் தகும். ஆனால், எந்த நீதியிலும் கருணையைச் சிறிது கலப்பது நல்லது. இப்பொழுது ரகுநாதபாண்டியன் இறந்து விட்டான். ஆனால், அவனுக்கு நீ அளித்த தண்டனை பெரிது படுத்தப்பட்டிருக்கிறது. அவனுக்கு ஒரு தம்பி தலையெடுத் திருக்கிறான். பாண்டியர்களுக்கு எதிராக மக்களைக் கிளப்பி விடுகிறான். அவனை சீக்கிரம் அடக்காவிட்டால் தென்பாண்டிச் சீமையில் கலவரம் சீக்கிரம் நடக்கும்'' என்று விளக்கிய மன்னர், ''ரகுநாதன் தம்பியின் பெயர் முல்லைவேந்தன்'' என்று சொன்னார்.

''முல்லைவேந்தனா! பெயரே விசித்திரமாக இருக்கிறதே!'' என்று கேட்டான் பராந்தகன்.

''விசித்திரமான பெயர்தான். ஆனால், அதற்குக் காரண மிருக்கிறது'' என்ற வரகுணன் காரணத்தையும் தம்பிக்கு விளக்கினார். மன்னர் விளக்கிய காரணம், எதற்கும் அஞ்சாத பராந்தகனையே அசர வைத்தது.

3. புதிய காரணம்

தென்பாண்டிச்சீமையில் மக்களைக் கலகத்துக்குத் தூண்டிவரும் முல்லைவேந்தனின் பெயருக்குக் காரணமும் உண்டு என்று அண்ணன் வரகுணபாண்டியன் சொன்னதால் வியப்புக்கு உள்ளான பராந்தகன், அண்ணன் காரணத்தை விளக்கியதும் அதிர்ச்சியடைந்தானென்றால் அதற்கும் காரணம் இருக்கவே செய்தது. முல்லைவேந்தன் பெயரை உச்சரிக்கும் வரை தனது ஆசனத்தில் அமர்ந்திருந்த வரகுணபாண்டியன் அந்தப் பெயரையும் அதன் காரணத்தையும் விளக்க முற்பட்டதும் எழுந்து அறையில் அப்படியும் இப்படியும் நடந்துகொண்டே பேசினார். ''பராந்தகா! முல்லைவேந்தனின் இயற்பெயர் பராக்கிரம பாண்டியன். அதில் பராக்கிரம என்ற சொல் வடமொழிச் சொல்லாதலால் அந்தப் பெயரையே நீக்கிவிட்டதாகச் சொல்கிறான். பாண்டியர்களெல்லாம் ஆரியர்களென்றும் அவர்கள் தமிழர்களைக் கொடுமைப் படுத்தவே வந்திருக்கிறார்களென்றும் பிரசாரம் செய்கிறான். அதற்கு உதாரணமாக ஸ்ரீமாற ஸ்ரீவல்லவன், வரகுணன், பராந்தகன் என்ற பெயர்களைச் சுட்டிக்காட்டுகிறான். மொழி வெறியை மக்களிடையே கிளப்பி அவர்களை ஆயுதமாக உபயோகித்து பாண்டிய அரசைக் கவிழ்க்கப் பார்க்கிறான். அதற்காகத் தன் பெயரை முல்லைவேந்தனென்று மாற்றிக் கொண்டிருக்கிறான். இத்தனைக்கும் அவன் அதிக அறிவாளி

யல்லன். அவனுக்கு இதையெல்லாம் சொல்லிக் கொடுப்பவள் அவள் பெண். அவள் பெயர் முல்லை...'' என்ற வரகுணன் சட்டென்று நடையை நிறுத்தி தம்பியை உற்று நோக்கினார்.

பராந்தகன் கேட்டான், ''இந்துமகா சமுத்திரம் இல்லாத காலத்திலேயே பாண்டியர்கள் தமிழ்ச்சங்கம் நிறுவியவர்கள். இன்றும் தமிழை வளர்ப்பவர்கள் என்ற விஷயத்தை நாம் எடுத்துப் பிரசாரம் செய்தாலென்ன?'' என்று.

வரகுணன் முகத்தில் வேதனை தெரிந்தது. ''தம்பி! அறிவு வேறு. வெறி வேறு. ஒன்றிருக்கிற இடத்தில் இன்னொன்று இருக்காது. வெறி ஊட்டப்பட்ட மக்கள் நிதானத்தை இழக்கிறார்கள். அவர்கள் நிதானத்தை இழக்கும்போது எந்தப் பொய்யும் அவர்கள் காதில் ஏறும். உண்மைக்கோ வாதத்துக்கோ அங்கு இடமிருக்காது'' என்று சொன்னார். ''தவிர தம்பி! அந்த முல்லை தனது பேச்சினால் மக்களை அடியோடு மயக்கவும் திருப்பவும் வல்லவளென்று கேள்வி. அவள் பிரசாரத்தை வளரவிட்டால் அங்குள்ள நமது படைவீரரும் அவள் பக்கம் சேரலாம். அடுத்த பாண்டிய ராஜ்யத்தில் உள்நாட்டுப் போர் நிகழும். அதற்கு சோழர்களும் கைகொடுக்கலாம்'' என்றும் சொன்னார்.

நிலைமையை அண்ணன் சற்று மிகைப்படுத்துவதாகவே தோன்றினாலும் அதைப் பற்றிப் பேசவில்லை பராந்தகன். ''சரி அண்ணா! இன்றே நெல்லையை நோக்கிப் பயணப்படுகிறேன்'' என்று சொல்லி திரும்ப முற்பட்டான்.

வரகுணன் அதற்கும் தடைபோட்டு, ''தம்பி! முல்லை நெல்லையில் மட்டும் இருப்பதாகத் தெரியவில்லை. தாமிரபரணியின் ஆரம்ப இடங்களிலும் சுற்றுவதாகக் கேள்வி. பாபநாசம் அருவிக் காடுகளில் அங்குள்ள வேட்டுவரை அவள் திரட்டுவதாகவும் கேள்விப்பட்டேன். ஆகவே, நீ பொதிய மலைப் பகுதிக்குச் செல்வது நலம். அந்த வட்டாரங்களில்

கொட்டுந்தளம் என்ற நமது பாசறை இருக்கிறது. மலைமீதுள்ள அந்தத் தளத்துக்கு அருகிலும் அவளைப் பார்த்ததாக நமது ஒற்றர்கள் செய்தி கொண்டுவந்திருக்கிறார்கள்'' என்றார்.

வரகுணனின் இந்தச் செய்தி சிறிது சிந்தனையைக் கிளறியதால் வெளியே செல்லப் புறப்பட்ட பராந்தகன் சிறிது நின்று, ''எதிரிகள் வரவை அறிவிக்க அல்லவா நாம் கொட்டுந் தளத்தை அமைத்தோம். அங்குள்ள பெரும் முரசுகள் என்ன ஆயின?'' என்று வினவினான்.

''அப்படியே இருக்கின்றன. சில சமயங்களில் ஒலிக்கவும் செய்கின்றன. ஆனால், அவற்றை ஒலிக்கச் செய்பவர்கள் நம்மவர்களல்லர். முல்லைவேந்தனின் ஆட்கள் ஒலிக்கச் செய்கிறார்கள். தங்கள் ஆட்களை எச்சரிக்க அல்லது திரட்ட'' என்று வரகுணன் விவரித்தார்.

''சரி அண்ணா! நான் போய்ப் பார்த்து வருகிறேன்'' என்று விடைபெற்றுக் கிளம்ப முயன்றவனை மீண்டும் தடுத்த வரகுணன், ''தம்பி, அந்தப் பெண்ணிடம் எச்சரிக்கையாயிரு. அவள் அழகைப் பற்றிப் பாராட்டாதவர்கள் கிடையாதாம். அவளை ஒருமுறை பார்த்துவிட்டால் மயங்காதவர்கள் இல்லையாம்'' என்று எச்சரித்தார்.

பராந்தகன் லேசாக நகைத்தான். ''அண்ணா! அதைப்பற்றி இனி கவலை இல்லை. என் மனதை என் மனைவி ஏற்கெனவே கொள்ளை கொண்டு விட்டாள். அங்கு வேறு யாருக்கும் இடமில்லை'' என்று நகைப்பின் ஊடே கூறிவிட்டு, அந்த அறையிலிருந்து வெளியேறிய பராந்தகன் நேராக அரண்மனை குதிரைக் கொட்டடிக்குச் சென்று ''நண்பரே!'' என்று குரல் கொடுக்க, அவன் புரவி கனைத்து பதில் கொடுத்தது.

''வெளியே வாரும்'' என்று பராந்தகன் அழைக்க, அது கொட்டடியைவிட்டு வெளியே வந்து பராந்தகன் முகத்தைத் தனது முகத்தால் இடித்துத் தடவியது. இந்த விநோதத்தைப்

பலமுறை பார்த்திருந்ததால் அதைப்பற்றி எந்தவித வியப்
பையோ வேறு உணர்ச்சியையோ காட்டாத கொட்டடிக்
காவலன், அந்தப் புரவியின் சேணத்தையும் முதுகுத்தோலா
சனத்தையும் கொணரவே அவற்றைப் பராந்தகனே தனது
கைகளால் பொருத்தினான். பிறகு காவலனொருவனை விளித்து
''நீ சென்று எனது தோற்பைகள் இரண்டையும் எடுத்து வா''
என்று உத்தரவிட்டதும் காவலன் பறந்தான் அந்தப்புரத்துக்குள்.
சற்று நேரத்தில் இரு தோற்பைகளுடன் வர புரவியின்
முதுகுக்குக் குறுக்கே வாரைப் பொருத்தி பைகளை இருபுறமும்
தொங்கவிட்டு புரவி மீது ஏறினான்.

அவன் எண்ணத்தை அறிந்து புரவியும் ராஜநடை போட்டு
மதுரை மாநகரின் தெற்கு வாசலுக்கு வந்து அதைத் தாண்டி
யதும் சிறிது துரிதத்தைக் காட்டியது. அதன்மீது அமர்ந்த
பராந்தகன் தனக்கு அளிக்கப்பட்ட பணியை எண்ணி அதை
நிறைவேற்றும் முறைகளையும் நினைத்துப் பார்த்தான்.
எதற்கும் முதலில் தாமிரபரணி நதிக்கரையை அடைவது என்று
முடிவுசெய்து கொண்டவன் தூரத்திலிருந்த தோப்புக்குள்
தனது புரவியைச் செலுத்தி தனது பைகளில் ஒன்றிலிருந்த
சாதாரண உடையை எடுத்தான். தனது அரச உடையைக்
களைந்து சாதாரண வீரன் உடையை அணிந்து ராஜ உடையைப்
பையில் திணித்துவிட்டு மீண்டும் பயணப்பட்டான். அன்றிரவு
முழுவதும் பயணம் செய்த இளைய பாண்டியன் விடிய சிறிது
நேரமிருக்கையில் வழியிலிருந்த தோப்பு ஒன்றுக்குள் நுழைந்து
அங்கிருந்த குளத்தில் பல் துலக்கி முகம் கழுவி மிகுந்த
அயர்ச்சியால் அதன் கரையிலேயே படுத்தவன் உறங்க
முற்பட்டான்.

நேரம் போவது தெரியாமல் உறங்கிய பராந்தகன் கடைசி
யாகக் கண்விழித்தபோது பொழுது விடிந்து மூன்று நாழிகை
களாவது ஆகியிருக்க வேண்டுமென்று தீர்மானித்து எழுந்து
நின்று சுற்று முற்றும் நோக்கினான். அந்தப் பகுதியில் பயணம்

செய்தபோதெல்லாம் அவன் தங்கிய இடம்தான் அது
என்றாலும் அதை மீண்டும் மிக்க மகிழ்ச்சியுடனேயே
பார்த்தான்.

குளக்கரையைச் சுற்றி நெடுக வளர்ந்த மரங்களும்
நடுநடுவே மரநிழலில் வளர முடியாமல் சிறுத்து விட்ட
செடிகளும் காட்சியளித்தன. கரைக்கு உட்புறத்தில் நீரை ஒட்டி
முன்பிருந்த நிலத்தில் சில பூச்செடிகளும் வளர்ந்திருந்தன.
அந்தச் செடிகளின் புஷ்பங்கள் சில குளத்து நீரில் மிதந்து
தனக்கு முன்பே நீந்தத் தொடங்கிவிட்டதைக் கண்ட பராந்தகன்
புன்முறுவல் கொண்டான். பக்கத்திலிருந்த மரமொன்றிலிருந்து
பறந்து இறங்கிய மைனாக்கள் இரண்டு அவனைத் திரும்பித்
திரும்பிப் பார்த்த வண்ணம் நீர் இருக்குமிடம் போய் நீரை
அலகால் குடிக்க முயன்றன. எதிர்க்கரையிலிருந்த கொக்கு அந்த
மைனாக்களை தனது விரோதிகள் போல் முறைத்துப் பார்த்தது.

இயற்கை கொஞ்சிய இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துப்
பரவசப்பட்ட பராந்தகன், ''நண்பரே! வாரும் நீராடும்'' என்று
தனது புரவியை அழைத்து அதன் சேணங்களை நீக்கித்
தரையில் வைத்துவிட்டு குளத்து நீரை நோக்கி நடந்தான்.
அவனது திடகாத்திர புரவியும் அவனைத் தொடர, பாண்டிய
இளவரசன் அதை நீரில் இறக்கித் தேய்க்க முற்பட்டான். அவன்
புரவியைத் தேய்த்துக்கொண்டிருக்கையில் தோப்புக்குள்ளிருந்து
வெளிவந்த மற்றொரு புரவி வீரன் தனது புரவியிலிருந்து
குளக்கரையில் இறங்கி, ''டேய்! எனது புரவியையும் குளிப்
பாட்டுகிறாயா?'' என்று பராந்தகனை நோக்கி வினவினான்.

பார்ப்பதற்கு அவன் பரம முரடனாயிருந்தான். அவன்
கண்கள் கோவைக் கனிபோல் சிவந்து கிடந்தன. அவன்
தலைமயிர் முரட்டு மயிராக என்றுமே எண்ணெயைக்
காணாததுபோல் பரந்திருந்தது. மீசை மிகவும் கட்டையாகவும்
ஏதோ இரும்புக்கம்பிகளை நிற்கவைத்துக் கட்டிவிட்டது
போலும் காட்சியளித்தது. அவன் நெற்றி விசாலமானதாயிருந்தா

லும் மொத்தத்தில் அவன் முகம் அவன் பண்பற்றவனென்ப
தற்குச் சான்றாக விளங்கியது.

அந்த மனிதனும் பராந்தகனைக் கூர்ந்து நோக்கியதால் அவன் முகத்தில் ஏதோ குழப்பம் தெரிந்தது. ''டேய்! உன்னை முன்பு எங்காவது பார்த்திருக்கிறேனா?'' என்று வினவினான்.

பராந்தகன் இதழ்களில் ஏளனப் புன்முறுவல் அரும்பியது. ''பார்த்திருக்கலாம்'' என்றான்.

''எங்கு பார்த்திருப்பேன்?'' என்று அவன் கேட்டான்.

''கேட்க வேண்டியது என்னையல்ல'' என்றான் பராந்தகன்.

''வேறு யாரை?''

''வேறு எதை என்று கேள்!''

''எதை?''

''உன் மூளையை. அது இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் இந்த யோசனையைச் சொல்கிறேன்'' என்றான் பராந்தகன்.

அடுத்து அந்த மனிதன் புரவியிலிருந்து திடீரெனக் குதித்து பராந்தகனை நோக்கி வந்தான், சினம்துளிர்ந்த முகத்துடன். பராந்தகன் மீண்டும் புரவியைத் தேய்த்து விட முயன்ற சமயத்தில் புரவி திடீரென பராந்தகன் கைகளிலிருந்து தன்னை விடுத்துக்கொண்டு திரும்பி, வந்த மனிதன் மீது பாய்ந்து அவனை ஒரே முட்டாக முட்டித் தள்ளி அவன் மீது ஏறி தனது கால்களை அவன் மார்பு மீது புதைத்தது. வாயைத் திறந்து தனது பெரும் பற்களைக் காட்டி கனைத்து அவன் கழுத்து நோக்கிக் குனியவும் செய்தது.

அந்த மனிதன் அலறினான், ''டேய்! இந்தப் பிசாசைக் கூப்பிடு!'' என்று.

''நண்பரே!'' என்று குரல் கொடுத்தான் பராந்தகன் குளத்து நீரில் நின்ற வண்ணம்.

புரவி தலையைத் தூக்கி அவனைப் பார்த்தது. ''வேண்டாம்! விட்டுவிடு. இப்படி வா'' என்று அழைத்தான் பராந்தகன்.

புரவி அவன் உத்தரவுக்குப் பணிந்து மீண்டும் அவனிருந்த இடத்தை அடைந்தது. குளத்து நீரை வாரியடித்து அதைப் பராந்தகன் தட்டிக் கொடுக்க, புரவி கரை மீது பாய்ந்து சென்றது.

அதுவரை புரவி தள்ளிய இடத்தில் மல்லாந்து கிடந்த அந்தப் புதுமனிதன் தனது இடையிலிருந்த குறுவாளை எடுத்து பராந்தகன் புரவியை நோக்கிக் குறிவைத்தான். அதுதான் அவன் செய்த தவறு. பராந்தகன் புரவி மீண்டும் திரும்பி புதிதாக வந்தவன் புரவிக்கு அப்புறம் சென்று அதை முட்டவே அந்த முரட்டு மனிதனின் புரவி அவன் எறிந்த குறுவாளைத் தாங்கிக் கனைத்து அலறி தரையில் விழுந்து கால்களை உதைத்துக் கொண்டது.

அந்த முரடன் இதனால் வெகுண்டு மற்றொரு குறுவாளை எடுத்தான். ஆனால் வீசவில்லை. பராந்தகனின் கை அவன் கையை இரும்புப்பிடியாகப் பிடித்தது. ''எந்த மனிதனும் ஒரு முறை முட்டாளாகலாம். இரண்டாம் முறை ஆவது தவறு'' என்ற பராந்தகனை நோக்கிப் பெரிதாக நகைத்தான் அந்த முரடன். அதற்குக் காரணம் எதிர்க்கரையில் உருவாகிக் கொண்டிருந்தது. காரணம் மிகப் பயங்கரம்!

4. முல்லை

இரண்டாம் முறை தனது புரவிமீது குறுவாளெறிய முயன்ற முரடனின் கையைப் பிடித்ததும் அவன் திடீரென நகைத்ததன் காரணத்தை அறிய அவன் கண்கள் சென்ற திக்கில் தனது கண்களையும் செலுத்திய பராந்தகபாண்டியன், குளத்தின் எதிர்க்கரையில் இரு புரவி வீரர்கள் தன்னை நோக்கி இரு வேல்களைக் குறிவைத்துக் கொண்டிருந்ததையும் அதே

சமயத்தில் அவர்கள் இருவர் புரவிகளும் தனித்தனியே பக்கவாட்டுகளில் நகர்ந்திட, அவர்களுக்கு மத்தியில் வில்லையும் அம்புறாத் தூணியையும் அணிந்த ஒரு பெண் புரவியில் தோன்றியதையும் அவள் ஒரு அம்பை எடுத்து வில்லில் பொருத்தி நாணை இழுத்துத் தன் மீது குறிவைத்து, ''டேய்! உயிரின் மீது ஆசையிருந்தால் அவரை விட்டு எழுந்து விலகி நில்'' என்று அதட்டும் தோரணையில் உத்தரவு இட்டதையும் கண்டு வியப்பே அடைந்தான்.

அவள் உத்தரவைப் பராந்தகன் உடனே நிறைவேற்றாமல் அவளை உற்று நோக்கிச் சிலையானான். அந்தப் பெண் காட்டு வாசியைப் போல் காட்சியளித்தாலும் பருவத்தின் எழில்களெல்லாம் அவளிடம் ஒன்றுசேர்ந்து கவர்ச்சியை வாரிக்கொட்டி, பராந்தகன் கண்களைப் பலவித காந்தங்களெனக் கவர்ந்து நின்றன.

அவள் புரவியில் உட்கார்ந்ததால் வளைந்த புரவியின் வயிற்றைக் கவ்விய அவள் கால்களில் ஆடுசதை கெட்டியாகவும் நீண்டும் கணுக்கால்களுடன் இணைந்து உன்மத்தம் ஊட்டுவதாயிருந்ததென்றால், அவள் கணுக்கால்களில் அணிந்திருந்த இரு கெட்டியான வெள்ளிக்காப்புகள் அவள் கால்களின் உறுதிக்கும் மிதமிஞ்சிய அழகுக்கும் அத்தாட்சியாக நின்றன.

அந்தக் காப்புகளுக்குக் கீழே தெரிந்த பாதங்கள் இரண்டும் ஏதோ தந்தப்பட்டைகள் போலும், அவற்றிலிருந்து விரிந்த விரல்கள் தாமரை இதழ்கள் போலுமிருந்ததால், தந்தத்தில் தாமரை எப்படி முளைக்கும் என்று பராந்தகன் தன்னைக் கேட்டுக்கொண்டான்.

அடுத்து பாதங்களிலிருந்து முழங்கால்களின் மேற்பகுதிக்குத் தாவிய அவன் கண்கள், பருத்து உருண்ட தொடைகள் அவள் கட்டியிருந்த சிறு சல்லடத்துக்குள் அசைவதைப் பார்த்தால், 'அந்தத் தொடைகள் பெரியனவா? நீலவல்லியின்

தொடைகள் பெரியனவா?' என்று சித்தத்தில் எடைபோடத் தூண்டின. ஏதோ கோட்டைவாசலைப் பாதுகாக்க நிர்மாணிக்கப்பட்ட இரும்பு அரண்களைப்போல அந்தத் தொடைகள் காட்சியளித்ததைக் கண்ட பராந்தகன் காண முடியாத சொர்க்கத்துக்கு, காணப்படும் அந்த அரண்கள் தேவைதான் என்று நினைத்தான். அந்தத் தொடைகள் இணைந்த இடத்தைப் பார்க்க உறுதியற்ற பராந்தகன், அங்கிருந்து மேலே ஓடிய வயிற்றையும் சிறுத்திருந்தாலும் வளைவு கொடுத்தாலும் உறுதியைத் தளரவிடாத இடையையும் அதற்கு மேலே கண்ணைக் குத்திய இரு மொட்டுகளையும் கவனித்தான். அந்த மொட்டுக்கள் சற்று அளவுக்கதிகமாகப் பருத்திருந்த காரணத்தினாலேயே கவர்ச்சியையும் அழைப்பையும் அதிகப்படுத்துவதையும் உணர்ந்தான் பாண்டிய இளவல்.

அவற்றுக்கும் மேலே சங்குக்கழுத்து, புஷ்டியான கன்னங்களும் அழகிய நுதலும் அளவுடன் அமைந்து அழகின் சின்னங்களாக விளங்கின.

அவள் தலைக்குழல் மட்டும் சிறிது முரட்டுத்தனமாகச் சுருண்டு கிடந்தாலும் அந்த முரட்டுத்தனத்திலும் ஒரு கவர்ச்சி இருந்தது. அவள் முகத்தில் பதிந்து கிடந்த கண்கள், அவற்றில் அழகுடன் குரூரம் அதிகமாகக் கலந்திருந்ததால் அழகு சிறிது குறைந்தே தெரிந்தது. செவ்விய பருத்த இதழ்கள் ஆண்மகன் கவ்வவே ஏற்பட்டனபோல் தோன்றினாலும் அவற்றைக் கவ்வுவதில் சுகத்தைவிட அபாயம் அதிகமென்பதை அவை மடிந்த விதமும் அவற்றில் தெரிந்த கடினமும் சந்தேகத்துக்கு இடமின்றிப் பறைசாற்றின.

இப்படி அவளை அணுஅணுவாக ஆராய்ந்த பராந்தகன், அவள் ஆணைப்படி மெதுவாக எழுந்து நின்றான். அவள் வில்லின் நாண் இழுக்கப்பட்டிருந்தாலும் அந்த நாணும் அதில் தொடுக்கப்பட்ட அம்பும் அவள் மார்பு ஒன்றில் உரசிக் கிடந்த

தாலும் பராந்தகன் 'அவற்றின் வாய்ப்பு தனக்கு இல்லையே என்று முகத்தில் சிறிது வருத்தத்தைப் படரவிட்டுக் கொண்டான்.

அவன் தன்னை அணுஅணுவாக ஆராய்ந்ததையும் ஆராய்ச்சியின் விளைவாக அவ்வப்பொழுது மாறிய அவன் முகபாவங்களையும் அந்தப் பெண் கவனிக்கத் தவறவில்லை. அதனால் அவள் மனத்திலும் சிறிது சலனம் ஏற்பட்டிருந்தாலும் அதை அவள் கண்கள் காட்டிக்கொடுக்கவில்லை. நிதானமாக இருந்த கண்களை சிறிதும் அசைக்காமலே அவனை அவள் வினவினாள். ''டேய்! எதற்காக அவர் புரவியைக் கொன்றாய்?'' என்று.

பராந்தகன் முகத்தில் வருத்தத்தைக் காட்டி, ''பெண்ணே! இது அபாண்டம்'' என்று சொன்னான்.

அவன் 'பெண்ணே' என்று அழைத்ததை அவள் ரசிக்க வில்லை. ''நான் என்ன உனக்குப் பெண்ணா?'' என்று வினவினாள் அவள் சினத்துடன்.

''இல்லை'' பழைய வருத்தத்துடனேயே பதில் சொன்னான் பராந்தகன்.

''பின் ஏன் அப்படி அழைத்தாய்?'' அவள் கேள்வியில் சினம் பழையபடி ஒலித்தது.

பராந்தகன் முகத்திலிருந்த போலி வருத்தத்தின் சாயை அதிகமாயிற்று. ''வேறுவிதமாக அழைக்கத் துணிவில்லாத தால்'' என்றான் பாண்டியன்.

இதைக் கேட்ட அவள் தனது புரவியைக் காலால் உதைத்து குளக்கரையைச் சுற்றி நடக்கவிட்டு அவனிருக்குமிடம் வந்தாள். வில்லின் நாணைத் தளர்த்தி அம்பையும் எடுத்து தோளில் தெரிந்த தூணியில் போட்டாள். புரவி மீது இரு கைகளையும் வைத்துக்கொண்டு அவனை நோக்கிக் குனிந்து,

''அந்தப் புரவியை ஏன் கொன்றாய்?'' என்று மீண்டும் பழைய கேள்வியைத் தொடுத்தாள்.

''புரவி இறக்கவில்லை. குறுவாள் காலில்தான் பாய்ந்திருக் கிறது'' என்றான் பராந்தகன்.

''குறுவாளை ஏன் எரிந்தாய்?'' அவள் கேள்வி மின்ன லெனத் தொடர்ந்தது.

''நான் எறியவில்லை!'' பராந்தகன் பதிலில் அமைதி இருந்தது.

''வேறு யார் எறிந்தது?'' என்று அவள் கேட்டாள் வியப்புடன்.

''இவர்தான்'' என்று அப்பொழுதும் எழுந்திராமல் கீழே கிடந்த முரடனைச் சுட்டிக்காட்டினான் பராந்தகன்.

''இவர் புரவியை இவரே கொல்ல முயல்வாரா?''

''விந்தைதான். ஆனால், நடந்தது அதுதான்!'' என்று பராந்தகன் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே அந்த மனிதன் ''பொய் பொய்!'' என்று கீழே கிடந்தபடியே கத்தினான்.

''சரி சரி! எழுந்திருங்கள்'' என்று அவள் அதட்ட, அந்த முரடன் எழுந்தான்.

''நடந்தது என்ன?'' என்று அதிகாரத்துடன் கேட்டாள் அந்தப் பெண்.

''நான் குறிவைத்தது இவன் புரவியை நோக்கித்தான். ஆனால், அது என் புரவி பின்னால் சட்டென்று ஒளிந்து கொண்டது. அதனால்தான் குறிவைத்த வாள் என் புரவியின் காலில் பாய்ந்துவிட்டது'' என்று அதுவும் பராந்தகன் செய்த குற்றம்போல் பேசினான் அந்த முரடன்.

இதைக் கேட்டதும் அந்தப் பெண்ணின் முகத்தில் கோபம் அதிகமாகப் படர்ந்தது. '' என்ன உளறுகிறீர்கள்? புரவியாவது ஒளிந்துகொள்வதாவது!'' என்று சீறினாள் அவள்.

''முற்றும் உண்மை. இவனையே கேட்டுப் பார்'' என்றாள் முரடன்.

''அவர் சொல்வதில் தவறில்லை. பெண்... இல்லை இல்லை... தேவி'' என்றான் பராந்தகன்.

''புரவி பாய்ச்சல் காட்டுமா?''

''காட்டும்.''

''புதிதாகயிருக்கிறது.''

''புதிது ஏதுமில்லை. எதுவும் நாம் பழக்குவதிலிருக்கிறது...''

''எதுவும் என்றால் வேறு எது?''

''பெண்ணும் புரவியும் நாம் பழக்குவதிலும் பதப்படுத்து வதிலும் இருக்கிறது. இப்படிச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும்'' என்ற பராந்தகனை நோக்கிய அந்தப் பெண் சிறிது முறுவல் கொண்டாள். ''நீ மிகவும் துணிவுள்ளவன்'' என்றும் சொன்னாள் முறுவலின் ஊடே.

''தவறு தேவி! தங்களைப் பார்த்த உடனேயே என் துணிவெல்லாம் பறந்துவிட்டது'' என்றான் பராந்தகன்.

''பொய். துணிவு உன் இரத்தத்தில் இருக்கிறது. உன்னைப் பார்த்தாலே தெரிகிறது. சரி நீ வா, என் தளத்தில் உன்னை விசாரிக்கிறேன்'' என்ற அந்தப் பெண், ''உன் புரவியில் ஏறிக்கொள்'' என்றாள்.

அதற்குப் பின் தாமதம் செய்யவில்லை பராந்தகன். கீழேயிருந்த வாளை எடுத்து கச்சையில் கட்டிக்கொண்டான். ''நண்பரே! வாரும்'' என்று அழைத்தான். அவன் புரவி அவனை நோக்கி ஓடி வரவே, அதன் இருபுறத்திலும் பைகளைத் தொங்கவிட்டு தானும் ஏறிக் கொண்டான்.

அவள் தனது புரவியை நகர்த்தி தனது வீரர்களையும் பராந்தகனையும் தொடர்ந்து வர சைகை காட்டினாள். தன்னந்தனியே நின்ற முரடனை அவள் கவனிக்கவே இல்லை.

''என்னைவிட்டுப் போகாதே. எனக்குப் புரவியில்லையே, எப்படி வருவேன்?'' என்று கூவினான்.

அவள் தனது வீரனொருவனை விளித்து, ''அவர் புரவிக்குச் சிகிச்சை செய்து அவரையும் அழைத்து வா'' என்று ஆணையிட, அந்த வீரன் புரவியைத் திருப்பிக்கொண்டு முரடனை நோக்கிச் சென்றான்.

அடுத்து பராந்தகன் தனது புரவியை அவள் புரவிக்குப் பக்கத்திலேயே செலுத்தினான். பக்கவாட்டில் சிறிது கண்ணைத் திருப்பி அவன் வாளிப்பான சரீரத்தைப் பார்த்த அந்தப் பெண், லேசாகப் பெருமூச்செறிந்தாள். அத்துடன் சொன்னாள்: ''புரவியை நன்றாகப் பழக்கியிருக்கிறீர்கள்''என்று.

''ஆம்'' பராந்தகன் பதில் சர்வசாதாரணமாயிருந்தது.

''பெண்ணையும் பழக்க முடியும் என்று சொன்னீர்களே?'' என்று அவள் வினவினாள்.

''ஆம். உன்னையும் ஒரு நாள் உன் மனத்துக்குப் பிடித்த ஆடவன் ஒருவன் மணப்பான். அவன் உன்னைப் பழக்குவான்'' என்றான் பராந்தகன்.

அவள் முகம் திடீரென்று கல்லாகிவிட்டது. ''அது நடவாது வீரரே! எனக்குத் திருமணம் கிடையாது'' என்றாள் வறண்ட குரலில்.

''ஏன்?'' பராந்தகன் குரலில் கனிவு இருந்தது. வருத்தமும் தெரிந்தது.

''ஒரு கொலைகாரனைப் பழிவாங்க நான் வாழ்கிறேன். திருமணம் செய்து கொள்வதில்லை என சபதம் செய்திருக் கிறேன்'' என்றாள் அவள்.

பராந்தகன் சில விநாடிகள் மௌனமாகப் பயணம் செய்தான். ''அது சரியல்ல முல்லை'' என்று சொன்னான் கடைசியில்.

இதைக் கேட்ட அவள் சரீரம் சரேலென நிமிர்ந்து விறைத்தது. ''என்ன சொன்னாய்?'' என்று சினந்து கூறி சீற்றம் மிகுந்த கண்களை அவன் மீது திடீரெனத் திருப்பினாள் அவள்.

5. அவன் கேட்ட பரிசு

''முல்லை!'' என்று பராந்தகன் அழைத்தவுடனேயே முகத்தில் பெரும் சினம் துளிர்க்க, அது கண்களிலும் கூடர்விட சரேலெனத் திரும்பிப் பார்த்து அதுவரை கையாண்ட மரியாதைச் சொற்களைக் கைவிட்டு, ''என்ன சொன்னாய்?'' என்று பழையபடி ஏகவசனத்தில் விசாரித்த அவளை ஏதுமறியாத குழந்தைபோல் திரும்பிப்பார்த்து அவள் கண்களை தைரியமாக சந்தித்தான் பாண்டிய இளவல். ''தகாத எதையும் சொல்லிவிட வில்லையே'' என்ற பதிலும் சொன்னான்.

அவன் முகத்திலிருந்த போலி பயமும் வியப்பும் அவளை ஏமாற்றியதாகத் தெரியவில்லை. ''முல்லை என்று பெயர் சொல்லி அழைத்தாய் என்னை'' என்றாள் அவள் புரவி நடந்ததால் அழகுடன் அசைந்த உடலுடன்.

புரவியின் நடையில் அவள் இடை அசைந்ததையும் உட்கார்ந்தபின்னும் அதிகமாகப் பக்கவாட்டில் படாமல் திண்மையாகவே காட்சியளித்த பின்னெழில்களையும் முன்னே விறைத்து அவன் கண்களைக் குத்தி விடுவதுபோல் தெரிந்த மார்பக எழுச்சிகள் இரண்டையும் அந்த எழுச்சிகள் புரவியின் நடையில் லேசாகத் துள்ளியதையும் திரும்பிய கழுத்துக்கும் மேல் புஷ்டியுடன் தெரிந்த மாம்பழக்கன்னங் களின் மென்மையான அசைவையும் சிவந்த உதடுகளின் கோபத்துடிப்பையும் கவனித்து அவற்றின் அழகில் ஆழ்ந்து விட்ட பாண்டியன் அவளுக்குப் பதில் சொல்லும் வலுவை அடியோடு இழந்துவிட்டதால் மௌனமே சாதித்தான்.

அதனால் மேலும் சினம் அடைந்த அவள், ''நான் சொன்னது காதில் விழவில்லையா?'' என்று சொற்களிலும் சீற்றம் ஊடுருவக் கேட்டாள்.

''இல்லை'' என்று பொய் சொன்னான் பராந்தகன்.

''என் பெயர் முல்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று இம்முறை கேள்வியாகவே தொடுத்தாள் முல்லை.

''தெரியாது.'' பாண்டிய இளவல் அடக்கத்தைக் காட்டினான்.

''என்ன தெரியாது?'' அவள் குரலில் அதிகாரம் பலமாகத் தெரிந்தது.

''தங்கள் பெயர் முல்லை என்பது'' என்று பாண்டியன் மேலும் பணிவைக் காட்டினான்.

''தெரியாதா?''

''சத்தியமாகத் தெரியாது''

''ஊகித்தாயா?''

''ஊகத்துக்குத் தேவையில்லை ல.''

''என்னதான் சொல்கிறாய் நீ?'' என்று குழப்பத்துடன் கேட்டாள் முல்லை.

பாண்டியன் தலையைக் குனிந்தவண்ணம் புரவியை நடத்தியபடியே பேசத்தொடங்கி, ''நீங்கள் குளத்துக்கு அக்கரையிலிருந்து அதட்டினீர்களல்லவா?'' என்றான்.

''ஆம். அதட்டினேன். அதனாலென்ன?'' என்று அவன் வினவினாள்.

''அப்பொழுது உங்கள் பல்வரிசை தெரிந்தது. முல்லை வரிசையைப் போலிருந்தது. அதையே நினைத்துக் கொண்டிருந் தேன். கூப்பிடும்போது அப்படியே கூப்பிட்டுவிட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்றான் பராந்தகன்.

"எதற்காக மன்னிப்புக் கேட்கிறாய்?" என்று அவள் வினவினாள். இம்முறை குரலில் சினம் குறைந்திருந்தது.

"உங்கள் பற்களை முல்லைக்கு ஒப்பிட்டதற்கு" என்றாள் பாண்டியன்.

"அதில் என்ன தவறு?"

"உங்கள் பற்களின் அழகு முல்லைக்கு இல்லை!" என்ற பராந்தகன் குரலில் வருத்தமிருந்தது.

முல்லை மீண்டும் அவனை நோக்கி நன்றாகத் திரும்பி நடுவில் ஏற்பட்ட மரியாதையைக் கைவிட்டு, "டேய்" என்று அழைத்தாள்.

"தேவி."

"நீ ஒன்று பெரிய கவியாயிருக்க வேண்டும். அல்லது பெரிய அயோக்கியனாயிருக்க வேண்டும்."

"இரண்டும் சேர்ந்திருப்பதும் உண்டு. கவிகளின் சுபாவமே பெண்களை வர்ணிப்பதுதான். அப்படி வர்ணித்து வர்ணித்து பெண்களை..."

"உம்?"

"இணங்க வைத்த கவிகளும் உண்டு...!"

இதைக் கேட்டதும் அவள் கோபம் தலைக்கேறி முகத்தை சிவக்க அடித்ததால், அவள் நேராக சாலையை நோக்கித் திரும்பி புரவியின் வயிற்றில் காலால் உதைத்து அதை ஓடவிட்டாள். பராந்தகன் புரவியை லேசாகத் தட்டிக் கொடுத்தான். அதற்கு மேல் தூண்டுதல் வேண்டாத அவன் புரவி, அவள் புரவியைப் பின்பற்றிச் சென்று மீண்டும் அவள் புரவிக்குப் பக்கத்தில் வந்துவிட்டது.

அவள் புரவி துரிதமாக ஓட முற்பட்டதையும் பழையபடி தனது புரவியின் பக்கத்தில் வந்துவிட்டதையும் முல்லை உணர்ந்து கொண்டாள். அதன் குளம்பொலிகளைக் கொண்டே

திடீரென்று தன் புரவிமீது அது உராய்ந்ததையும் அதன் விளைவாகத் தன் உடல் பாண்டியன் உடல்மீது உராய்ந்ததையும் கவனித்ததால் கோபம் கொள்ளப் பார்த்தாளானாலும் அது முடியவில்லையென்பதை உணர்ந்தாள்.

அவன் இரும்பு சரீரம் சட்டென்று உராய்ந்ததால் தனது சரீரத்தில் இதுவரை காணாத ஏதோ உணர்ச்சி ஊடுருவிச் செல்வதையும் அவன் இன்னொரு முறை இடிக்கமாட்டானா என்ற எதிர்பார்ப்பு மனத்துள் தோன்றுவதையும் உணர்ந்த முல்லை தன்னிடம் கோபமே கொண்டாள்.

சமீப காலச் சண்டைகளில் எத்தனையோ ஆடவர்கள் உடல்கள் அவள் மீது பட்டிருந்தும் வெறும் மிருகப்பிராயமாக அவர்களைக் கொல்வதைத் தவிர வேறு எந்த உணர்ச்சிக்கும் ஆட்படாத முல்லைக்கு, பராந்தகன் உடலின் மோதல் ஏதோ பெரும் புதுமையாகத் தெரிந்தது. லேசாகப்பட்ட அவன் உடல் தனது உடலில் பாய்ச்சிய உணர்ச்சிகள் அதுவரை காணாத பரவசத்தைத் தனக்கு அளிப்பதை உணர்ந்ததாலும் சிறிது வெட்கமும் உடம்பில் ஊறியதாலும் 'இதற்கு என்ன காரணம்?' என்று சிந்தித்து விடை காணாது தவித்த சமயத்தில் மற்றோர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. பராந்தகன் புரவி அவள் புரவிமீது திடீரென்று மிக வேகமாகி மோதவே, சட்டென்று சாய இருந்த அவள் உடலைப் பராந்தகனின் வலதுகை வளைத்துப் பிடித்துக்கொண்டது. அவள் கண்கள் எதிரே தெரிந்த குத்துக் கல்லை நோக்கி, "நண்பரே! இந்தக் கல்லுக்கா பயந்து விட்டீர்கள்?" என்று வினவினான்.

அந்தக் கேள்வியை வீசிக் கொண்டே அவளை வளைத்த அவனது வலதுகை அவளது இடையைச் சுற்றிவந்து அவள் புரவிச் சேணத்தையும் இழுத்து அதையும் தேக்க வைத்தது. "மன்னிக்க வேண்டும். நண்பன் சுத்தப் பயங்கொள்ளியாகி விட்டான்" என்றும் சொன்னான், அவளைச் சுற்றிய கையை எடுக்காமலேயே.

தனது இடையை வளைத்த அந்த ஆடவன் கையை முல்லையும் எடுக்க முயலவில்லை. அந்த இரும்புக்கையின் அழுத்தம் அவள் மலர் இடைக்கு வேண்டியே இருந்தது. ஆகவே அவள் பேச்சு கொடுக்க முற்பட்டு, ''நண்பரா! அது யார்?'' என்று வினவினாள்.

''இவர்தான்'' என்று புரவியை இடதுகையிலிருந்த கடிவாளக் கயிற்றால் தட்டிக் காட்டினான் பராந்தகன்.

''இந்தப் புரவியா!'' என்று வியப்புடன் வினவினாள் முல்லை.

''ஆம்'' என்றான் பராந்தகன்.

''ஆம்... ஆம். மறந்துவிட்டேன். புரவியைத்தான் நீங்கள் பழக்கியிருப்பதாகச் சொன்னீர்களே. அத்துடன்...'' என்ற அவள் வாசகத்தை முடிக்காமல் விட்டாள். அவள் முகம் குங்குமமாகச் சிவந்தது.

''பெண்ணையும் பழக்கலாம் என்று சொன்னேனே, அதைச் சொல்கிறீர்களா?'' என்று விளைய பராந்தகன், ''அதை மறந்து விடுங்கள். வேடிக்கையாகச் சொன்ன வார்த்தை'' என்று சப்பைக் கட்டுக் கட்டினான்.

முல்லை முகத்தைக் குனிந்தவண்ணம் வினவினாள். ''என்னிடம்தானே சொன்னீர்கள் அப்படி?'' என்று.

''ஆம்'' என்றான் பராந்தகன்.

''அப்படியானால் என்னிடம் வேடிக்கையாகப் பேச உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?'' அவள் குரலில் ஒலித்தது சீற்றமா, சிரிப்பா என்பது புரியவில்லை.

அதனால் பராந்தகன், ''உலகத்தில் சில விஷயங்களுக்கு யாரும் அதிகாரம் கொடுக்கத் தேவையில்லை. இயற்கை அதிகாரம் கொடுக்கிறது'' என்று கூறினான் அவன்.

அப்பொழுது அவன் கை தன் இடையை வளைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்த முல்லை சரேலென்று திரும்பி பின்னாலிருந்த தனது வீரர்களை கவனித்தாள். பார்வை திரும்பியதும் அவர்கள் வானத்தையும் சாலைக்கு அக்கம்பக்கத் திலிருந்த காடுகளையும் அழகு பார்ப்பதை கவனித்த முல்லை சிறிது சங்கடமே அடைந்து, ''கையை எடுங்கள்'' என்றாள் பராந்தகனை நோக்கி.

''எந்தக் கையை?'' என்று ஏதுமறியாதது போல் கேட்டான் பராந்தகன்.

''இந்த வலதுகையை!'' என்று தன்னைச் சுற்றி வந்த சேணத்தைப் பிடித்திருந்த அவன் கையைத் தனது வலது கையால் தட்டிக் காட்டினாள் முல்லை.

''ஓகோ! மறந்துவிட்டேன். நீங்கள் உங்கள் புரவியின் சேணத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி அவள் நீட்டிய வலதுகையில் சேணத்தைத் திணித்தான். சேணத்தைக் கொடுத்த பின்பும் கையை விடவில்லை அந்த அயோக்கியன். மெல்ல அவள் விரல்களைத் தனது விரல்களுடன் இணைத்து, ''எசமானி! சற்று இருங்கள். கையை விடுவித்துக் கொள் கிறேன்'' என்று கூறி அந்தப் பணியை நிறைவேற்றுவதைப் போல் அவள் விரல்களை லேசாக நெரிக்கவும் செய்தான்.

அப்படி நெரித்த விரல்கள் மீண்டதும் புரவியை லேசாக நகர்த்தினாள் முல்லை. நீண்ட நேரம் அவள் பேசவேயில்லை. அவள் உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்து உருவாகிக் கொண்டிருந்தன. ஏதோதோ உணர்ச்சிகள் வேகமாகப் பிரவாகித் துக் கொண்டிருந்தன. அவள் தேகமே தணலாகக் கொதிப்பதாக அவளுக்குத் தோன்றியது. இவன் யார், எங்கிருந்து வந்தான் என்பதைக்கூட தான் அதுவரை விசாரிக்காததை நினைத்த முல்லை தனது அஜாக்கிரதையை நினைத்து வியந்தாள். 'இத்தனை நாளாக எனக்கு இருந்த எனது எச்சரிக்கை எங்கே

போயிற்று?' என்று தன்னைத்தானே வினவிக்கொண்டு தன் மீது சீற்றமும் கொண்டாள். அந்தத் தவறைத் திருத்திக்கொள்ள சடுதியிலென தனது மௌனத்தை உடைத்து, ''உங்கள் பெயரை நீங்கள் சொல்லவில்லையே'' என்று வினவினாள் அவள்.

''நீங்கள் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை'' என்றான் பராந்தகன்.

''இப்போது கேட்கிறேன்'' என்றாள் முல்லை.

''வீரன்'' என்று அவன் பதில் சொன்னான்.

''வீரன் என்று உங்களைப் பார்த்தாலே தெரிகிறது. பெயர் என்ன?''

''பெயரே அதுதான். இன்னொரு பெயரும் உண்டு.''

''அந்தப் பெயர்?''

''நாராயணன்.''

இதைக் கேட்டதும் அதுவரை வெட்கிச் சிவந்திருந்த அவள் வதனம் இன்னும் சிவந்தது சினத்தால். ''உங்கள் இரண்டு பெயர்களையும் சேர்த்தால் என் எதிரியின் பெயர். அவனை நானே கொல்லத் தீர்மானித்திருக்கிறேன்'' என்றாள் முல்லை.

''இரண்டு பெயர் சேர்த்து ஒரு பெயரா?'' என்று பாண்டியன் வினவினான்.

''ஆம். வீரநாராயணன். பாண்டிய இளவரசன் பராந்தக பாண்டியனின் பெயர்'' என்ற முல்லையின் உதடுகள் துடித்தன.

''ஆம். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரைக் கொல்லவா சபதம் செய்திருக்கிறீர்களா?'' என்று வினவினான் பாண்டியன். ''ஆம், அவன் என் குலத்துரோகி. அவனை மெல்ல மெல்ல கழுத்தைப் பிடித்து சித்ரவதை செய்து கொல்ல சபதம் செய்திருக்கிறேன்'' என்று முல்லை சொன்னாள். அவள் முகத்தில் கொலையின் சாயல் நன்றாகத் தெரிந்தது.

பராந்தகன் பதில் சொல்லவில்லை சில விநாடிகள். ''அவனைப் பிடிப்பது கஷ்டமாயிற்றே'' என்றாள் மெதுவாக.

''ஆம்'' என்று ஒப்புக்கொண்டாள் முல்லை.

''ஆம். வேறு யாராவது உங்களிடம் பிடித்துக் கொடுத்தால் பரிசு உண்டா?''

''உண்டு.''

''என்ன பரிசு?''

''எது வேண்டுமானாலும்.''

''வேண்டும் எதையும் கொடுப்பாயா முல்லை?'' என்று மெதுவாகக் கேட்டான் பராந்தகன்.

''கொடுப்பேன்'' என்றாள் அவள்.

''இன்னும் ஒரே மாதத்தில் நான் பிடித்துக் கொடுக்கிறேன். என்ன தருவாய்?''

''எது வேண்டும்? கேள்.''

அவன் கேட்டான் மெல்ல. அவள் திகைத்தாள், சீறினாள். அவனை அடிக்க புரவிச் சாட்டையையும் ஓங்கினாள்.

6. காதில் ஒரு ரகசியம்

பராந்தகபாண்டியனை ஒரே மாதத்தில் பிடித்துக் கொடுப்பதாகச் சொல்லி அதற்கான பரிசையும் அவன் கேட்டதும் கண்கள் சீற, உதடுகள் துடிக்க, அவனை அடிக்க முல்லை சாட்டையை ஓங்கினாளென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. பாண்டிய இளவல் பரிசை இன்னதென்று குறிப்பிடு முன்பாகத் தன்னை முல்லை என்று பெயர் கொண்டு அழைத்ததையும் அப்பொழுது அவன் குரலில் இருந்த குழைவையும் கவனித்த அந்தப் புரட்சிக்காரியின் இதயத்தில் எழுந்த சந்தேகத்தை அவன் கேள்வி நிரூபித்ததால், அவள் மிதமிஞ்சிய சினத்துக்கு

உள்ளானாள். "எனக்கு வேண்டிய பரிசு நீ" என்று பாண்டிய
இளவல் முடித்ததும் கண்ணிமைக்கும் நேரம் திகைத்த
முல்லை, அடுத்த விநாடி சாட்டையை எடுத்துவிட்டாளானா
லும் அந்தச் சாட்டை, பக்கத்தில் புரவியில் வந்த அயோக்கியன்
மீது இறங்காததைக் கவனித்தாள்.

அவள் மூர்க்கத்தனத்தில் எந்தச் செய்கையிலும் ஈடுபடுவாள்
என்று எதிர்பார்த்த பராந்தகன் சாட்டையுடன் எழுந்த அவள்
கையை தனது வலதுகையால் பிடித்து நிறுத்தினான். இடது
கையிலிருந்த அவன் புரவிச் சேணத்தை அதன் முதுகிலே
போட்டு இடதுகையால் அவள் சாட்டையையும் பிடுங்கி தூர
எறிந்துவிட்டான். அவள் அவன் கையிலிருந்து விடுபடத்
திமிறினாள். ஆனால், அந்த இரும்புப்பிடியிலிருந்து தான் தப்ப
முடியாததைப் புரிந்துகொண்டதும், "விடு கையை" என்று
சீறவே செய்தாள்.

அவன் பதிலேதும் சொல்லாமல் அவள் கைகளை விடு
வித்துத் தனது புரவியின் சேணத்தை மீண்டும் இடது
கையிலேந்தி ஏதும் நடக்காதது போல் புரவியை நடத்தினான்.
முல்லை ருத்திராகாரமான கோபத்திலிருந்தாள். எத்தனையோ
வீரர்களை அதே சாட்டையால் தண்டித்திருக்கும் தனது முயற்சி
முதன்முதலாகப் பயனற்றுப் போய்விட்டதை நினைத்துப்
பொருமினாள். அந்தப் பொருமலின் விளைவாகப் பெருமூச்சும்
விட்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு. "வீரா!" என்று அவனை
அழைத்தாள்.

"என்ன முல்லை?" என்று அவன் மீண்டும் சொந்தம்
கொண்டாடினான்.

"என்னை மீண்டும் பெயர் கொண்டா அழைக்கிறாய்?"
அவள் உதடுகள் துடித்தன.

பராந்தகன் அவளைத் திரும்பியும் பாராமல் புரவியை
நடத்தியவண்ணமே வினவினான், "வேறு எப்படி
அழைப்பது?" என்று

"எசமானி என்று அழைக்கலாம்" என்று சுட்டிக்காட்டி
அலட்சியமாகத் தலையை ஒருமுறை அசைத்தாள்.

"சரி, எசமானி!" பணிவுடன் அழைத்தான் பாண்டியன்.

அவள் தொடர்ந்தாள். "தேவி என்றும் அழைக்கலாம்."

"சரி, தேவி!" அதிகப் பணிவைக் காட்டினான் பாண்டியன்.

"தலைவி என்றும் அழைக்கலாம்" என்றாள் வேண்டு
மென்றே அவனைக் குத்தும் நோக்கத்துடன்.

இதுவரை அவள் சொல்லியபடி கேட்டு வந்த பாண்டியன்
இம்முறை பேசவில்லை. "என்ன யோசிக்கிறாய்?" என்று
சீறினாள் முல்லை.

"யோசிக்கவில்லை."

"அப்படியானால் ஏன் பதில் சொல்லவில்லை?"

"சில சங்கடங்கள் இருக்கின்றன."

"என்ன சங்கடங்கள்?"

"இலக்கிய சங்கடங்கள்."

"இலக்கிய சங்கடங்களா? என்ன உளறுகிறாய்?"

"உளறல் ஏதுமில்லை. தலைவியிருந்தால் இலக்கியத்தில்
தலைவன் வேண்டும்" என்று மெதுவாகச் சொன்ன
பாண்டியன், "காப்பியங்களில் இப்படித்தானிருக்கிறது"
என்றான்.

"காப்பியம் எழுதுகிறாயா?" என்று அவள் கேட்டு
நகைத்தாள்.

"நாம் எழுத அவசியமில்லை. அதற்குக் கவிகள் இருக்
கிறார்கள்" என்றான் பராந்தகன் மெதுவாக.

"நாம் என்றால்?"

"நாம் இருவரும்..."

"நாம் இருவரும்..."

"காப்பியத்தை நிகழ்த்துகிறோம். உதாரணமாக... கோபப் படாதே... நீ தலைவி, நான் தலைவன் என்று வைத்துக் கொண்டால், நமது அனுபவங்கள் காப்பியத்தின் கருவூலங்கள் அவற்றை வைத்து கவி காப்பியம் சிருஷ்டிப்பார். உதாரண மாக..." என்று மேலும் ஏதோ சொல்லப் போன பராந்தகனை "டேய்!" என்று அதட்டினாள் முல்லை.

"என்ன தேவி?" பாண்டியன் பயத்தைக் காட்டினான் சொற்களில்.

"இன்னொரு முறை உதாரணம் காட்டினாய், உன் பல்லை உடைத்துப் போடுவேன்" என்று கடிந்தாள் முல்லை.

"காப்பியத்தில் இலக்கணப் பிசகு வருகிறது. பல்லை என்று சொல்லக்கூடாது. பற்களை என்பது பன்மை. எனக்கு ஒரு பல்லா இருக்கிறது?" என்று இலக்கண அறிவை பாண்டியன் காட்டினான்.

இம்முறை முல்லை நகைத்தாள் பெரிதாக. "வீரா! உனக்கு நகைச்சுவை இருக்கிறது" என்று பாராட்டினாள்.

அவள் வேகம் மெதுவாகக் குறைவதை உணர்ந்த பாண்டிய இளவல், "எசமானி! எனக்கு இன்னும் பல கலைகள் வரும்" என்றான்.

"என்ன சுவைகளோ அவை?" என்று கேட்டாள் முல்லை.

"சுவைகள் ஆறுவகை உண்டு. இப்பொழுது அவற்றில் நகைச்சுவையை மட்டும் காட்டியிருக்கிறேன். சற்று ஓய்வு கிடைக்கும்போது மற்ற சுவைகளையும் விளக்குகிறேன்" என்றான் பராந்தகன்.

அவன் எந்தச் சுவைகளைக் குறிப்பிடுகிறானென்பது முல்லைக்குப் புரிந்தே இருந்தாலும் அவன் பெரிய அயோக்கிய னென்ற உணர்வும் அவளுக்கு ஏற்பட்டு விட்டதாலும் அவள் மேற்கொண்டு ஏதும் பேசாமலே பயணம் செய்தாள்.

பாண்டிய இளவலும் பேசவில்லை. தான் சொன்னதன் பொருளை அவள் உணர்ந்து கொண்டு விட்டாளென்ற நினைப்பில் ஆனால் அந்தப் பெண்ணின் சிந்தனையைக் கிளறிவிட்டதைப் பற்றி உள்ளூர உவகை கொண்டான். இப்படி அவர்கள் மௌனமாகச் சென்றபோது பின்னால் வந்த இரு வீரர்களும் அவள் உரையாடலையும் சவுக்கடி சம்பவங் களையும் கவனித்தாலும் கவனிக்காதது போலவே நடந்து கொண்டதைக் கவனித்த பராந்தகன், அவள் தனது வீரர்களை சரியான கட்டுத்திட்டத்தில் வைத்திருப்பதை உணர்ந்தான். அப்படி நல்ல கட்டுத்திட்டமுடைய படையை அவள் திரட்டி இருந்ததால் அது செய்யக்கூடிய புரட்சியை, புரட்சியால் ஏற்படக்கூடிய நாசத்தைத் தவிர்ப்பது பெரும் கஷ்டமான பணி என்பதையும் புரிந்துகொண்டதால் சிறிது கவலையுடனேயே பயணம் செய்தான்.

இப்படிப் பயணம் செய்த பாண்டியன் சரியாக நடுப்பகலில் ஓர் அடர்ந்த காட்டில் அவள் இறங்கி ஒரு மரத்தடியில் உட்கார்ந்ததும் தன்னையும் இறங்கும்படி சைகை காட்டியதால், அவனும் இறங்கி அவளுக்குச் சிறிது தூரத்திலிருந்த மற்றொரு மரத்தடியில் உட்கார்ந்து மரத்தில் சாய்ந்து நன்றாகக் கால்களை நீட்டிக்கொண்டான்.

அவர்களுடன் வந்த வீரர்கள் இறங்கவில்லை. புரவிகளில் விரைந்து சென்று பக்கத்து கிராமத்திலிருந்து உணவு வகையறாக்களை முல்லை முன்பு வைத்து அவற்றை அவிழ்க்க முற்பட்டதும், "வேண்டாம். நீங்கள் போய் உணவருந்தி வாருங்கள். இதை நாங்களே சாப்பிடுகிறோம்" என்று அவள் உத்தரவிட, வீரர்கள் வெகு வேகமாக மறைந்தனர்.

அவர்கள் சென்றதும் முல்லை எழுந்திருந்து பராந்தகன் புரவியின் பக்கங்களில் தொங்கிக்கொண்டிருந்த பைகள் ஒன்றில் கையை விட்டு ஒரு சிறு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு சற்று எட்ட ஓடிக்கொண்டிருந்த அருவியிலிருந்து நீர் மொண்டு வந்து, ''போய் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு வாருங்கள்'' என்று பாண்டியனுக்கு உத்தரவிட, அவன் பதிலேதும் சொல்லாமல் அவள் சொற்படி செய்தான். அவன் வருவதற்குள் அவள் உணவு மூட்டையைப் பிரித்து அதிலிருந்து இலைகள் ஒன்றில் கலவைச் சாதத்தைப் பரிமாறி சிறிது கறியையும் வைத்தாள்.

பாண்டியன் ஏதும் பேசாமல் உணவை அருந்திவிட்டு இலையை எடுத்து தூரத்தில் கொண்டுபோய் எறிந்துவிட்டு கைகழுவி வாய் துடைத்து வந்தான். பராந்தகன் அவள் செயல்களைக் கவனித்து, 'தமிழ்ப்பெண்களுக்கு இயற்கை எத்தனை பண்பாட்டை, குலவொழுக்கத்தை சொல்லிக் கொடுத்திருக்கிறது?' என்று நினைத்தான். பூரித்தாள். 'இவள் பயனற்ற புரட்சி வேலையில் புகாதிருந்தால் எத்தனை சிறந்த மனைவியாக இருப்பாள்?' என்று எண்ணமிட்டான். 'அவளை எப்படிப் பயனற்ற புரட்சியிலிருந்து மீட்பது?' என்ற நினைப்பிலேயே அன்று பகலை, அவர்கள் மீண்டும் பயணம் செய்த சமயம் உட்பட, கழித்தாள்.

அன்று மாலையில் தாமிரபரணியின் மேற்பகுதிக்கு வந்தவள் அதன் கரையை அடுத்திருந்த மிக அடர்த்தியான காட்டில் தங்கினாள். தான் புரவியைவிட்டு இறங்கியதும் காவலரை நோக்கி, ''நீங்கள் சென்று தந்தையைப் பார்த்து அழைத்து வாருங்கள். நாளை காலையில் நாம் நமது தளத்துக்குப் போகிறோம்'' என்று அறிவித்தாள்.

காவலர்கள் சிறிது நிதானித்தனர். ''தங்களுக்கு...'' என்று ஒருவன் இழுத்தான்.

''யாரும் தேவையில்லை'' என்று சொன்னதும் காவலர்கள் பறந்தனர்.

இரவு நன்றாக மூண்டு பால் நிலவு எங்கும் பரந்தது. பராந்தகன் முழந்தாள்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். இரவு நன்றாக ஏறியதும் முல்லை அவனை நோக்கி மெதுவாக நடந்து வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். அவளைத் திரும்பிப் பார்த்தான் பாண்டிய இளவல் உட்கார்ந்த நிலையிலேயே. அவள் முகம் சந்திர ஒளியில் மிக அழகாகத் தெரிந்தது. அவள் கண்களில் கோபம் மறைந்து வெட்கம் தவழ்ந்திருந்தது. அவள் தலையில் ஒரு முழு முல்லைக்கொத்து கொடியிலிருந்து புதிதாகப் பறிக்கப்பட்டு செருகப்பட்டிருந்தது. அவன் அதை மெல்ல முகர்ந்தான்.

''இது ஏதென்று கேட்கிறீர்களா?'' என்று கேட்ட அவள், அவன் கேட்காமலே பதில் சொல்லத் தொடங்கி, ''இங்கு முல்லைக்கொடிகள் அதிகம். அதனால் இது முல்லைக்காடு என்று அழைக்கப்படுகிறது'' என்று சொன்னாள்.

''அப்படியா?'' என்றான் பராந்தகன்.

''ஆம். நான் இங்குதான் பிறந்தேன்'' என்றாள் அவள்.

''பிறந்த இடத்திற்கும் பெயருக்கும் பொருத்தமிருப்பது அபூர்வம்'' என்றான் அவன்.

அவள் அவனை மெதுவாக நகர்ந்து நெருங்கினாள். ''உங்கள் காதைக் காட்டுங்கள்'' என்றாள்.

அவன் தலையைச் சிறிது சாய்த்தான், அவள் உட்கார்ந்திருந்த பக்கமாக.

அவன் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னாள். அவன் முகத்தில் விவரிக்க இயலாத அதிர்ச்சி தெரிந்தது!

7. இனிப்பும் கசப்பும்

அவள் அவன் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து அவன் காதில், ரகசியம் சொல்ல அவனை நோக்கிச் சாய்ந்ததால், அவள் முன்னுச்சியில் சூடிய முல்லைக்கொத்து அவளுடன் அவன் நாசிப்புறமாக இறங்கி அவனுக்கு நறுமணத்தைப் புகட்டிய தென்றால், பக்கவாட்டில் லேசாக உராய்ந்த அவள் கெட்டிப்பட்ட இளமார்பு ஒன்று அவன் உணர்ச்சிகளை அறவே அள்ளிச் சென்றது. இதனால் திக்குமுக்காடிய பராந்தகனை திகிலுறச் செய்ய அவள் காதில் ஓதிய ரகசியம் அவனுக்கு விவரிக்க இயலாத அதிர்ச்சியைத் தந்ததென்றாலும் அதை அவன் வெளிக்குக் காட்டாமல் உணர்ச்சிகளை ஒரு கட்டுக்குக் கொண்டுவந்து, ''என்ன சொல்கிறாய் முல்லை?'' என்று மிக மெதுவாக வினவினான்.

அவள் மீண்டும் முணுமுணுத்தாள் அவள் காதுக்கருகில். ''நீங்கள் யாரென்று எனக்குத் தெரியும்'' என்று.

பராந்தகபாண்டியன் சற்றே நிலை தடுமாறி, ''முல்லை! நான் யார்?'' என்று வினவினான்.

''தெரியாது உனக்கு?'' என்று அவள் சகஜமாகப் பேசினாள்.

பாண்டியன் அவள் இடையில் தனது கையொன்றைச் செலுத்தினான். ''தெரியவில்லையே முல்லை!'' என்று முணு முணுக்கும் பாவனையில் அவள் கன்னத்தில் தனது கன்னத்தை யும் இழைத்தான்.

முல்லை உணர்ச்சிப்பெருக்கில் ஆழ்ந்தாள். இடையில் தவழ்ந்த பராந்தகனின் இரும்புக்கையும் கன்னத்தில் உராய்ந்த முரட்டுக்கன்னமும் அவளுக்கு எல்லை மீறிய இன்ப வேதனையை அளித்தன. இருப்பினும் சமாளித்துக்கொண்டு அவள் பேச முற்பட்டு, ''நீ ஒரு காமுகன்'' என்று குற்றம் சாட்டினாள்.

பராந்தகன் தப்பினோம் என்ற எண்ணத்தால் ஆயாசப் பெருமூச்சு விட்டு பாதி உண்மையே பேசினான். ''முல்லை! நான் ஒரு கணம் திக்குமுக்காடி விட்டேன்'' என்று.

''ஏன்?'' என்று கேட்ட முல்லை அதிகமாக நெருங்கினாள்.

''என் சுபாவத்தை நீ முழுதும் அறிந்து கொண்டு விட்டாயோ என்று'' என சமாளிக்க முயன்றான்.

''உன் சுபாவம் என்ன?'' என்று அவள் வினவினாள்.

''பெண்களைப் பார்த்தால் நான் சபலப்படுவேன் என்பது மதுரையில் பிரசித்தம்'' என்றான் பராந்தகன்.

''இவ்வளவுதானா?''

''இல்லை!''

''வேறு என்ன?''

''சபலத்துடன் நிற்கமாட்டேன் என்ற அபக்கியாதியும் எனக்கு உண்டு.''

''இருக்கும் இருக்கும்'' என்ற அவள், ''நான் காமுகனென்று அழைத்தது சரியாகப் போய்விட்டது'' என்றும் சொன்னாள்.

பராந்தகனின் இடதுகை அவள் இடையை நன்றாக இறுக்கி ''முல்லை...'' என்று மெதுவாக ஆரம்பித்தான் அவன்.

''என்ன!'' என்று மெதுவாக வினவினாலும் அவள் குரலில் லேசாக சினம் தெரிந்தாலும் இடையிலுள்ள அவன் கையை எடுக்க முயலவில்லை அவள். விலகி உட்காரவும் எத்தனிக்கவில்லை.

பராந்தகன் தொடர்ந்தான்: ''முல்லை! நான் காமுகனாயிருந் தால் அதற்குக் காரணம் நீ மூன்று குற்றங்களைப் புரிந்திருக் கிறாய்'' என்று காரணம் சொன்னான்.

''மூன்று காரணங்களா? என்ன அவை?'' என்று கேட்டு அவள் சற்று திரும்பி உட்கார்ந்து அவனுக்கெதிரில் முகத்தை

வைத்துக் கொண்டாள். சந்திரவொளி அவள் முகத்திற்கு அசாத்திய மெருகைக் கூட்டியிருந்தது. பளபளத்த விழிகள் வேட்கையை விசிறின.

இவை அனைத்தையும் பராந்தகன் கவனிக்கவே செய்தாள். இருந்தாலும் வேதனையால் பெருமூச்சு விட்டு, "முல்லை! முதலில் நீ உன் தந்தைக்காகக் காத்திராமல் என்னை அழைத்து வந்து விட்டாய்..." என்றான்.

"அது முதல் குற்றம்?"

"ஆம்! முல்லை. இரண்டாவதாக நம்முடன் வந்த காவலர்களையும் அனுப்பிவிட்டாய்..."

"மூன்றாவது?"

"முல்லைக்கொத்தை அணிந்து என்னருகில் வந்தாய். இவற்றில் ஏதாவது ஒன்றே என்னைத் தத்தளிக்கச் செய்ய, என்னை நிலைதடுமாறச் செய்ய போதும். ஆனால், நான்காவது குற்றமும் இருக்கிறது, அதற்கு நீ பொறுப்பாளியல்ல."

தனது மயக்க விழிகளால் பராந்தகனை நன்றாக ஏறிட்டு நோக்கினாள் முல்லை. அவன் தனது விழிகளுடன் உறவாட விட்டான்.

"முல்லை! நான்காவது குற்றத்துக்கு நீ பொறுப்பாளியல்ல; ஆண்டவன் பொறுப்பாளி" என்ற அவன் "இவ்வளவு அழகான உன்னை அவன் சிருஷ்டித்திருக்கக்கூடாது. முல்லை, ஒரு கொத்துத்தான் உனக்குத் தெரியும். உன் செம்பருத்தி இதழ்கள், தாமரை முகம், செண்பக நாசி, இதோ என் கண்களைக் குத்திவிடுவது போல் பார்க்கும் மொட்டுகள்-இவற்றை நீ பார்க்க மாட்டாய். ஆனால், நான் பார்க்கிறேனே. இத்தனை பூங்கணைகளுக்கு முன்னால் நான் என்ன செய்ய முடியும்?" என்று சொன்னான்.

அவன் வார்த்தைகளிலிருந்த மதுரம், சொற்களின் கூட்டு, பார்வையின் காந்தம் இத்தனையும் அவளை இழுத்தன. அது போதாதென்று எதிரேயிருந்த பருவத்தால் செழித்திருந்த அவள் தொடையிலும் கையை வைத்தான். அவன் கையை வைத்தது மட்டுமல்ல, சேலையுடன் சேர்த்து அழுத்திப் பிடிக்கவும் செய்தான். அந்தப் பிடி அவளுக்கு வலித்தது. ஆனால், அந்த வலி தேவையாயிருந்ததை நினைத்து அவள் வியப்பின் வயப்பட்டாள்.

'ஆண்மகன் குரூரத்துக்கு ஆளாகவே பெண்களை சிருஷ்டிக்கிறதா இயற்கை?' என்று உள்ளூர வினவிக் கொள்ளவும் செய்தாள். ஆனால், அவன் கையை விலக்கினாள் இல்லை. அதிக சேஷ்டைக்கு அது முனைந்த போது இடமே கொடுத்தாள்.

எதிரே உட்கார்ந்த அந்தப் பைங்கிளியைப் பராந்தகன் நன்றாக நெருங்கினான். வலதுகையை அவள் மலர்த் தொடையில் அழுத்தியவண்ணம் அவள் உடலை இடது கையால் இழுத்துத் தன் மடியில் படுக்க வைத்தான். இடது கையும் குப்புறக் கிடந்த அவள் உடலின் அடிப்புறத்தை நாடியது. வலிய இரு கைகளால் அப்படியே தூக்கப்பட்ட அவள் மீண்டும் அவன் மடியில் சுருண்டு படுத்தாள். அந்தச் சுருண்ட நிலையை நீட்ட முற்பட்ட கைகள் படாத இடங்களில் பட்டதால் அவள் நெளிந்தாள். விலகவும் முயன்றாள். அந்த முயற்சி பலனளிக்காததையும் அந்த மதுரைக் காமுகன் மேற்கொண்டு விளையாட முனைந்ததையும் எண்ணி "உம்!" என்று எச்சரிக்கை ஒலி எழுப்பினாள்.

அந்த எச்சரிக்கை ஒலியே அவன் உணர்ச்சிகளை மேலும் தூண்டியதால் அவன் மடியில் கிடந்த அவள் பூவுடலின் முதுகின்மீது சாய்ந்தான். கழுத்தை முகர்ந்தான். அதில் இதழ்களையும் பதிய வைத்தான். "முல்லை! முல்லை!" என்று வேட்கை மிகுதியால் முனகினான்.

அந்தச் சமயத்தில் முல்லை என்று பெயரை உச்சரித்தாளோ யொழிய அவன் எண்ணமெல்லாம் நீலவல்லியின் மீதும் நிஷேத அறையின் மீதும் திடீரென கடமையால் அரசன் ஆணையால் கத்தரிக்கப்பட்ட காமவேட்கையின் மீதுமே திரும்பியதால் மடியில் கிடந்தவளை நீலவல்லியென்றே கருதினான். அதனால் காமம் கத்தரிக்கப்பட்ட நிலைக்கே திரும்பினான். அதன் விளைவாக அவன் கைகள் பூவுடலில் அத்துமீறித் துளைய முற்பட்டன. கழுத்தில் இதழ்களின் அழுத்தம் அதிகமாயிற்று. கழுத்தில் இறங்கி கன்ன மொன்றிலும் துளையலாயிற்று. அடுத்து அவன் இதழ்கள் மீண்டன. வெறிபிடித்தவன் போல் பராந்தகன் அவளை எடுத்து மகிழமரத் தரையில் படுக்க வைத்தான். குனிந்து, "பெண்ணே!" என்றும் அழைத்தான்.

முல்லையின் கதி அதோகதியாயிருந்தது. அவள் உணர்ச்சியில் மூழ்கிக் கொண்டிருந்தாள். அதற்கு அத்தாட்சியாக அவள் கண்கள் மூடிக்கிடந்தன. நாசியிலிருந்து மூச்சும் பெருமூச்சாக வந்தது. அந்தப் பெருமூச்சில் அவள் மார்பு ஏறி இறங்கியதைக் கண்ட அந்த ஆண்மகனின் கண்கள் அவற்றை உற்றுக் கவனித்த வண்ணம் இருந்தன. அடுத்து அவன் முகம் அவள் மார்பில் முற்றும் புதைந்தது. புரளவும் முற்பட்டது. அந்தச் சமயத்தில் திடீரென எதையோ நினைத்துக்கொண்ட முல்லை லேசாக நகைத்தாள். அவன் முகத்தை அவள் மார்பிலிருந்து நீக்கினாள். அவன் தலையைத் தூக்கினான். அவளைப் பார்த்தான். "என்ன நகைக்கிறாய்?" என்று வினவினான்.

அவள் மீண்டும் சற்றுப் பெரிதாகவே நகைத்தாள். "ஒன்று மில்லை" என்றும் சொன்னாள்.

பராந்தகன் மனதில் சந்தேகம் எழுந்தது. அவள் நகைப்பு இயற்கையாக இல்லாததுபோல் பட்டது அவனுக்கு. "உண்மை யைச் சொல்" என்று கூறினான் பராந்தகன்.

"உண்மை கசக்கும்" என்ற முல்லை மறுபடியும் நகைத்தாள்.

"நீ இனிக்கிறாய். அது போதும் எனக்கு" என்றான் பராந்தகன்.

"அப்படியானால் உண்மையைக் கேட்காதே" என்ற அவள் அவன் கழுத்தில் ஒரு கையைப் போட்டு இழுத்தாள். அவன் குனிந்தான், அந்த இழுப்புக்கு இடம் கொடுத்து. அவள் மீண்டும் பேசினாள். கசந்த பேச்சுத்தான், கசந்த உண்மைதான். ஆனால், அதிலும் ஓர் இனிப்பு தெரிந்தது பராந்தகனுக்கு. அவன் கழுத்தை வளைத்து இழுத்த அவள், அவன் காதை லேசாகப் பற்களில் பற்றினாள். "பராந்தகா! நீ யாரென்பதை முதலில் பார்த்த போதே புரிந்து கொண்டேன். நீ வந்திருக்கும் காரியமும் எனக்குத் தெரியும்" என்று மெதுவாக சொற்களை உதிர்த்தாள்.

8. இயற்கையின் ஆட்சி

கனவிலும் கருதாத கசந்த சொற்களைக் கேட்டதால் அந்தக் காமுகன் சரேலென காரிகையின் பிணைப்பிலிருந்து எழுந்திருக்க முயன்றாலும் முடியவில்லை, அவனால். அவன் கழுத்தை வளைத்து இழுத்த பூங்கொடிக்கரம் திடீரென மெல்லிய ஆலம்விழுதைப் போல் மாறி வலுத்து அவன் கழுத்தை இழுத்த வண்ணமே இருந்தாலும் காதில் முதலில் லேசாகப் புதைத்த பற்கள் சற்று அதிகமாகவே பதிந்ததாலும் தவிர முகத்தில் புரண்ட திண்ணிய மார்புமொட்டுகள் இரண்டும் அவன் கன்னங்களை அணைத்துப் பிடித்ததாலும் பராந்தகனால் எழுந்திருக்கவோ அசையவோ திராணி யில்லாததால் அவன் படுத்தே கிடந்தான். அவன் யாரென்பதை அவள் ஊகித்துவிட்டதால் அவன் மனதில் ஏற்பட்ட ஆரம்ப திகில்கூட அங்கலாவண்யங்கள் கிளப்பிக் கொடுத்த உணர்ச்

சிகளில் மறைந்தே போயிற்று. அவன் அவள் மார்புமீது இருந்த வண்ணமே, ''முல்லையின் இதயமே, என்னை எப்படிக் கண்டு பிடித்தாய்?'' என்று மார்பின் இரட்டை எழுச்சிகளுக்கிடையே முகத்தை வைத்து உதடுகளை விரித்து அவள் இதயத்துடன் பேசினான்.

மார்பில் உதடுகள் விளைவித்த உணர்ச்சிப் புரட்சியால் முல்லை திண்டாடினாள். 'எப்படியும் ஆண்மகன் பலசாலிதான். பெண் பலவீனமுள்ளவள்தான்' என்று எண்ணமிட்டாள். அந்த எண்ணத்துடன் தலையை சிறிது தூக்கி, ''என் இதயம் பேசாது பராந்தகா, நான் பேசட்டுமா?'' என்று கேட்டாள் மெதுவாக.

''ஏன் பேசாது? நன்றாகப் பேசும். அது பேசும் மொழி வேறு. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்'' என்ற பராந்தகன் உதடுகளைப் புதைத்த இடத்திலிருந்து அவற்றை எடுக்காமலே பதில் சொன்னான்.

அவள் லேசாக நகைத்தாள். பிறகு சொன்னாள்: ''பராந்தகன் இதயமே கேள். பாண்டிய மக்கள் மன்னனைப் பற்றி அதிகமாகப் பேசுவதில்லை. பாண்டிய இளவலைப் பற்றித்தான் பேசுகிறார்கள். அவன் அழகைப் பற்றிப் பேசுகிறார்கள். போரில் அவன் திறமை, தந்திரம் இவற்றைப் பற்றி கதைகள் இருக்கின்றன. அவன் புரவியே ஒரு விசித்திரம். புரவியுடன் பராந்தகன் பேச முடியும் என்று கேட்டிருக்கிறேன். ஆகையால் நீ புரவியை 'நண்பரே!' என்று அழைத்ததுமே பராந்தகன் நீயாகத்தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். அடுத்து உனது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் உன் பெயரை பறைசாற்றின. அதுமட்டுமல்ல பராந்தகா, உன் ஓவியமொன்றும் என்னிடமிருக்கிறது.'' இதைச் சொன்ன முல்லை மேலே பேசாமல் மௌனம் சாதித்தாள்.

''இத்தனையும் தெரிந்தும் என்னை இன்னும் உயிரோடு ஏன் விட்டிருக்கிறாய்?'' என்று பாண்டிய இளவல் வினவினான்.

முல்லை புரண்டு மீண்டும் குப்புறப் படுத்த வண்ணம் பேசினாள். ''உயிரற்ற உன்னை நான் எப்படி காதலிக்க முடியும்? ஓவியத்தைக் காதலித்து உன்னை எப்படியாவது பிடித்து வர வேண்டுமென்று திட்டமிட்ட நான், உன்னைப் பிடித்த பின்பு எப்படிக் கொல்ல முடியும்?'' என்று கேட்டாள். ''பராந்தகா! இரவு ஓடுகிறது. நேரத்தை வீணாக்காதே'' என்றும் சொன்னாள் மெதுவாக.

அவள் சொன்னதன் பொருள் அவனுக்குப் புரிந்தே இருந்தது. 'கட்டழகி ஒருத்தி எதிரில் படுத்திருக்கும் போது தான் எப்படி சுரணையற்று இருக்க முடியும்?' என்று அவன் நினைத்தான்.

ஆகவே, நடப்பது நடக்கட்டுமென்று மகிழமரத்தடியில் அவள் பக்கத்தில் தானும் படுத்தான் மல்லாந்த நிலையில். ஆனால், எந்தச் செயலிலும் ஈடுபட அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. 'என்ன இருந்தாலும் அபலை. புரட்சிக் காரியாயிருந்தாலும் பெண். அவள் பலவீனத்தை நான் பயன் படுத்தக்கூடாது' என்று உள்ளூர எண்ணமிட்டதால் மரக் கட்டைபோல் மண்ணில் கிடந்தான்.

ஆனால், உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்துவிட்ட முல்லை வாளாவிருக்கவில்லை. சற்றே திரும்பி எழுந்து உட்கார்ந்தாள் அவன் பக்கத்தில். அவன் உறுதியான உடலைப் பார்த்தாள். மெல்லியதாயிருந்தாலும் வைரம் பாய்ந்த வாளிப்பான, சாட்டை போன்ற அவன் சரீரம் அவள் மதியை மயக்கி வேட்கையை அதிகப்படுத்தவே செய்தது. என்னவோ நினைத்துக்கொண்டு தலைமாட்டிலிருந்து தனது குறுவாளை எடுத்து அவன் மார்புக்கு எதிரே நீட்டினாள்.

அவள் குறுவாள் தனது மார்புக்கு எதிரே வருவதை அவன் கவனிக்கவே செய்தாலும், அதை லட்சியம் செய்யவே இல்லை. திறந்த கண்களை அவன் மூடிக்கொண்டதையும் முகத்தில் ஒரு சிரிப்பைத் தவழவிட்டுக் கொண்டதையும் அவள் கவனிக்கவே

செய்தாள். 'நல்ல கல்லுளிமங்கன்! என்ன நெஞ்சத் துணிவு!' என்று வியந்தாள் ஒரு விநாடி. அடுத்த விநாடி அவள் குறுவாள் அவன் கழுத்தருகே சென்றது. அங்கு இளம்பிய அங்கியில் குறுவாளைக் கொடுத்து சரேலென அங்கியை மார்புவரை கிழித்தாள். பிறகு குறுவாளை எறிந்துவிட்டு அவன் மார்பை நோக்கினாள்.

அகன்ற மார்பில் சருமம் கரேலென்று காடுபோல் வளர்ந்திருந்தது. அவன் பராக்கிரமத்தின் ஆண்மையின் அடையாளமாக அவன் மார்பு துலங்கியது.

சருமத்தால் மறைக்கப்பட்ட இடங்களுக்குள்ளே ஆங்காங்கு தெரிந்த இடைவெளி மார்பு, மேகத்துக்குள் பளிச்சிடும் மின்னல்போல் பளபளத்தது.

அந்த மார்பு மீது அவள் தனது தலையை ஒருக்களித்து வைத்தாள். அவன் சரும மார்பே அவளுக்கு சற்று சுரசுரத்த படுக்கை போல் தெரிந்தது. அவற்றின் பாதாளத்தில் எங்கிருந்தோ அவன் இதயம் ஒலித்தது அவள் காதில் நன்றாகக் கேட்டது.

அவன் இதயத்தில் எந்தப் படபடப்பும் இல்லாததையும் அது ஒரே சீராக ஒலித்ததையும் அவள் காதால் கேட்டாள். 'ஒரு பெண் பக்கத்திலிருக்கிறாள். அதுவும் உன்னைப் பிடிக்க சபதம் செய்திருப்பவள். அப்படியிருக்க உன் இதயத்துக்கு என்ன நிமிர் இருக்க வேண்டும்? உன் இதயம் என்ன இரும்பால் செய்ததா? யந்திரமா? அதில் இரத்த ஓட்டமோ, உணர்ச்சிப் பசையோ அடியோடு இல்லையா?'' என்று உதடுகளைக் கொண்டு முணுமுணுத்தாள்.

அவள் கேள்வியை அவன் இதயம் புரிந்திருக்க வேண்டும். சற்றே வேகமாக ஓட ஆரம்பித்தது. அதைக் கண்டு அவள் சற்று அவன் மீது தனது உடலைச் சாய்த்து தன் மார்பை அவன் மார்பின் மீது வைத்து அழுத்தி, ''பராந்தகன் இதயமே, நீ

என்னுடன் பேச வேண்டாம். என் இதயத்துடன் பேசு'' என்றாள்.

அப்பொழுதுதான் பராந்தகன் செயல்பட முற்பட்டான். அவன் கைகள் எழுந்து அவள் முதுகில் தவழ்ந்தன ஒரு விநாடி. பிறகு அவள் முதுகை இறுக்கி அவள் மார்பை தனது மார்புடன் சேர்த்து அழுத்தினான். அவளை சம்பூரணமாக எடுத்துத் தன்மீது புரட்டியும் கொண்டான். பிறகு இறுக்கியிருந்த கைகளில் ஒன்று அவள் இடையை நோக்கி இறங்கியது. அதற்கும் கீழே பருத்து எழுந்த எழிலிலும் சுழன்றது. பிறகு நீண்டிருந்த அவள் கால்களில் பாய்ந்து சென்றது.

முல்லை சுயநிலை இழந்தாள். ''டேய் பராந்தகா, விடு என்னை'' என்று சீற முயன்று முடியாமல் தவித்தாள். பிறகு ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக ''நான் நீலவல்லியல்லள்'' என்றாள் அவன் காதில்.

அவன் அவள் உதடுகளோடு தனது உதடுகளை இழைத்தான். ''நீலமில்லாதிருக்கலாம். ஆனால் வல்லிதான்'' என்றாள் உதடுகளை இழைத்தவாறு.

அவள் சிறிது தனது உதடுகளை நீக்கிக் கொண்டு கேட்டாள் ரகசியமாக ''என்ன சொன்னாய்?'' என்று.

''உனக்கும் நீலவல்லிக்கும் இரண்டு எழுத்துக்கள் தான் வித்தியாசம்'' என்றான் பராந்தகன் ரகசியமாக.

''இரண்டு எழுத்துக்களா?'' அவள் கேட்டாள் அவன் மீது லேசாகப் புரண்டு.

''ஆம்'' அவளை மேலும் இறுக்கினான் பராந்தகன்.

''புரியவில்லை.''

''நீல என்ற இரண்டு எழுத்துக்கள்.''

''அப்படியா!''

"ஆம். வல்லி என்பது உங்கள் இருவருக்கும் பொது. வல்லி யென்பது கொடி."

"ஆமாம்."

"முல்லையும் கொடிதானே?"

"ஓகோ! கவியாகிவிட்டாயா பராந்தகா? அயோக்கியனே, பெண்பித்துப் பிடித்தவனே" என்றாள் முல்லை.

ஆனால், அவன் பித்தை அதிகமாகவே ஏற்றவே முனைந்தாள். அவள் உடல் பூராவும் அவன் மீது அழுந்தி அவள் அங்கலாவண்யங்கள் தொடுத்த கணைகளிலிருந்து அவனால் தப்ப முடியவில்லை. "அடி முல்லை" என்று வேகத்துடன் அணைத்தான்.

"என்ன?" அவள் சர்வ சாதாரணமாகக் கேட்டாள்.

"என்னை விட்டுவிடு. நான் திருமணமானவன்" என்றான் பாண்டிய இளவல்.

"நானா பிடித்துக் கொண்டிருக்கிறேன் உன்னை? உன் இரும்புக்கைகளல்லவா என்னைப் பிடித்துக் கொண்டிருக் கின்றன" என்றாள் முல்லை.

"இல்லை முல்லை."

"என்ன இல்லை?"

"உன் அழகுகள் காந்தம்."

"அதனால்?"

"இரும்புக்கைகளை அவை தாமாகப் பிடித்துக் கொண்டிருக் கின்றன."

"அப்பப்பா! புருஷர்களின் அயோக்கியத்தனத்துக்கு ஓர் எல்லை கிடையாதென்பதை இப்பொழுதுதான் உணர்ந்து கொண்டேன்" என்ற முல்லை அவனிடமிருந்து பிரிய முயன்றாள்.

அவன் கைகள் விடவில்லை. "பராந்தகா! நீ திருமண மானவன் என்று சொன்னாய்" என்றாள் முல்லை.

"ஆம். உன்னால் திருமணம் பூர்த்தியாகவில்லை" என்றான் பாண்டிய இளவல்.

"என்னாலா?" என்று வியப்புடன் கேட்டாள் முல்லை.

"ஆம்."

"எப்படி அது?"

"உன்னைப் பிடிக்க மன்னரால் நிஷேத அறையிலிருந்து இழுக்கப்பட்டேன்."

"அப்படியா?"

"ஆம். அந்த வேகம், அந்த ஏமாற்றம் இன்னும் நீங்க வில்லை."

"அதனால்?"

"அந்த வேகம் உன்மீது பாய்ந்தால் நான் தவறு செய்த வனாவேன். சூது வாது அறியாத ஒரு பெண்ணைக் கெடுத்த பாவம் எனக்கு வரும்" என்று பாண்டியன் பரிதாபத்துடன் பேசினான்.

அவன் பேச்சு அவள் உணர்ச்சிகளை அதிகமாகத் தூண்டவே செய்தது. "அப்படியானால். உன் மனைவி...?" என்று இழுத்தாள் முல்லை.

"உலக வழக்கப்படி மனைவியானாள். மனைவிக்கு வேண்டிய இரகசிய உரிமையைப் பெறவில்லை" என்றான் பராந்தகன்.

"கொடுமை! கொடுமை!" என்றாள் முல்லை.

"ஆம்" முனகினான் பராந்தகன்.

அவளும் முனகினாள். பெருமூச்சு விட்டாள். "காந்தர்வம் அரசகுலத்தாருக்கு உண்டு" என்ற முல்லை, அவன் மீதிருந்து

சரிந்தாள். உடல் சரிந்ததே தவிர, உணர்ச்சிகள் சரியவில்லை. இருவர் தாகமும் அவர்களைத் தவிக்க வைத்தது. பக்கத்தில் சரிந்த அவளைப் பாண்டியன் கை இழுத்தது. இருவரையும் இயற்கையின் உணர்ச்சிகள் ஆட்கொண்டன.

9. விசித்திர விடை

இயற்கையின் ஆட்சியில், அது விளைவித்த உணர்ச்சி வேகத்தில், கட்டுண்டு பிணைந்து கிடந்த அந்த இருவரும் சூழ்நிலையை மறந்தனர். தங்களிருவர் வாழ்க்கை நிலையை மறந்தனர். கடமைகளையும் அறவே மறந்தனர். பாண்டியனுக்கு எதிராகப் புரட்சியைத் துவக்கிய நங்கை தனது லட்சியத்தை அந்தச் சில நாழிகைகளில் மறந்தாள்.

அவளைப் பிடித்து அவளது திட்டங்களைத் தவிடு பொடியாக்கிப் புரட்சியை ஒடுக்க வந்த பாண்டிய இளவல் பராந்தகனும் வந்த காரியத்தை மறந்து, முல்லையைச் சொந்தம் கொண்டாடினான். இயற்கை எப்படி மனிதனுடைய திட்டங்களை சில நாழிகைகளில் தலைகீழாக மாற்றி விடுகிறது என்று நினைத்த பராந்தகன் முல்லையின் இதழ்களைக் கவ்வி நின்ற தனது உதடுகளை மீட்டு ''முல்லை, நாம் என்ன செய்கிறோம்?'' என்று மெதுவாக வினவினான்.

''இதென்ன கேள்வி? இதை என்னைக் கேட்டு என்ன பயன்?'' என்று கேட்ட முல்லை அவனிடம் இன்னும் அதிகமாக முடங்கினாள்.

பராந்தகன் அவளை நன்றாக இறுக்கி ஏதோ சிறு குழந்தையை அடக்குவதுபோல் தன் உடலிடை அடக்கிக் கொண்டு, ''முல்லை, நீ யார்? நான் யார்? நாம் மேற்கொண்ட பணிகளென்ன? இப்பொழுதுள்ள நிலை என்ன? சிறிதாவது

நினைத்துப் பார்த்தோமா?'' என்று வினவிக் கொண்டே அவள் தலைக்குழல்களில் தனது உதடுகளைப் பொருத்தினான்.

முல்லை சில விநாடிகள் பதில் சொல்லவில்லை. பிறகு பேசியபோது நகைத்தாள் முதலில்.

''தத்வ விசாரத்துக்கு இது சமயமல்லவே'' என்று, பிறகு சொன்னாள் நகைப்பை அடக்கிக் கொண்டு.

பராந்தகன் அவளை நன்றாக இறுக்கி, ''ஏனில்லை?'' என்று கேட்டான்.

''காமத்தில் பிறப்பதில்லை தத்வ விசாரம்'' என்றாள் முல்லை.

''வேறெதில் பிறக்கிறது?'' என்று வினவினான் பராந்தகன்.

''விரக்தியில்'' என்றாள் முல்லை.

''இது...?'' அவன் தடுமாறிக் கேட்டான்.

''இதற்கு 'வி' இல்லை. ரக்திதான் உண்டு இப்பொழுது.''

''ரக்தியா!''

''ஆம். இன்பம் என்றும் அதற்கு ஒரு பொருள் உண்டு.''

அதைக் கேட்ட பராந்தகன் சிறிது சிந்தித்தான். அவள் ஏதோ கேட்க முற்பட்டதையும் தடுத்தான். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து, ''முல்லை, நாம் வழி தவறிப் போகிறோம். கொள்கைகளை மறந்து விட்டோம். கடமையை மறந்து விட்டோம்'' என்றான்.

அவள் எழுந்திருக்கவில்லை. மண்ணில் கிடந்தாள் மல்லாந்தபடி. ''மாறிவிட்டது, மறக்கவில்லை'' என்றாள் பராந்தகனை நோக்கி.

''நீ சொல்வது புரியவில்லை. தெளிவாகச் சொல்'' என்றான் பராந்தகன்.

முல்லை முறுவல் கூட்டினாள் தனது செவ்விய அதரங்களில். "மதுரையை விட்டு நீங்கள் புறப்பட்ட போது என்னைப் பிடிக்கவும் என் திட்டங்களை அழிக்கவும் புறப்பட்டீர்கள். நானும் உங்களைப் பிடிக்கவும் பிடித்துக் கட்டிச் சிறையில் போடவும் திட்டமிட்டு வந்தேன். ஆனால், நாமிருவரும் பரஸ்பரம் பிடித்துக்கொண்டோம்! ஒருவரை யொருவர் அடக்க முயன்றோம். ஆனால், யார் யாரிடம் அடங்கியது என்பது புரியவில்லை. பாண்டிய இளவலே! நீர் செய்த சத்தியம் நினைப்பிருக்கிறதா?" என்றாள் முல்லை அதரங்களை லேசாக விரித்து.

"என்ன சத்தியம்?"

"உங்களை என்னிடம் ஒரு மாதத்தில் பிடித்துத் தருவதாகக் கூறினீர்களே, அது."

"ஆம்! கூறினேன்."

"பிடித்துக் கொடுத்தால் பரிசு என்ன கேட்டீர்கள்?"

"உன்னை!"

முல்லை மல்லாந்த நிலையில் சிறிது அசைந்தாள். "நீங்கள் உங்களை சொற்படி பிடித்துக் கொடுத்தீர்கள். அதாவது நீங்களே உங்களை என்னிடம் ஒப்படைத்தீர்கள். பதிலுக்கு என்னைப் பரிசாகக் கேட்டீர்கள். நான் கொடுக்காமலே எடுத்துக் கொண்டீர்கள். மாற்றம் புரிகிறதா? உங்கள் புரட்டு புரிகிறதா?" என்று வினவினாள். மோகனப்புன்னகை கொட்டினாள்.

"புரியவில்லை" என்றான் பராந்தகன் சற்றுக் குழப்பத்துடன்.

"நீங்கள் பக்கத்திலிருக்கும்போதே பிடித்துக் கொடுப்பதாகச் சொல்வது ஒரு புரட்டு! மனைவியிடமிருந்து பிரிந்து அந்த நாளிலேயே இன்னொரு பெண்ணுடன் குலாவுவது மற்றுமொரு புரட்டு. இப்படி எத்தனையோ புரட்டுகளைப் புரிந்திருக்கிறீர் பாண்டிய இளவலே?" என்று விளங்கும் வகையில் கேள்வியும் எழுப்பினாள்.

பாண்டியன் தன் முன் மல்லாந்து கிடந்த அந்த மங்கைப் பருவத்தாளை உற்று நோக்கினான். உடலின் வளைவுகள், எழுச்சிகள், சேலை புகுந்து மனவிகாரத்தை ஏற்படுத்திய இடங்கள் அனைத்தையும் பார்த்து "முல்லை" என்று சற்று உறுதியாக அழைத்தான்.

"என்ன?" என்று கேட்டாள் முல்லை சிரித்த வண்ணம்.

"குற்றம் உன்னுடையது. நீ விரித்த வலையில் நான் விழுந்து விட்டேன். பலசாலியான என்னைப் பலவீனனாக அடித்தது உன் எழில் பிம்பம். திட்டமிட்டு என்னைத் தனியாக இங்கு கொண்டுவந்திருக்கிறாய். இங்கு வந்ததும் என்னை அடியோடு அழிக்கப் பார்க்கிறாய்" என்று குற்றம் சாட்டினான் பராந்தகன்.

முல்லையின் கண்களில் திடீரென ஒரு விபரீத ஒளி தென்பட்டது. "பாண்டிய இளவலே! உமது சொற்சித்திரம் உண்மையை மறைக்காது. என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்ததே நீங்கள். ஆகவே, இன்று முதல் உங்களுக்கு என்னிடம் கடமை உண்டு. என்னை விட்டு நீங்கள் தப்பவும் முடியாது. மணவறையிலிருந்து மணவாளனை ஓடவிட்டுத் தவிக்கும் அந்த மதி கெட்ட நீலவல்லியல்ல இந்த முல்லை அன்பைப் பெற சாதாரணமாக முயலுவாள். முடியாவிட்டால் வலுக்கட்டாயமாக அடைவாள்" என்று கூறிய முல்லை சற்றே திரும்பிப் படுத்தாள், உட்கார்ந்திருந்த பாண்டியன் பக்கமாக.

அவள் சமீபம் அவனைத் திக்குமுக்காடச் செய்தாலும் தனது அண்ணனையும் கட்டிய மனைவியையும் எண்ணிப் பார்த்தான். 'இவர்களுக்குத் துரோகம் செய்வது பாண்டிய நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும்' என்று உள்ளூர சொல்லிக் கொண்டு எழுந்தான், உட்கார்ந்த நிலையிலிருந்து. திடீரென்று சற்று எட்ட இருந்த தனது புரவியை நோக்கி நடந்தான்.

முல்லை அவனைத் தடைசெய்யவில்லை. திடீரென அந்த ஆண்மகன் தன்னை கைவிட்டுச் சென்றது-

''சமயத்தில் அகன்றுவிடுவது பாண்டிய இளவலின் வழக்கமா?'' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்ட முல்லை, ''பராந்தகா! உன்னிடம் ஏமாற நான் முட்டாளல்ல. என்னைக் கட்டிப்பிடித்துக் காதலித்து நீ ஓடிவிடுவது அத்தனை எளிதல்ல. இந்தப் பிராந்தியம் பாண்டியன் எல்லைக்கு உட்பட்டது. ஆட்சிக்கு உட்பட்டது. ஆனால், இங்கு செல்லும் அதிகாரம் ஒன்றுதான். அதுதான் முல்லையின் ஆக்ஞை'' என்று சொல்லிக்கொண்டே முல்லை எழுந்திருந்தாள்.

சிறிது தூரம் நடந்து ஆகாயத்தை நோக்கினாள். விடிய அதிக நேரம் இல்லை என்பதை உணர்ந்ததால், 'தந்தை ஏன் இன்னும் வரவில்லை?' என்று வினவிக் கொண்டாள். பிறகு பராந்தகன் சென்ற திக்குக்கு நேர் எதிர்திக்கில் சென்றாள். இன்னும் சிறிது தூரம் நடந்ததும் சுற்றுமுற்றும் நோக்கிவிட்டுப் பக்கத்திலிருந்த அருவியிடம் சென்றாள். அதன் கரையில் உட்கார்ந்து, கால்களை மட்டும் துளையவிட்டாள். பிறகு மடியிலிருந்த சிறு சங்கு ஒன்றை எடுத்து அதில் நீரை நிரப்பி லேசாக ஊதினாள். அது கலகலவென ஒலிக்கவே எங்கிருந்தோ அவள் புரவி அங்கு வந்தது.

அவள் அதன் காதில் ஏதோ சொல்ல அது வேகமாக ஓடிப் பக்கத்துக் காட்டில் மறைந்துவிடவே திருப்தியடைந்த மனத்துடன் முல்லை பழைய இடத்துக்குத் திரும்பினாள். அங்கு புறப்படச் சித்தமாக தனது புரவி மீது கையைப் போட்டுக்கொண்டு நின்றிருந்த பராந்தகனைப் பார்த்த முல்லை, ''எங்கு பயணம்?'' என்று கேட்டாள்.

பராந்தகன் சொன்னான், ''நீ எங்கு போக உத்தரவிடு கிறாயோ அங்கு!'' என்று.

''தந்தை வரும்வரையில் நாம் புறப்பட முடியாது'' என்ற முல்லை, ''எனது தளத்தில் நான் ஒரு ஆடவனுடன் தனித்து வருவதை எனது படைவீரர்கள் விரும்ப மாட்டார்கள்'' என்று கூறினாள்.

இந்த பதில் விசித்திரமாயிருந்தது பராந்தகனுக்கு. ''புரட்சி செய்யும் பெண்ணுக்கு ஆண் துணை வேறு வேண்டுமா?'' என்று எண்ணினான்.

அவன் உள்ளத்தில் ஓடிய எண்ணங்களை அவள் புரிந்து கொண்டாள். ''புரட்சி செய்தாலும் பெண் பெண்தான்'' என்று சுட்டிக்காட்டினாள். ''எந்த நிலையிலும் எந்த அந்தஸ்திலும் பெண்களைப் பற்றி ஆண்கள் கட்டிவிடும் கதைகளிலிருந்து பெண் தப்ப முடியாது. அப்படியொரு அவல ஜன்மம் பெண் ஜன்மம்'' என்ற முல்லையின் குரலில் துன்பம் இருந்தது.

''இத்தனை நேரம், அதுவும் இரவில் நாம் தனியாயிருந்ததை எப்படிச் சொல்லுவாய் உன் வீரரிடம்?'' என்று கேட்டான் பராந்தகன்.

''சொல்ல அவசியமில்லை. இதற்குத்தான் தந்தையை எதிர்பார்க்கிறேன், சமாதானம் சொல்வதில், அதாவது பொய் சொல்வதில் அவருக்கு நிகர் வேறு யாருமில்லை!'' என்ற முல்லை, ''இருங்கள், என் தந்தை எப்படியும் வந்து விடுவார்'' என்றாள்.

அவள் அப்படிச் சொல்லி முடிப்பதற்கும் முல்லைவேந்தன் அவள் வீரர்களுடன் வருவதற்கும் சரியாக இருக்கவே, ''இதோ வந்துவிட்டார் தந்தை'' என்றாள் முல்லை.

வீரர்கள் பின்தொடர அந்த இடத்தை அடைந்த முல்லை வேந்தன், ''ஏன் இன்னும் நீ தளத்துக்குச் செல்லவில்லை?'' என்று வினவினான். சந்தேகத்துடன் பராந்தகனையும் பார்த்தான்.

''உங்களுக்காகத்தான் காத்திருக்கிறோம்'' என்றாள் முல்லை.

முல்லைவேந்தன் அவளுக்குப் பதில் சொல்லவில்லை. ''உன் புரவி எங்கே?'' என்று கேட்டான்.

''இங்குதானிருந்தது'' என்று சொன்னாள் முல்லை.

"சரி, அது வருகிறபடி வரட்டும். நாம் தளம் செல்வோம். நமது வீரர்கள் ஒருவன் புரவியில் நீ ஏறி வா" என்று மகளுக்கு உத்தரவிட்ட முல்லைவேந்தன், பராந்தகனை நோக்கி "நாளைக் காலையில் நீ நமது தளத்து நீதிபதிகளால் விசாரிக்கப்படுவாய். இப்பொழுது உன் கச்சையிலிருக்கும் கத்தியைக் கொடுத்து விடு" என்று தனது கையை நீட்டினான்.

பராந்தகன் கத்தியையும் கொடுக்கவில்லை. தனது புரவியை விட்டு இறங்கவுமில்லை. "நான் உன்னிடம் சிறைப்பட வில்லை" என்றாள் புரவியில் அமர்ந்தவாறே.

"இப்பொழுது சிறைப்படுவாய்" என்று முல்லை வேந்தன் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே வீரர் பலர் வரும் புரவிகளின் குளம்படி ஒலிகள் கேட்டன. எதிரேயிருந்த காட்டின் அடர்த்தியி லிருந்து சுமார் இருபது வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் முல்லையின் புரவி ஏதோ பெரிய தளபதி போல் நடைபோட்டு வந்தது. அந்த விசித்திரத்தைப் பார்த்து பராந்தகன் பிரமித்துக் கொண்டிருக் கையிலேயே அவன் முல்லையின் வீரர்களால் சூழப்பட்டான். அவன் கத்தி பின்புறத் தில் இருந்த இருவரால் நீக்கப்பட்டது. தான் சிறைப்பட்டு விட்டதைப் பராந்தகன் உணர்ந்து கொண்டான்.

"அப்படியானால் முல்லையின் காதல் வெறும் வேஷந்தானா?" என்று வியந்தாள் பராந்தகன். அதற்கு விடை கிடைக்க ஒரு முழுநாள் ஆயிற்று. விசித்திரமான விடை அது. பாண்டியன் திட்டங்களைத் தவிடுபொடியாக்கும் விடை.

10. புஷ்பக்கை மாலை

முல்லையின் இருபது வீரர்களால் சூழப்பட்டதையோ, தனது வாள் பின்புறத்தில் நெருங்கிய இரு வீரர்களால் அகற்றப்பட்டதையோ சிறிதும் பொருட்படுத்தவில்லை

பராந்தகன். இந்த மாதிரி இக்கட்டுகள் பலவற்றில் அவன் ஏற்கெனவே சிக்கியிருந்ததாலும் அவசியமானால் அந்த நிலையிலிருந்துகூட தன்னால் தப்பிவிட முடியும் என்ற உறுதியாலும் வெளியே கச்சையிலிருந்து உருவப்பட்ட வாளைத் தவிர, மிக மெல்லியதாய் தனது உடைக்கும் சராய்க்கும் தொடைக்கும் இடையில் மறைந்துகிடந்த, யாருக்கும் புலப்படாத, ரகசிய நீண்டவாளை தான் எந்தக் கணத்திலும் உருவிப் போரிட முடியும் என்ற திடப் பிரக்ஞையாலும் இமையைக்கூட அசைக்காத பராந்தகனை வியப்பு நிரம்பிய விழிகளால் முல்லை நோக்கினாள். பாண்டியன் அலட்சியத்துக்குக் காரணம் புரியாத முல்லை வேந்தன் சிறிது குழம்பினதால், "என் வீரர்களிடமிருந்து தப்பிவிட முடியுமென்ற நினைப்பிருந்தால் அதை விட்டுவிடு. நீ லவலேசம் அசைந்தாலும் உன்னைக் கண்டதுண்டமாய் எனது வீரர்கள் வெட்டிப் போடுவார்கள்" என்று முரட்டுக் குரலில் கூறினாள்.

பராந்தகன் பதிலுக்குப் புன்முறுவலே செய்தாள். "தங்கள் வீரமும் தங்கள் வீரர்கள் வீரமும் நான் அறியாததல்ல. இதையும் என்னிடம் விட்டு வைப்பது சரியாகாது" என்று புன்முறுவலின் ஊடே கூறியதன்றி, கச்சையிலிருந்து குறு வாளொன்றையும் எடுத்து முல்லைவேந்தனிடம் நீட்டினாள்,

பராந்தகன் அலட்சியத்துக்கும் அவன் குறுவாளையும் எடுத்து தானாகவே கொடுத்துவிட முயன்றதற்கும் காரணம் தெரியாத முல்லைவேந்தன், அதற்குக் காரணம் அதிகப்படியான தனது வீரர்களின் கூட்டமே என்று தானே முடிவுகட்டி, "நல்லது பராந்தகா! தனது தோல்வியை ஒப்புக்கொள்வதுதான் விவேகிக்கு அடையாளம்" என்று கூறி பாண்டிய இளவல் கையிலிருந்த குறுவாளை வாங்க தனது புரவியை அவனது புரவியினருகே நெருங்கவிட்டான். அது எவ்வளவு தவறு என்பதை அடுத்த விநாடிகளில் புரிந்து

கொண்டான் முல்லைவேந்தன். பராந்தகன் நீட்டிய குறுவாள் கைமாறுவதற்குப் பதிலாக திடீரெனத் திரும்பி முல்லை வேந்தன் கழுத்தைத் தடவிக் கொண்டிருந்தது. அதனால் அச்சத்திற்கு இலக்கான முல்லையின் தந்தையை நோக்கிச் சொன்னான் பராந்தகன், "நீ மட்டும் முல்லையின் தந்தையாக இல்லாவிட்டால் உன்னை இந்த விநாடியே என்னால் கொன்றுவிட முடியும். ஆனால், உன்னைக் கொல்வதால் யாருக்கும் எந்தவிதப் பயனும் இல்லை. தவிர, என்னைச் சிறை செய்திருப்பவள் முல்லை. அவளிடமிருந்து தப்புவ தில்லையென சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். கொடுத்த வாக்கை நிறைவேற்றாத கயவனல்லன் பராந்தகன். ஆகவே, என் கதியை முல்லையே முடிவுசெய்வாள்" என்று அத்துடன் உடைவாளைத் திருப்பி பிடிப்பக்கமாக முல்லைவேந்தனிடம் நீட்டினான்.

அதைப் பெற்றுக்கொண்ட முல்லைவேந்தன் சீறும் விழிகளைத் தனது மகள் மீது திருப்பி, "முல்லை, இவனை சிறை செய்திருப்பதை நீ ஏன் முன்னமே சொல்லவில்லை?" என்று வினவினான், உள்ளக் குமுறலை சொற்களின் ஒலியிலும் காட்டி.

முல்லையின் இதயம் பிரளயத்திலிருந்தது. பாண்டிய இளவலின் கோட்டைப்புளுகை மறுப்பதா, ஏற்பதா என்று அவளுக்குப் புரியவில்லை. தன்னிடம் சிறைப்பட்டிருப்ப தாகவும் தப்புவதில்லை என்று வாக்குக் கொடுத்திருப்பதாகவும் சொன்னது முற்றும் புரட்டு என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள். பராந்தகன் வேண்டுமென்றே தனது தளத்துக்கு வருகிறானென்பதும் அந்தத் தளத்தின் சக்தியை எடை போடுவதே அவன் நோக்கமென்றும் புரிந்து கொண்ட முல்லை அவனைத் தப்பவிட முயன்று, "அப்பா! இவர் சொல்வது பொய். இவர்தான் என்னைச் சிறை செய்தார்" என்று கூறிப்

பொருள் வாய்ந்த பார்வையொன்றைப் பராந்தகன் மீதும் வீசினாள்.

இதைக் கேட்ட முல்லைவேந்தன் மனம் பெரிதும் குழம்பியது. "நீ அவனைச் சிறை செய்ததாக அவன் கூறுகிறான். அவன் உன்னைச் சிறை செய்ததாக நீ கூறுகிறாய். இதில் யார் சொல்வது உண்மை என்று புலப்படவில்லை எனக்கு. யார் யாரைச் சிறை செய்தது?" என்று சீற்றத்துடன் வினவினான் முல்லைவேந்தன்.

பராந்தகன் மெதுவாகக் கேட்டான், "உண்மையைச் சொல்லிவிடட்டுமா?" என்று.

அதுவரை பொறுத்திருந்த முல்லை, அவன் ஏதாவது தாறுமாறாக உளறிவிடப் போகிறானென்ற பீதியால் "என்ன உண்மையைச் சொல்லிவிடப் போகிறீர்கள்?" என்று வினவினாள்.

அவள் கேள்வியில் வெளிமிரட்டலைத் தவிர உள்ளே சங்கடமும் ஊடுருவி நிற்பதை அவள் முகத்திலிருந்தே உணர்ந்து கொண்ட பராந்தகன், "உண்மையில் பலவிதங்கள் உண்டா தலைவியாரே?" என்று ஏளனத்துடன் வினவினான் பராந்தகன்.

அவன் எதைச் சொல்ல முயலுகிறான் என்பதை ஊகித்துக் கொண்ட முல்லை. "பராந்தகா! அயோக்கியனே!" என்று கூவினாள் பேச்சின் பாதையை மாற்ற.

"அப்படிக் கேள் முல்லை. இவனைக் கேட்க வேண்டிய முறையே இதுதான். இவனைவிட அயோக்கியன் பாண்டிய நாட்டில் கிடையாது" என்ற முல்லைவேந்தன் தான் எதையோ புதிதாகக் கண்டுபிடித்து விட்டவன்போல் நகைத்தான் பெரிதாக.

"முல்லை! இது முறையல்ல" என்றான் பராந்தகன்.

"எது?" சீறினாள் முல்லை.

"உன் தந்தை என்னைப் பார்த்து நகைப்பது, நீ என்னைப் பார்த்து மரியாதையின்றி அழைப்பது" என்று பாண்டிய இளவல் சொன்னான். பிறகு ஏதோ முணுமுணுத்தான்.

"ஏன் முணுமுணுக்கிறாய்? எதைச் சொல்வதாயிருந்தாலும் இரைந்து சொல்" என்று அதட்டினான் முல்லைவேந்தன்.

"இரைந்து சொல்வதில் கஷ்டமிருக்கிறது. வேண்டுமானால் முல்லையைக் கேட்டுப் பாருங்கள்" என்ற பராந்தகன், பெரும் ரகசியம் ஏதோ இருப்பதுபோல் முகத்தை வைத்துக் கொண்டான்.

சில விநாடிகளே சிந்தித்தான் முல்லைவேந்தன். பிறகு சந்தேகக் கண்களால் முல்லையை நோக்கினான். "இவன் ஏதோ சொல்கிறானே?" என்று வினவினான் மகளைப் பார்த்து.

முல்லை முதன்முதலாக நிதானத்தை இழந்தாள். தந்தையின் முட்டாள்தனம் அவள் சித்தத்தைக் கொதிக்க வைத்தது. "இது விசாரணைக்கூடமல்ல. அவர் சொல்வது எதையும் நாம் இங்கு கேட்க அவசியமில்லை. விசாரிப்பதை கொட்டுந்தளத்தில் வைத்துக் கொள்வோம்" என்று கூறி பக்கத்திலிருந்த தனது புரவி மீது தாவி ஏறினாள்.

அவள் ஏறிய வேகத்தில் புரவியில் பறந்துவிடுவாள் என்று எதிர்பார்த்த பராந்தகன், அவள் மேலும் நிதானித்ததைக் கண்டு புன்முறுவல் செய்தான். தங்கள் காதலைத்தான் வெளியிட்டு விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அவள் இயக்கத்தி லிருப்பதை அவள் முகபாவத்திலிருந்தே புரிந்து கொண்ட பராந்தகன், "முல்லைவேந்தரே! தலைவியார் சொல்வதில் அர்த்தமிருக்கிறது. எதையும் நாம் தளத்தில் பேசிக் கொள்ள லாம். ஆனால், ஒரு சந்தேகத்தை மட்டும் நீக்கி விடுகிறேன். நீங்கள் யார் யாரை சிறை செய்தது என்று கேட்டீர்களல்லவா?" என்று வினா ஒன்றைத் தொடுத்தான்.

"ஆம். கேட்டேன்" என்றான் முல்லையின் தந்தை.

"முல்லை என்னைச் சிறை செய்தாள்."

"அப்படித்தான் நடந்திருக்குமென்பது எனக்குத் தெரியும்."

"அடுத்து நான் முல்லையைச் சிறை செய்தேன்."

"அதாவது?"

"நாங்கள் ஒருவரையொருவர் சிறை செய்து கொண்டோம்."

இம்மியளவாவது புத்தியிருந்தால் உண்மையை ஊகித் திருப்பான் முல்லைவேந்தன். அது இல்லாததால் "கடைசியாக சிறை செய்தது யார்? சிறைப்பட்டது யார்?" என்று வினவினான்.

"கேட்க வேண்டுமா? முல்லைதான்" என்று பராந்தகன் சொன்னான்.

அதற்குமேல் அந்த நாடகத்தை நீடிக்கவிடாத முல்லை, "இங்கு இந்த அநாவசிய விவாதம் தேவையில்லை. வாருங்கள்" என்று தந்தையிடம் கூறி பராந்தகனைக் கோபவிழிகளால் நோக்கி தனது புரவியை மலை வழியில் திருப்பினாள். தனது வீரர்களைத் தன்னைத் தொடரும்படி சைகையும் காட்டினாள். அவளுக்கிருந்த மன எழுச்சியில் அவள் கீழே எட்டக் கிடந்த தனது வில்லையும் அம்பறாத் தூணியையும்கூட எடுத்துக்கொள்ளாமல் புரவியை மலை வழியில் வேகமாக நடக்கவிட்டாள். மற்றவர்கள் அவளை தொடர்ந்தனர். பாண்டிய இளவல் மட்டும் தனது புரவியைத் திருப்பாமல் நிடீரென தரையில் குதித்து வில்லும் அம்பறாத்தூணியும் கிடந்த இடத்துக்கு விரைந்து அவை இரண்டையும் எடுத்துக்கொண்டு "தலைவி! இதை விட்டு விட்டீர்களே" என்று உரக்கக் கூறியதன்றி மீண்டும் தனது புரவி மீது ஏறி அதை கன வேகத்தில் செலுத்தி முல்லையின் புரவியை அணுகி வில்லையும் அம்பறாத்தூணியையும் அவளிடம் கொடுத்தான்.

இந்த நிகழ்ச்சிகளைச் சற்றும் எதிர்பாராததாலும் பராந்தகன் மின்னல் வேகத்தில் இவையனைத்தையும் முடித்ததாலும் முல்லைவேந்தனும் அவனது வீரர்களும் பிரமை பிடித்து நின்றனர். வில்லையும் அம்பையும் பெற்றுக்கொண்ட முல்லை, அவனைச் சினந்து நோக்கி மீண்டும் தனது புரவியை வேகமாக நடக்க விட்டாள். "நண்பரே! முல்லையை விட வேண்டாம்" என்று கூற, அவன் புரவி முல்லையின் புரவியுடன் இணைந்தே சென்றது.

முல்லைவேந்தனின் கோபம் எல்லை மீறிவிட்டதால் அவன் பேசும் சக்தியை இழந்தான். சிறைப்பட்டிருக்கும் பராந்தகன் புரவியிலிருந்து குதித்து ஓடவும் தனது பெண்ணின் வில்லை எடுத்து வரவும் தனது வீரர்கள் எப்படி அனுமதித்தார்கள் என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். சரியான விடை கிடைக்காததாலும் சிறைப் பட்டுள்ள பராந்தகன் தனது வீரர்களின் காவலில் வராமல் முல்லையுடன் சரிசமமாகப் பயணம் செய்ததைக் கண்டதாலும் பராந்தகன் துணிவை முல்லைவேந்தன் உணர்ந்தானே தவிர, அவன் உள்ளத்தை உணர்ந்தானில்லை. எது எப்படியிருந்தாலும் தளத்தின் விசாரணையில் எதிரியைத் தீர்த்துக்கட்டி விடலாமென்ற எண்ணத்துடன் ஏதும் பேசாமல் மௌன மாகவே பயணம் செய்தான்.

இப்படியாக நடந்த பயணம் மறுநாள் காலை சூரியன் எழுந்து நான்கு நாழிகைகளுக்குப் பிறகே முடிந்தது. அந்த மலை வழியில் பயணம் செய்தபோது பக்கங்களைப் பார்த்து வந்த பராந்தகன் மலை வழியில் காவல் மும்முரமா யிருப்பதைக் கவனித்தான். யாரும் கண்ணுக்குத் தெரியா விட்டாலும் ஆங்காங்கு இருந்த புதர்களின் மறைவுகளில் பத்தடிக்கு ஒருமுறை ஒரு வீரன் தலைகாட்டிச் செல்வத்தைக் கண்டான், பாண்டிய இளவல். தலைமறைவாயிருந்த முல்லையின் படை அவனுடைய ஒரு சைகையில் வெளியே

வந்துவிடுமென்பதை பராந்தகன் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அந்த விடியற்காலை நேரத்தில் ஆங்காங்கு ஏதோ சிறு முரசுகள் இரு முறை ஒலித்து நின்று விடுவதையும் காதில் வாங்கிய பராந்தகன், அந்த ஒலிகள் அடுத்த வீரர் கூட்டத்துக்கு எச்சரிக்கை என்பதையும் உணர்ந்து கொண்டான்.

இப்படி சிறிது சிறிது தூரத்தில் மலை வழியின் இரு பக்கங்களிலும் உள்ள படை எந்த விநாடியிலும் ஒன்றுகூடி மலை வழியை அடைத்துவிட முடியுமென்பதை ஊகித்துக் கொண்ட பராந்தகன், முல்லையின் ராணுவத் திறமையைப் பெரிதும் சிலாகித்தான். 'இவள் மட்டும் காரணமின்றி புரட்சியில் ஈடுபடாதிருந்தால் நாட்டுக்கு எத்தனை தூரம் உதவ முடியும்?' என்றும் எண்ணமிட்டான்.

இந்த எண்ணங்களுடன் கொட்டும்தளத்தை அடைந்த பராந்தகன் முல்லையின் வீரர்களால் தாமிரபரணி ஓரமாயிருந்த ஒரு சிறு ஓலைக்குடிசைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு காவலில் வைக்கப்பட்ட பாண்டிய இளவல், அது குடிசையாயிருந்தாலும் சுற்றிலும் சதா காவலிருந்ததால் அங்கிருந்து தப்புவது முடியாத காரியம் என்று உணர்ந்து கொண்டான்.

ஆனால், அறை ரம்மியமாயிருந்தது. அதன் வாயிலில் சிறு அருவியாக தாமிரபரணி ஓடிக்கொண்டிருந்தது. உள்ளே அவன் படுக்க சிறு பாயும் போடப்பட்டிருந்தது. அன்று அவன் தாமிரபரணியில் நீராடிய போதும் ஆங்காங்கு உலாவியபோதும் யாரும் தடை செய்யவில்லை. வேளாவேளைக்கு உணவும் அளிக்கப்பட்டது. தனது உடை மறைவிலிருந்த மெல்லிய வாளை குடிசைக்கூரையில் செருகிவிட்ட பராந்தகன் பாயில் படுத்துக் கிடந்தான் நீண்ட நேரம்.

மாலை வரையில் யாரும் அவனைத் தேடி வரவில்லை. விசாரணைக்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. அன்று மாலை

ஒரு சிறு விளக்கை மட்டும் ஒரு வீரன் குடிசைக்குள் கொண்டு வந்து வைத்தான். இரவு உணவும் பரிமாறப்பட்டது. இரவு ஏறியதும் பாயை விரித்துப் படுத்த பராந்தகன் சிறிது நேரத்தில் நிம்மதியாக உறங்கி விட்டான்.

நள்ளிரவு வந்தது. அவன் எதையோ நினைத்து சற்று புரண்டான். புரண்டவன் சட்டென்று மலைத்தான். எழுந் திருக்கவும் முயன்றான். ஆனால், அவனை எழுந்திருக்க விடாமல் அழுத்தின இரு கரங்கள். அந்தக் கரங்கள் மாலையிடுவது போல் அவன் கழுத்தை வளைத்தன. ''இத்தனை அபாயத்தில் உங்களால் எப்படி உறங்க முடிகிறது?'' என்று வினவியது முல்லையின் ரகசியக்குரல், அவன் காதுக்கருகில்.

''நீ எப்பொழுது வந்தாய்?'' இக்கேள்வியுடன் அவன் கைகள் பூவுடலை வளைத்தன.

அவள் புஷ்பம் போன்ற கைகளாகிய மாலை அவன் கழுத்தை சுற்றிச் சுழன்றது. இருவர் உணர்ச்சிகளும் சுழன்றன. அப்பொழுதுதான் விளக்கு அணைந்துவிட்டதை அவன் உணர்ந்தான். அவன் ஏதோ பேச முயன்றான். ''பேச வேண்டாம்'' என்றாள் முல்லை.

''ஏன்?'' அவன் கேள்வி ரகசியமாக ஒலித்தது அவள் காதில்.

''நேரம் ஓடுகிறது'' என்றாள் அவள்.

''அதனாலென்ன?'' என்று அவன் கேட்டான்.

''அறிவு கெட்ட பராந்தகா! எல்லாம் நான்தான் சொல்லிக் கொடுக்க வேண்டுமா உனக்கு?'' என்றாள் அவள்.

அவன் பதில் சொல்லவில்லை. அவள் கரங்கள் அவன் கழுத்தைச் சுற்றி மாலையாக வளைத்தன. வளையாத அவன் மனமும் வளைந்தது. விளையக்கூடாத நிகழ்ச்சிகளும் விளைய முற்பட்டன.

11. பராந்தகன் அலறல்

முதிர்ந்துவிட்ட இரவில் முல்லையின் கொடிக்கரங்களால் வளைக்கப்பட்ட பராந்தகன் அந்தப் பக்குவ மலரின் இரும்புப் பிடியிலிருந்து விலக முயன்றானில்லை. அவள் அவன் மேலே புரண்டதால் ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளத்துக்கே பலியானான். முரட்டுத்தனம் வாய்ந்த அந்தக் காட்டு மலரின் கால்கள் அவன் கால்களில் பின்னவே துவங்கியதால், விஷயம் முற்றக்கூடிய நிலைக்கு வந்ததும். பராந்தகனின் உயர் குணங்கள் தலையெடுக்கவே 'என்ன செய்யத் துணிந்தாய் பராந்தகா!' என்று அவன் மனசாட்சி இரைந்தது. 'பெண்கள் பலவீனத்தைப் பயன்படுத்தித்தான் நீ அரசியல் சாதனைகளைப் புரிய வேண்டுமா?' என்றும் சீறியது அவன் மனம். ஆனால், இத்தனையிலும் பருவ மலரின் சுரூபம், அவள் எழுச்சிகளின் காலாக்னி- இவற்றை அவன் மீறுவது சாத்தியமில்லாதிருக்கவே, அவன் அவளைத் தனது உடல் மீதிருந்து பக்கத்துத் தரையில் இறக்கிப் படுக்க வைத்தான். தான் படுத்த நிலையிலிருந்து எழுந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து, ''முல்லை இது சரியென்று எனக்குத் தோன்றவில்லை'' என்று கூறியவண்ணம் சற்றுக் குனிந்து அவள் கன்னத்தோடு தனது கன்னத்தை இழைத்தான்.

அவள் தனது கன்னத்தை இருமுறை அவன் கன்னத்தோடு உராய்ந்தாள் கடினமாக. ''பராந்தகா! கரை உடைந்த பின் ஆற்றைச் சமாளிப்பது முடியாத காரியம்'' என்றாள். தனது இதழ்களையும் திருப்பி அவன் அடியிதழை இரு முல்லைப் பற்களில் பற்றினாள்.

பராந்தகன் அவள் இதழ்களை நீக்க முயலவில்லை. அதே நிலையில் பேசினான். ''முல்லை! கரைக்கு அணை போடுவது காதலின் தர்மங்களில் ஒன்று'' என்று.

"அணை என்பது நால்வகை" என்றாள் முல்லை. சொல்லிப் பெருமூச்சும் விட்டாள்.

"ஆம்!" -ஏதோ பேச வேண்டும் என்பதற்காகச் சொன்னான் பராந்தகன்.

'அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு' என்ற நால்வகை அணைகளை எடுத்துச் சொன்னாள் முல்லை.

"ஆம் முல்லை. ஆனால், பின் மூன்றும் முதல் ஒன்றின் ஆட்சியில் இருக்கிறது" என்றான் பாண்டிய இளவல்.

"என்ன?"-முல்லையின் கேள்வி சம்பிரதாயத்துக்காக வந்தது என்பதைத் தொடர்ந்த அவள் அணைப்பு, அணைப்பின் இறுக்கல் இரண்டும் நிரூபித்தன.

"நால்வகை அணைகளின் பிரதானம் அச்சம். அது அகன்றுவிட்டால் மற்றவை தாமாகவே தொடர்கின்றன." பராந்தகன் விளக்கம் தந்தான்.

"சரி."

"என்ன சரி?"

"அதனால்தான் பெரியவர்கள் சொன்னார்கள்."

"இங்கு பெரியவர்கள் ஏன் வருகிறார்கள்? இதுவே சிறியவர் விஷயம்."

"யார் விஷயமாயிருந்தாலும் சொன்னது பெரியவர்கள்."

"என்ன சொன்னார்கள்?"

"அச்சம் தவிர்." - இதைச் சொன்ன முல்லை, அவனைத் தனது கால்களால் பிணைக்க முயன்றாள்.

பராந்தகன் இடம் கொடுக்கவில்லை. அச்சம் அவனை ஆட்கொண்டது. 'ஒரு பெண்ணின் பலவீனத்திலா நான் ...மையை நிறைவேற்ற வேண்டும்?' என்று எண்ணினான். ...தனால் அவள் கால்களை லேசாக நீக்கிப் பிடித்து ...டலானான்.

முல்லை நகைத்தாள். "காரியம் ஆகும் வரையில் காலைப் பிடிப்பீர்களா?" என்று வினவினாள் நகைப்பின் ஊடே.

"இல்லை முல்லை."

"என்ன இல்லை?"

"நான் ஒரு விதி விலக்கு."

"எப்படி?"

"காரியம் ஏதும் நிகழாதிருக்க உன் காலைப் பிடிக்கிறேன்" என்ற பராந்தகன் மேலும் சொன்னான், "முல்லை! உன்னைப் பிடிக்கவும் பிடித்து உன்னை அடக்கவும் உன் புரட்சியைத் தாக்கவும் நான் மதுரையிலிருந்து கிளம்பினேன். ஆனால், இப்பொழுது நான் பணியின் வெற்றியை விரும்பவில்லை, தோல்வியை விரும்புகிறேன்" என்று.

முல்லையின் இதயம் அவளைச் சம்மட்டி கொண்டு அடித்துக் கொண்டிருக்கிறது. "தோல்வியா? பராந்தகன் சரித்திரத்தில் அது கிடையாதே!" என்றாள் பெருமிதத்துடன்.

"இப்பொழுது சரித்திரம் மாறிவிட்டது. முல்லை இம்முறை நான் தோற்றுத்தான் விட்டேன். நாளைக்குப் பிறகு இந்தக் கொட்டும்தளத்தில் இருக்க மாட்டேன்" என்றான் பராந்தகன் உறுதியாக.

"என்னைக் கைவிட்டுப் போவது மட்டும் சரியாக்கும்?" என்று முல்லை வினவினாள்.

"கைவிட மாட்டேன் முல்லை. உன்னை மணப்பேன்; மன்னன் அனுமதியைப் பெற்று" என்றான் பராந்தகன்.

"இதற்கு மன்னரின் அனுமதி எதற்கு?"

"அரசகுலத்தில் பிறந்த தோஷத்தின் கட்டுப்பாடு அது. மன்னர் குலத்தார் இஷ்டப்படி மணம் முடிக்க முடியாது."

"நீலவல்லியின் அனுமதி வேண்டாமா?" என்றொரு வினாவைத் தொடுத்த முல்லை எழுந்து உட்கார்ந்து கொண்டாள், தனது முழங்கால்களைக் கட்டிக்கொண்டு.

"நீலவல்லி மறுக்கமாட்டாள் எதையும் எனக்கு" என்ற பராந்தகன் குரலில் பெருமையிருந்தது.

"இன்னொரு பெண்ணிடம்கூட உங்களைக் கொடுத்து விடுவாள்?" என்றாள் முல்லை சினத்துடன்.

"ஆம். அவள் நளாயினி."

"அப்படியானால் நான் வேசியா?"

"யார் சொன்னது அப்படி?"

"புராணம். நளாயினி வேசி வீட்டுக்கு அந்த ரிஷிப்பிளத்தைக் கூடையில் தூக்கிச் சென்றாளாம்."

"அந்தக் கதை நம் இருவருக்கும் பொருந்தாது."

"ஏன்?"

"அந்த ரிஷிக்குக் தீராப் பெருவியாதி. நானும் அப்படி நோயாளியல்லன். நீயும் வேசியல்லள்."

இதைக் கேட்ட முல்லை தனது முழந்தாள்களில் புதைத்த முகத்தை நீக்கி, "வசனம் வேறு விதமாயிருக்கிறது" என்றாள்.

"வசனமா?"- வியப்பில் வினவினான் பராந்தகன்.

"ஆம், வடமொழி வசனம்" என்றாள் முல்லை.

"நீ வடமொழியும் படித்திருக்கிறாயா?"-பராந்தகன் குரலில் பிரமிப்பு இருந்தது.

"சிறிது."- அடக்கத்தைக் காட்டினாள் முல்லை.

"அது என்ன சொல்கிறது?"

"சயனேஷு தாஸி. அதாவது கற்புடைய மனையாட்டி பஞ்சணையில் கணவனுக்கு வேசியாயிருக்க வேண்டும்."

"நல்ல வசனம்."

"நல்லதோ பொல்லாததோ, உண்மை அதுதான். இயற்கையும் அதுதான்" என்ற முல்லை திடீரென தான் தூக்கப்படுவதை உணர்ந்து பிரமித்தாள்.

பராந்தகன் அவளைத் தூக்கிக்கொண்டு குடிசைக்கு வெளியே நடந்தான். தாமிரபரணியின் அருவியோரமாக நடந்து காட்டின் மிக அடர்த்தியான பகுதிக்குச் சென்றான். அங்கு அவளைக் கரடுமுரடான இடத்தில் ஒரு பாறையின் மீது கிடத்தினான். "முல்லை! வாழ்க்கை கரடு முரடானது" என்று சொல்லிக்கொண்டே அவள் முன்பு நின்றான்.

"ஆம், புரிகிறது" என்றாள் முல்லை.

"என்ன புரிகிறது?"

"வாழ்க்கை துவங்குகிறது."

"அப்படியா?"

"ஆம். தரை கரடுமுரடாக இருக்கிறது."

"பாறையைவிட நான் முரடன்."

"நீங்களென்ன, எல்லா ஆண்களும்தான்" என்ற முல்லை விகசித்த புஷ்பம்போல் கிடந்தாள்.

இரவின் அற்ப ஒளியில் அவள் மோகனாகரமாகத் தெரிந்தாள். எந்தக் காரணத்துக்காகப் பராந்தகன் அவளைக் குடிசையிலிருந்து எடுத்து வந்தானோ, அது நடைபெறவில்லை. முல்லையைத் தான் எடுத்துப் போவதை யாராவது வீரர்கள் பார்ப்பார்கள், குறுக்கிடுவார்கள் என்று நினைத்த பராந்தகன் யாரும் குறுக்கிடாததைக் கண்டு, முல்லை, காவலரை நீக்கிவிட்டதை உணர்ந்தான். அதனால் சிறிது அச்சம் கொண்டு "முல்லை! என்ன யாரும் சிறை செய்ய மாட்டார்களா?" என்று வினவினான்.

"ஒருவர் செய்யலாம். அவர் செயலற்று விட்டார்" என்றாள் முல்லை.

"யாரது?"

"நான்தான். இங்கு ஆட்சி புரிவதே நான்தான்" என்று சொன்னாள்.

"உன் தந்தை? பராக்கிரம பாண்டியன் எனும் முல்லைவேந்தன்?"

"அவருக்குப் பராக்கிரமமில்லை. ஆகையால் ஆட்சி யில்லை."

"அப்படியா!"- விசித்திரமாயிருந்தது பராந்தகனுக்கு.

"வேண்டுமானால் நாளை விசாரணையில் பாருங்கள்" என்ற முல்லை எதையோ நினைத்துக்கொண்டு எழுந்திருந்தாள்.

அடுத்து அவள் அங்கு நிற்கவில்லை. வேகமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டாள். அவள் காலடி ஓசை அந்த இரவில் அடர்ந்த அந்தக் காட்டிலும் பலமாகக் கேட்டது. துஷ்ட மிருகங்கள் பல எங்கும் சப்தித்தாலும் அவை அவன் காதில் விழவில்லை. விழுந்தாலும் அவன் சட்டை செய்யவில்லை. மனிதனைவிட துஷ்ட மிருகம் கிடையாதென்று மனத்தில் சொல்லிக் கொண்டான். பிறகு முல்லையின் பிரிவால் மனம் வெதும்பப் படுத்துக்கொண்டான், அதே பாறையில். "ஒரு பாவையின் கண்ணியத்தை இன்று காப்பாற்றி விட்டேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டவன், அந்தப் பாறையி லேயே உறங்கிவிட்டான். அந்த உறக்கத்தில்தான் எத்தனை கனவுகள்! நீலவல்லியும் முல்லையும் மாறி மாறி அவன் மனத்தில் ஆடிய நர்த்தனங்கள் எத்தனை! செய்த சண்டைகள் எத்தனை! அத்தனையிலும் நன்றாக உறங்கிய பராந்தகனுக்கு நேரம் போனது தெரியவில்லை. மறுநாள் நீண்ட நேரத்திற்குக் கால்களை அசைத்து எழுந்திருக்க முயன்றான்.

அப்பொழுது கீழ்வானம் வெளுத்து கதிரவனும் தலை காட்டினான். ஆனால், பராந்தகனால் எழுந்திருக்க முடிய வில்லை. அவன் கால்கள் இரண்டும் பலமான கயிறுகளால்

பிணைக்கப்பட்டு எட்ட இருந்த ஒருமரத்தில் கட்டப் பட்டிருந்தன. மார்பையும் ஒரு முரட்டுக்கயிறு அழுத்திக் கொண்டிருந்தது. அவன் தலைநிமிர்ந்து பார்க்க முயன்றான். கழுத்துக்குக் குறுக்கே ஒரு கயிறு இருந்தது. "நண்பரே!" என்று குரல் கொடுத்தான் தனது புரவிக்கு. நண்பர் எங்கிருந்தோ உறுமினார். அவர் கதியும் சரியான நிலையில் இல்லை என்பதைப் புரிந்துகொண்டான் பராந்தகன். அப்பொழுது தோன்றிய ஒரு வீரன் ஏதோ ஓரத்திலிருந்து சர்க்கரையைத் தூவிக்கொண்டே வந்து அவன் முகத்திலும் மார்பிலும் தூவினான்.

எதற்கும் அஞ்சாத பராந்தகனும் அஞ்சினான். மலை எறும்புப்புற்றிலிருந்து சர்க்கரை தூவப்பட்டிருப்பதையும் இன்னும் சிறிது நேரத்தில் பெரும் சுள்ளெறும்புகள் தன்மீது சாரிசாரியாய் ஏறிக் கடிக்கும் என்பதையும் தனது கண்கள், உதடுகள் சகலமும் பலியாகுமென்பதையும் புரிந்து கொண்டான். இதைவிட சாவு நல்லது என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அப்பொழுது அவன் முற்றும் எதிர்பாராத துன்மார்க்கமும் நடந்தது. அதைக் கண்ட பராந்தகன் நடுங்கினான். தனக்கு ஏற்படும் சித்திரவதையைக்கூட அவன் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. "முல்லை! முல்லை!" என்று அலறினான் பெரிதாக. அந்த மலைப்பகுதி முழுவதுமே "முல்லை! முல்லை!" என்று எதிரொலி செய்து அலறியது. பயங்கரமென்றால் அத்தனை பயங்கரம்! நினைக்கவும் கூசும் விபரீதம்.

12. குயில் கூவுது பார்!

மலைப்புற்றில் சுள்ளெறும்புகளால் தனக்குச் சித்திரவதை ஏற்படுத்த சர்க்கரை தூவப்பட்ட அதே சமயத்தில் முல்லை இரு காட்டுமிராண்டிகளால் தரதரவென இழுத்து வரப்பட்டதையும்,

அவளையும் தனக்குப் பக்கத்தில் கட்ட அவர்கள் முற்பட்ட தையும் கண்ட பராந்தகன், அவளுக்கு ஏற்பட இருந்த பயங்கர இம்சையை நினைத்து "முல்லை! முல்லை!" என்று பெரிதாக அலறியதைத் தொடர்ந்து பயங்கரச் சிரிப்பொன்றும் எட்ட இருந்து கிளம்பவே, அதைக் காதில் வாங்கிய இளவலின் உள்ளத்தில் உக்கிரமான கோபம் எழுந்தது.

அந்தச் சிரிப்புக்கு உடையவன் முல்லைவேந்தனே யென்பதை உணர்ந்த பராந்தகன் 'இப்படியொரு மிருகமும் உலகத்தில் இருக்க முடியுமா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். ஆனால், அடுத்த விநாடி அதை மறந்து முல்லையின் கதியை கவனிக்கலானான்.

முல்லையை இழுத்து வந்த காட்டுமிராண்டிகளும் அவனைப் பராந்தகனுக்குப் பக்கத்தில் படுக்க வைத்து அவள் கைகளிலொன்றைப் பராந்தகன் கையுடனும் இன்னொரு கையை எட்ட இருந்த செடியின் அடியிலும் பிணைத்தார்கள். அடுத்து அவள் காலில் ஒருகாலைப் பாண்டிய இளவலின் காலுடனும் இன்னொன்று எட்ட இருந்த செடியிலும் பிணைத்து இறுக்கப்பட்டது. இந்தப் பணிகள் முடிந்ததும் பராக்கிரம பாண்டியன் என்ற முல்லைவேந்தன் அந்த இருவர் முன்பும் தோன்றி இருவரையும் நீண்ட நேரம் திருப்தியுடன் நோக்கினான். "பாண்டிய நாட்டு விரோதிகளுக்குத் தகுந்த தண்டனை" என்று இரைந்தும் சொன்னான்.

பராந்தகனோ, முல்லையோ அவன் குரூரப் பேச்சுக்கு பதில் சொல்லவில்லை. முல்லைவேந்தனே தொடர்ந்தான்: "அடி முல்லை! என் மகள் பாண்டியனுக்கு வேசியாவாளென்று நான் கனவிலும் கருதவில்லை. ஆனால், அதுதான் நடந்தது. நீ நேற்றிரவு அவன் குடிசைக்குப் போய்த் திரும்பியது எனக்குத் தெரியும். நீயும் இந்தப் பாண்டிய மடையனும் கொட்டும் தளத்துக்கு நேராக வராமல் முல்லைக்காட்டில் ஒரு நாளைக் கழித்து விட்டபோதே சந்தேகித்தேன் உன்னைப் பற்றி. அன்று

முதல் உன்னுடைய அசைவு ஒவ்வொன்றும் எனது வீரர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாண்டிய இளவல் உன்னை மயக்கிவிட்டதை உணர்ந்து கொண்டேன். இனி நீ இந்தப் புரட்சிக்குப் பயன்படமாட்டாயென்பதையும் புரிந்து கொண்டேன். உங்களிருவரையும் சேர்த்து ஒழிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவுசெய்தேன். நிலைமையை நமது உபதளபதிகளிடமும் கலந்தேன். உன்னை ஒழிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர்களும் ஒப்புக் கொண்டார்கள்.

நேற்று முதல் நமது படைகளுக்கு நான்தான் தலைவன். என் சொற்படிதான் உபதலைவர்கள் கேட்பார்கள். உனது செல்வாக்கை உனது அற்பத்தனத்தால்- காமப்பித்தால் நீயே அழித்துக் கொண்டாய். பராந்தகன் யாரையும் மயக்க வல்லவன் என்பதை நான் கேள்விப்பட்டிருந்தாலும் உன் விஷயத்தில் அது செல்லாது என்று கனவு கண்டிருந்தேன். அந்தக் கனவை நீயே அழித்து விட்டாய். இனி நீ உன் ஆசை நாயகனுடன், உன் பெரிய தகப்பனைக் கொன்ற துரோகியுடன், புரட்சி எதிரியுடன் சேர்ந்தே சாகலாம். அவன் மீது இன்னும் சில நிமிடங்களில் மலைப்புற்றின் கள்ளெறும்புகள் ஊறும். அவை அவன் மீது படர்ந்த பின் அவள் கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் உன் கை மீது ஏறும். எப்படியும் இன்று மாலைக்குள் உங்கள் இருவர் உடல்களிலும் கள்ளெறும்புக் கடிவிஷம் பாயும். அதனால் உங்கள் உடல்கள் ஊதும். கண்கள் கடியால் சிவந்து இரத்தம் பெருகும். உங்கள் இருவருக்குமே பரிதாப மரணம் ஏற்படும்."

இப்படிப் பேசிய முல்லைவேந்தன் முகத்தில் சினத்தாலும் வெறியாலும் ஏற்பட்ட விபரீதச் சாயை படர்ந்தது.

அதைக் கவனித்த பராந்தகன் இகழ்ச்சி நகை கொட்டினான்.

"முல்லைவேந்தா! மூர்க்கத்தனத்தில் உனக்கு இணை யாருமில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். முட்டாள்

தளத்திலும் உன்னை யாரும் மிஞ்ச முடியாதென்று இன்று புரிந்து கொண்டேன். நீ துவக்கியிருக்கும் புரட்சியைப் பாண்டியப் படைகள் ஒரே நாளில் நசுக்கிவிடும். நான் உயிருடன் இருப்பது ஒன்றுதான் உனக்குப் பாதுகாப்பு. முல்லையைச் சாக அடித்து விட்டு நீ பிழைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. அவளை முதலில் அவிழ்த்துவிட்டு அழைத்துப்போ. 'உன்னைக் கொல்வதில்லை' என்று உறுதி கூறுகிறேன்'' என்று சொன்னான் முறுவலின் ஊடே.

இதைக் கேட்ட முல்லைவேந்தன் பெரிதாக நகைத்தான்.

''பராந்தகா! கோழிகளை நாம் வெட்டும்போது அவை இப்படித்தான் கூச்சலிடும். இன்று நடுப்பகலில் உன்னைச் சந்திக்கிறேன். அதற்குள் உடல் முழுவதும் எறும்புகளால் சூழப்பட்டிருக்கும். நீ எனக்கு உயிர்ப்பிச்சை அளிப்பதாகக் கூறுவது எனக்கு வியப்பை அளிக்கிறது. நீ முதலில் உன் ஆசை நாயகியைக் காப்பாற்றப் பார்'' என்று கூறிவிட்டு தனது மகனைக் காலால் உதைத்துவிட்டுத் திரும்பினான்.

போகும்போது, ''பராந்தகா! கொட்டும் தளத்தில் இந்தப் பகுதியில் மிருகங்களும் வர அஞ்சும். மனிதர்கள் நிச்சயமாக வரமாட்டார்கள். புலிகளின் சஞ்சாரம் இங்கு உண்டு. அப்படி ஏதாவது வந்தால் அதற்கு உணவாக உன் புரவியைக் கட்டிப் போட்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் போனான்.

அவன் சென்றதும் பராந்தகன் சூழ்நிலையைக் கவனித்தான். எட்ட இருந்த பெரிய சிவந்த சுள்ளெறும்புகள் மெதுவாக சர்க்கரையை முகர்ந்தும் வாய்களில் கவ்விக் கொண்டும் வந்தன. முதலில் காவலன் தூவிய சர்க்கரைப் பாதையிலேயே வந்து பராந்தகன் மீது ஏறவும் தொடங்கின. முதல் முதலாக இரண்டு எறும்புகள் அவன் கைகளைக் கடித்தன. ஏதோ தேள் கொட்டியது போல் சுரீரென்றது. அதன் விளைவாகவோ

என்னவோ பாண்டிய இளவல் ''முல்லை!'' என்று குரல் கொடுத்தான்.

அவள் உடனடியாக பதில் சொல்லவில்லை. சில விநாடிகளுக்குப் பிறகு பதில் சொன்னபோது குரலில் வேதனை தோய்ந்து கிடந்தது. ''என்னால்தான் உங்களுக்கு இந்த ஆபத்து'' என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க.

''இல்லை, முல்லை! ஆபத்தை நான் தேடி வந்தேன். நீ எதற்கும் பொறுப்பாளியல்ல. உன் தந்தை இத்தனை கயவனாக இருப்பாரென்று எனக்குத் தெரியாது'' என்று பதில் சொன்னான் பராந்தகன்.

''அவர் எப்பொழுதும் மூர்க்கர். இப்பொழுது அவர் அடைந்துள்ள தலைமைப் பதவியை மூன்று நாள்கூட அவரால் நிர்வகிக்க முடியாது. படைகளை நடத்த அவருக்கு வழி தெரியாது. சீக்கிரம் எனது உதவி இல்லாவிட்டால் மூன்றே நாளில் அவர் யாராவது ஒரு வீரனால் வெட்டப்படுவார்'' என்று முல்லை கூறினாள்.

பராந்தகன் அடுத்து எதுவுமே பேசவில்லை. சுற்று முற்றும் பார்த்தான். பிறகு மார்புக்குக் குறுக்கே கிடந்த கயிற்றை அசைத்துப் பார்த்தான். கைக்கட்டுகளையும் சோதித்தான். ஒவ்வொரு கயிறும் பலமாகப் பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவற்றை அவிழ்க்க வழியில்லை என்பதைப் புரிந்து கொண்டான். கழுத்துக்குக் குறுக்கிலும் கயிறு இருந்ததால் தலைநிமிர்ந்தும் பார்க்க முடியவில்லை அவனால். தன் கதி நிர்க்கதியென்பதைப் புரிந்துகொண்டும் நம்பிக்கையை விடவில்லை பராந்தகன். நேரம் ஏற ஏற எறும்புகள் அவன் கைகள் மூலம் மார்பில் ஏறின. சில தொடைகளில் சஞ்சரித்தன. கண்களை இறுக மூடிக்கொண்ட பராந்தகன் ''முல்லை! உனக்கு ஊதத் தெரியுமா?'' என்று வினவினான்.

"அதில் என்ன கஷ்டம்?" என்ற முல்லை, தனது தலையைச் சிறிது உயர்த்திப் பார்த்தாள். பராந்தகன் உடல் மீது எறும்புகள் தவழ்ந்துகொண்டிருந்தன. அவை கடித்த இடங்களில் குருதி புள்ளியாகத் தெரிந்தது. இத்தனைக்கும் அவன் முகத்தில் வேதனை தெரியாததைப் பார்த்துப் பார்த்து வியந்தாள். "ஒரு மகாவீரன்தான் எந்த நிலையிலும் மனம் தளராதிருக்க முடியும்" என்று அவனைப் பற்றிப் பெருமைப்படவும் செய்தாள்.

"முல்லை! மெதுவாக ஊது!" என்றான் பராந்தகன்.

தனது கனி இதழ்களைக் குவித்து மெதுவாக ஊதினாள் முல்லை. "சரி, படுத்துக்கொள்" என்றான் பராந்தகன். முல்லை அவன் சொற்படி படுத்தாள். பராந்தகன் மனத்தில் ஓடும் எண்ணங்களை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. எதற்காக ஊதச் சொன்னான் என்பதும் விளங்கவில்லை அவளுக்கு.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு சிறுபறவை அடுத்திருந்த மரத்தின் மீது உட்கார்ந்தது. "முல்லை! மீண்டும் ஊது" என்றாள் பராந்தகன்.

முல்லை ஊதினாள் மீண்டும். அவள் ஊதலும் ஏதோ பட்சியின் கூவலைப் போல்தான் இருந்தது. இம்முறை மரத்தில் உட்கார்ந்த பறவையும் பதில் குரல் கொடுத்தது.

"பட்சி குரல் கொடுக்கக் கொடுக்க நீயும் ஊது" என்று பராந்தகன் சொன்னான்.

முல்லை மறுபடியும் ஊத, மரத்திலிருந்த பறவையும் பதில் குரல் கொடுத்தது. இம்முறை புரிந்துகொண்டாள் முல்லை. மரத்தில் உட்கார்ந்திருந்தது குயில் என்பதை. அடுத்து முல்லை ஊதாவிட்டாலும் குயில் "கூ...! கூ...!" என்று தொடர்ந்து இசை பாடியது.

பராந்தகன் மெல்ல நகைத்தான். "என்ன நகைக்கிறீர்கள்?" என்று வினவினாள் முல்லை.

"குயில் கூவுகிறது" என்றான் பராந்தகன்.

"ஆம். அதற்கென்ன?" என்றாள் முல்லை.

"இன்னும் சிறிது நேரத்தில் இங்கு பல குயில்கள் கூடும். பிறகு இசைக் கச்சேரிதான்" என்றான்.

"அதனாலென்ன பயன்?' 'என்று கேட்டாள் முல்லை.

பராந்தகனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் உதடுகளைப் பல எறும்புகள் கடித்துக் கொண்டிருந்தன. மெல்லச் சமாளித்துக் கொண்டு பேசினான்: "முல்லை! இந்த இசை முருகனை வரவழைக்கும். அல்லது அவன் மாமனார் வீட்டாரை வரவழைக்கும்" என்று.

எறும்புக்கடியின் வேதனையில் அவன் உளறுகிறான் என்று நினைத்தாள் முல்லை. அவன், "முருகா! முருகா! குயில் கூவுது பார்!" என்று முணுமுணுத்தான்.

முருகன் காதில் அவன் அழைப்பு விழுந்திருக்க வேண்டும். மரத்தின்மீது நாலைந்து குயில்கள் வந்து உட்கார்ந்து மாறி மாறிக் கூவத் தொடங்கின. அரை ஜாமம் ஓடியது. சுயநினைவை இழக்கும் நிலைக்கு வந்தான் பராந்தகன். திடீரென அவன் கண்கள் அவனையும் மீறித் திறந்தன. அவன் புரவி அவன் முகத்தை நக்கிக் கொண்டிருந்தது. அடுத்த நிமிடம் அவன் ஒரு கையின் கயிறு விலகியது. சுதந்தரக்கையை எடுத்த பராந்தகன் கழுத்தை நன்றாக எடுத்து மரத்திலிருந்த குயில்களை நோக்கினான். குயில்கள் விடாமல் கூவின. பராந்தகனின் வீங்கிய உதடுகளில் புன்னகை தவழ்ந்தது. "முல்லை! இன்னும் சில விநாடிகள்... உன் விடுதலைக்கு வழி பிறந்துவிட்டது" என்றான் பராந்தகன்.

காரணம் புரியவில்லை முல்லைக்கு. "குயில் கூவுது பார்" என்று அத்தனை வேதனையிலும் இசைத்தான் பராந்தகன்.

13. முல்லையின் கதை

கையின் கயிறு அவிழ்ந்ததும் குயில் பாட்டுப் பாடிக் கொண்டே இன்னொரு கையின் கயிற்றை விடுதலையடைந்த கையால் அவிழ்த்துக் கொண்ட பராந்தகன், மேற்கொண்டு பாட்டை நிறுத்திவிட்டு கழுத்துக்கும் மார்புக்கும் குறுக்கே கிடந்த கயிறுகளை அவிழ்க்கலானான். அவன் புரவியும் பேசாமலிருக்கவில்லை. 'உம் உம்' என்று கனைத்துக்கொண்டு அவன் கால் கயிறுகளைத் தனது பெரிய பற்களால் அவிழ்த்து விடவே சுதந்தரமாக எழுந்து நின்ற பராந்தகன், தனது உடல்மீது தவழ்ந்து கடித்துக் கொண்டிருந்த சுள்ளெறும்புகளைக் கைகளால் தட்டியும் தேய்த்துக் கொண்டும் நீக்கி விட்டு முல்லையை அணுகினான். அவள் கைகால் கயிறுகளை அவிழ்த்தான், சிறிது சிரமப்பட்டு. அவிழ்க்கும் கயிற்றின் அசைவுகளால், அவள் பூவுடலுக்குக் காயம் ஏதும் ஏற்படா திருப்பதற்காக மெல்ல அவள் கணுக்காலிலும் மணிக் கட்டுகளிலும் பலமாகப் பிணைக்கப்பட்டிருந்த தேங்காய் நார்க் கயிறுகளை அவிழ்த்த பின்பு, அவள் மார்புக்குக் குறுக்கே இருந்த கயிற்றை அவிழ்க்க அவள் முதுகில் கையைக் கொடுத்து தூக்கி இன்னொரு கையால் அதன் முடிப்பை நெகிழ்த்துப் பார்த்தான். வலுவான மணிமுடி போட்டிருந்ததால் "நண்பரே!" என்று குரல் கொடுக்க, அவன் புரவி நெருங்கி வந்தது. "இந்த முடியை அவிழ்த்துவிடும்" என்று அவள் கூறவே, பற்களைக் காட்டிக்கொண்டு அவள் மார்புப்புறத்தை நோக்கி வந்த புரவியைக் கண்டு திகிலடைந்த முல்லை, "வேண்டாம்! புரவியை அப்புறம் போகச் சொல்லுங்கள். அதன் பற்களைப் பார்த்தால் பயமாயிருக்கிறது" என்றாள்.

"பயப்படாதே! நண்பர் கடிக்கமாட்டார்" என்று பராந்தகன் உறுதி கூறினான்.

அந்த உறுதி அவளுக்குத் துணிவூட்டவில்லை. "எங்காவது இசகுபிசகாகப் பல் பட்டுவிட்டால் விகாரம். நீங்களே அவிழ்த்துப் பாருங்கள்" என்று முல்லை சொன்னாள்.

பராந்தகன் அவளை உற்று நோக்கிப் பிறகு கண்களைத் திருப்பிக்கொண்டான். "முல்லை, கயிற்று முடி, மணி முடியாக இருக்கிறது. எனது விரல்களுக்கு அசையவில்லை. முடியை அவிழ்ப்பதானால் நானும் பல்லைத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கும்" என்றான் சங்கடத்துடன்.

அவள் நகைத்தாள் மெதுவாக. "புரிகிறது உங்கள் நிருட்டுத்தனம்" என்று உள்ளூர நகைப்பின் ஊடே சொல்லிக் கொண்டே முல்லை, "புரவியின் பல்லுக்கு உங்கள் பல் பாதகமில்லை" என்று சொன்னாள்.

அவள் அந்த மார்பு முடிச்சை நோக்கிக் குனிந்தான். அவள் நாணத்தின் மிகுதியால் தனது முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள். அவள் மார்பை நோக்கிக் குனிந்து மார்பின் இரு எழுச்சிகளுக்கும் பாலம் போட்டது போல் தெரிந்த கயிற்றின் நடுவிலிருந்த முடிச்சைத் தனது பற்களால் கவ்விய பராந்தகன், மெதுவாக முடிச்சை அசைத்தான். ஒரு புறம் மெதுவாகப் பிரிய ஆரம்பித்தாலும் இன்னொருபுறம் அசைய மறுக்கவே, முடிச்சின் அந்தப் பிணைப்புடன் முகத்தை அவள் மார்புக்கு மத்தியில் நன்றாக அழுத்திய பராந்தகன் முடிச்சைப் பற்களால் பலமாக அசைத்தான். அந்த அசைப்பினால் மார்புக்குக் குறுக்கே இருந்த கயிறு அசைந்ததால் சிறிது இம்சைக்குள்ளான முல்லை, அந்த வேதனைக்கு மார்பில் அழுந்திக் கிடந்த அந்த ஆண் மகன் முகம் ஈடு செய்வதையும் நினைத்து ஓரளவு பூரிக்கவும் செய்தாள். மிகவும் சிரமப்பட்டு பற்களால் முடிச்சை அவிழ்த்து விட்ட பராந்தகன், மார்பின் குறுக்கிலிருந்த கயிற்றை இழுத்து எடுத்துப் போட்டான். போட்ட பின்பும் மார்பிலிருந்து எழுந் திருக்காமல் தலையை அப்படியே வைத்துக் கொண்டிருந்தான்.

அவன் சண்டித்தனத்தை முல்லை புரிந்துகொண்டதால் படுத்தபடியே முறுவல் பூத்தாள். ''இன்னமும் முடிச்சை அவிழ்க்கவில்லையா?'' என்று முல்லை வினவினாள் முறுவலின் ஊடே.

''அவிழ்ந்துவிட்டது'' என்றான் பராந்தகன் படுத்த நிலையிலே.

''பின் எழுந்திருப்பதுதானே?'' என்று முல்லை வினவினாள்.

''எழுந்திருக்க வேண்டியதுதான்'' என்ற பராந்தகன் சற்று புரட்டினான் தலையை.

''இன்னொரு தடவை தலையை உருட்டினீர்களோ பக்கத்திலிருக்கும் கல்லை எடுத்து மண்டையை உடைத்து விடுவேன்'' என்று முல்லை பொய்க் கோபத்தைக் காட்டினாள்.

பராந்தகன் சிரித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான் அவள் பக்கத்தில்.

''முல்லை! கொட்டும்தளக் கொலை முறைகளில் மண்டையை உடைப்பதும் ஒன்றா?'' என்று வினவினான். அவள் உடலை எடுத்து தனது மடியில் கிடத்தியும் கொண்டான்.

அவன் மடியில் கிடந்த முல்லை தனது மலர் விழிகளால் அவனைப் பார்த்தாள். அவன் உதடுகளிலும் முகத்திலும் சுள்ளெறும்புகள் கடித்ததால் ஏற்பட்ட இரத்தச் சிறு துளிகளையும் வீக்கத்தையும் கவனித்தாள். அவன் மேலுதட்டைவிடக் கீழ் உதடு நன்றாக வீங்கிப் பழம் போல் தொங்கிக் கொண்டிருந்தது. அதனால் துயரமடைந்த முல்லை, ''வீரநாராயணரே!'' என்று அவனது சிறப்புப் பெயரைச் சொல்லி அழைத்தாள்.

''என்ன முல்லை?''- வீரநாராயணன் என்ற பராந்தகன் வினவினான் வீங்கிய உதடுகளால்.

''உதடுகள் வீங்கிக் கிடக்கின்றன'' என்று அவனுடைய உதடுகளைத் தனது விரலொன்றால் தடவிக் காட்டினாள் முல்லை.

''ஆம்!'' பராந்தகன் அசட்டையுடன் சொன்னான்.

''வைத்தியம் செய்ய வேண்டும்!'' முல்லையின் குரலில் கவலை தெரிந்தது.

''செய்.''

''நானா!''

''ஆம்.''

''எனக்கு என்ன வைத்தியம் தெரியும்?''

''தெரிய வேண்டாம். முறை தெரிந்தால் போதும்.''

''என்ன முறை?''

''எங்கள் ஊரில் மருத்துவர்கள் ஒரு முறை சொல்வார்கள்...''

''சொன்னால் செய்கிறேன்.''

''நிச்சயம் செய்வாயா?''

''செய்கிறேன்.''

''உதட்டில் ஏதாவது காயமோ, புண்ணோ ஏற்பட்டால் இன்னொருவர் உதடுகளால் அதற்கு வைத்தியம் செய்ய வேண்டும்...'' என்று வாசகத்தை முடிக்கவில்லை அவள்.

''அப்படியா சமாச்சாரம்!'' என்று கூறிக்கொண்டு அவள் துள்ளி எழுந்தாள் அவன் மடியிலிருந்து.

அவனும் எழுந்தான் அவளுடன். அவள் இடையைப் பற்றி இழுத்துக்கொண்டு பக்கத்திலிருந்த புதரை நோக்கிச் சென்றான். அதன் மறைவில் அவள் பூவுடலைத் தனது கைகளால் ஆராய்ந்த வண்ணம் கேட்டான்: ''முல்லை! வைத்தியத்தை ஆரம்பிக்கலாமா?'' என்று.

அவள் தலையை உயர்த்தி தனது இதழ்களை அவனது இதழ்களுடன் கலந்தாள். ''பாண்டிய இளவலே! உங்களைக் கொல்லவும் உங்களுக்கு எதிராகப் புரட்சி செய்யவும் நான் சபதம் செய்திருந்தேன். புரட்சி ஓரளவு பயனளித்தது. இன்னும் இரண்டு மாதங்களில் இந்தத் தென்பாண்டிச்சீமை என் கைவசப்பட்டிருக்கும். ஆனால், நீங்கள் குறுக்கிட்டு என் சபதத்தை உடைத்தீர்கள். உறுதியையும் உடைத்தீர்கள்'' என்று கூறினாள், அவள் இதழ்களோடு தனது இதழ்களை இழைத்து மீண்ட இடைவெளி விநாடிகளில்.

பிறகு அவனது உதடுகளை விட்டு நீக்கி கண்களோடு கண்களைக் கலந்த வண்ணம் சொன்னாள், ''உறுதியைக் கைவிட்டிருக்க மாட்டேன். உங்களை என்னிடம் சிறையில் வைத்துக் கொண்டு ஆட்சியை நடத்தியிருப்பேன். மூர்க்கரான என் தந்தை சகலத்தையும் கெடுத்தார். இதனால் எங்கள் படை நிர்வாகம் பிளவு படும். எனது வீரர்கள், எனது தந்தையின் வீரர்கள் என்ற இரு பிரிவு புரட்சியை பலவீனப்படுத்தும். இது பாண்டிய நாட்டின் அதிர்ஷ்டம்'' என்று.

பராந்தகன் அவள் கண்களைக் கூர்ந்து நோக்கினான். ''முல்லை! உன்னிடம் சிறையிருப்பதில் எனக்கு எந்தக் கஷ்டமுமில்லை. சொல்லப்போனால் ஏற்கெனவே உன்னிடம் சிறைப்பட்டுவிட்டேன். உன் கண்களுக்கு அடிமைப்பட்டு விட்டேன். ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள் முல்லை. பாண்டிய மக்களிடம் எனக்கொரு கடமை இருக்கிறது'' என்று கூறினான். ''முல்லை! இனி நீ இங்கிருப்பது அபாயம். உன்னை என்னுடன் சேர்த்து சுள்ளெறும்புகளுக்கு உணவாகக் கட்டிப்போட்ட உன் தந்தை எந்தப் பாதகத்துக்கும் அஞ்சமாட்டார். ஆகையால் நீ இன்று இரவு மூண்டதும் புறப்பட்டு காயல் பட்டணம் போ. அங்குள்ள பரதவரை இங்கு அழைத்து வா'' என்றும் சொன்னான்.

''நான் அழைத்தால் அவர்கள் வருவார்களா?'' என்று முல்லை வினவினாள்.

பராந்தகன் தனது கச்சையிலிருந்த ஒரு மோதிரத்தை எடுத்து அவள் விரலில் போட்டான். ''இது பாண்டிய நாட்டு முத்திரை மோதிரம். இதைக் காட்டு பரதவர்களிடம். அவர்கள் புரிந்து கொள்வார்கள்'' என்று கூறிவிட்டு, ''இருட்டுக்குப் பிறகு நீ புறப்படுவது நல்லது. இன்று பகலை இந்தக் காட்டில் கழித்து விடலாம். ஏதாவது மறைவிடம் இருக்கிறதா?'' என்று வினவினான்.

''இருக்கிறது. இங்கிருந்து மலை வழியே சென்றால் பாழடைந்த கோட்டை ஒன்றிருக்கிறது. அதற்குப் 'பாண்டியன் கோட்டை' என்று பெயர். அதில் பிசாசுகள் நடமாடுவதாக ஒரு வதந்தி இருக்கிறது. அங்கு யாரும் வருவதில்லை'' என்றாள் முல்லை.

''சரி, வழிகாட்டு. அங்கு போவோம்'' என்று கூறிய இளவல், அவளைத் தூக்கித் தனது புரவியின் மீது உட்கார வைத்தான். அவள் புரவியை நடத்த மயக்கத்திலேயே பராந்தகன் நடந்தான். முல்லை, அடர்ந்த காட்டுப்பகுதிகளின் வழியாகப் புரவியைச் செலுத்தினாள். இடையே பல சிற்றருவிகளைத் தாண்டினாள். மலையின் ஓர் இடத்தில் பெரிதும் ஏற்றம் கண்டதும் புரவியிலிருந்து கீழே குதித்த முல்லை, ''சற்று இங்கேயே இருங்கள்'' என்று அவனை விட்டு பக்க வழி ஒன்றில் நடந்தாள். நீண்ட நேரத்துக்குப் பிறகு திரும்பி வந்து ''வாருங்கள்'' என்று அவனை அழைத்துக்கொண்டு மலை ஏற்றத்திலேயே சென்று ஒரு சரிவில் இறங்கினாள். அந்தச் சரிவில் எட்ட இருந்த ஓர் இடிந்த சிறு கோட்டையைக் காட்டி, ''அதுதான் பாண்டியன்கோட்டை'' என்றாள்.

கோட்டையைக் கூர்ந்து கவனித்த பராந்தகன் சில சீரழிந்த ராஜவம்சங்களைப் போல பாழடைந்த நிலையிலும் அது

கம்பீரமாக நிற்பதைக் கண்டான். அதன் கவர்களும் தூண்களும் இடிந்து விழுந்திருந்தும் நடுவில் இருந்த கட்டடம் மட்டும் அசையாமலிருப்பதைக் கண்டு மறைந்திருக்க அது நல்ல இடம் என்று எண்ணினான்.

திருப்திக்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்தாள். முல்லை அவன் கையைப் பிடித்து மலைச்சரிவில் இறங்கி அந்தப் பழைய கோட்டையை அணுகினாள். அவனை உள்ளே அழைத்துச் சென்று உட்புறத்திலிருந்த பெரிய மகாலையும் இரு அறைகளையும் காட்டினாள். அறைக் கதவு ஒன்றையும் திறந்தாள்.

பராந்தகன் பிரமித்தான் உட்புறத்தை நோக்கி. அறையில் சகல வசதிகளும் இருந்தன. பெரும் சந்தனக்கட்டிலொன்றும் பஞ்சணையும் சின்னஞ்சிறு மஞ்சங்களும் காணப்பட்டன. பளிங்குக்கிண்ணமொன்றும் சில பளிங்குக்குப்பிகளும் ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்தன. குப்பிகள் மதுக் குப்பிகளென்பதைப் புரிந்து கொண்டான் அவன். அறைக்குள் நுழைந்து ஒரு குப்பியை எடுத்து அதிலிருந்து மதுவையும் உறிஞ்சினாள். சிறிது உறிஞ்சி நாக்கை நொட்டைவிட்டு "முல்லை! இது பாழடைந்த கோட்டையாயிருக்கலாம். ஆனால், இதை யாரோ அடிக்கடி உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்" என்றான் பராந்தகன்.

"யாரென்று ஊகியுங்கள் பார்க்கலாம்" என்ற முல்லை, "முதலில் உணவருந்துவோம். நீங்கள் நீராடி வாருங்கள்" என்று கூறி கோட்டைக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருந்த அருவியைக் காட்டினாள். அடுத்த அறைக்குள் நுழைந்து ஒரு சேலையை எடுத்துக்கொண்டு தானும் விரைந்தாள் அருவியை நோக்கி.

இருவரும் நீராடியதும் அவள் அந்தக் கோட்டையில் பாழடைந்த பகுதியொன்றிலிருந்த சில கலங்களை எடுத்து உணவு தயாரித்து அவனுக்கு அளித்துத் தானும் போசனத்தை

முடித்தாள். பிறகு அந்தக் கோட்டையின் வாயிற்படியில் உட்கார்ந்துகொண்டு அதன் கதையை விவரிக்க முற்பட்டு "இங்குதான் நான் பிறந்தேன்" என்று தொடங்கினாள்.

பராந்தகன் பதிலேதும் சொல்லவில்லை. அவளே பேசினாள். கதையை விவரித்துக்கொண்டே போனாள். கதை மிக விசித்திரமானது. விபரீதமும் அதில் கலந்திருந்தது. முல்லை புரட்சிக்கு முற்பட்ட காரணமும் கதையில் விரிந்தது. கனவில் சில உண்மைகளைக் காண்பவன் போல், கதையைக் கேட்டான் பராந்தகன். புரட்சியை அடக்க தான் வந்தது சரிதானா என்ற சந்தேகமும் அவனுக்கு வந்தது. முல்லையைத் திரும்பி நோக்கினான். கண்களை அவள் மூடியிருந்தாள். மாலை வெயில் அவள் முகத்தில் அடித்து ஏதோ மோகினி போல் அவளுக்கு மெருகு ஊட்டியிருந்தது. உதடுகள் மட்டும் குவிந்தும் விரிந்தும் கதை சொல்லின.

14. ஆனந்த அருவி

குயிலின் குரலைப் போலவே மென்மையான குரலைப் படைத்த முல்லை, குயில் அலகு திறந்து செவ்விய வாயைக் காட்டிக் காட்டிக் கூவுவதைப் போலவே, தனது செவ்விய இதழ்களைத் திறந்து குவித்துக் குவித்துப் பவளவாயால், இன்பக்குரலால், சொன்ன துன்பக்கதையை மிகவும் கவனமாகக் கேட்கலானான் பராந்தகபாண்டியன். பாழடைந்த கோட்டையின் படியில் பராந்தகன் பக்கத்தில் உட்கார்ந்து கண்களை மூடி சிந்தனையைப் பிற்காலத்துக்கு ஓட்டிய அந்தப் பைங்கிளி, "இங்குதான் நான் பிறந்தேன்" என்று தனது கதையைத் துவங்கியதும் பாண்டிய இளவல், "இந்தக் கோட்டை பாக்கியம் உடையது" என்றான்.

இல்லை என்பதற்கு அடையாளமாக முல்லை தலையை இருபுறமும் ஆட்டி, "பாண்டிய இளவலே! இதற்கும் பாக்கிய

மில்லை. எனக்கும் பாக்கியமில்லை. ஏனென்றால், இந்தக் கோட்டையில் நான் பிறந்த அன்றுதான் காட்டுவாசிகள் இதைத் தாக்கினார்கள். தாக்கி இதன் சுவர்களை இடித்தார்கள். அப்பொழுதும் இந்தக் கோட்டை பாண்டியர் படையால் பாதுகாக்கப்படவில்லை. அனாதரவாகத்தான் கிடந்தது. ஆகவே இதைத் தாக்குவதும் அழிப்பதும் காட்டுவாசிகளுக்கு ஒரு கஷ்டமான விஷயமாக இல்லை.

எல்லைப் பாதுகாப்புக்காகக் கட்டிய இந்தக் கோட்டையைப் பாண்டிய மன்னர்கள் ஏன் அனாதரவாக விட்டிருந்தார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. நான் பிறந்த இரவில் இது பலமாகத் தாக்கப்பட்டது. சுமார் நூறு காட்டுவாசிகள் இதைச் சூழ்ந்துகொண்டார்கள். கதவு மிக பலமாக இருக்கவே சுவர்களை உடைத்தார்கள். மாடித் தாழ்வரைக்கு ஓடி அங்கிருந்த கைப்பிடிச் சுவரை உடைத்துத் தள்ளினார்கள். முதல் இரண்டு அறைகளும் தவிடுபொடியாக்கப்பட்டன. அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ பாண்டியர் படை ஒன்று வந்தது. அதைத் தலைமை வகித்து வந்த என் பெரிய தந்தை ரகுநாதபாண்டியர் அவர்களில் பலரைக் கொன்றார். அவர்கள் துரத்தப்பட்ட பின்பு உள்ளே வந்து நான் பிறந்திருப்பதைக் கேட்டு மகிழ்ந்தார். பிறகு அறைக்கு வெளியிலிருந்தபடியே, 'இவள் தந்தை எங்கே?' என்று தம்முடன் வந்த வீரர்களில் ஒருவனைக் கேட்டார்.

'தெரியாது' என்றான் அந்த வீரன்.

'பிரசவ சமயத்தில் மனைவியை விட்டு எங்கே ஓடினான் அவன்?' என்று சீறினார் பெரிய தந்தை.

'தெரியவில்லை' என்ற பதில்தான் வந்தது.

'சரி. அவனைப் பிடித்து அனுப்புகிறேன். அதுவரை இந்தக் கோட்டையைக் காத்து வாருங்கள்' என்ற ரகுநாதபாண்டியர் சிலரைக் காவல் வைத்து விட்டுப் போய்விட்டார்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு என் தந்தை இருவீரர்களால் கோட்டைக்கு இழுத்து வரப்பட்டாராம். அவர் மிகவும் குடித்து விட்டிருந்தாராம். அவரை எனது பெரிய தந்தையின் ஆட்கள் இந்தக் கோட்டைப் படிகளில் தள்ளிவிட்டுப் போனார்களாம்.

இதையெல்லாம் பிற்காலத்தில் என் தாய் சொன்னாள். குடிகாரனான என் தந்தையை, நான் வெறுத்தேன். என் பிரசவத்தின் காரணமாக ஏற்பட்ட இரத்தக் குறைவால் நலிந்த என் தாயார் எனது எட்டாவது வயதில் காலமாகிவிட்டாள். அதற்குப் பின்பு என் தந்தை என்னை எனது பெரிய தந்தையிடம் அனுப்பி விட்டார். சில ஆண்டுகள் காயலில் பெரிய தந்தையின் ஆதரவில் வளர்ந்தேன். எனது பெரிய தந்தை எனக்குச் சகல வித்தைகளையும் பயில்வித்தார். போர்ப் பயிற்சியும் அளித்தார்.

'இது எதற்கு?' என்று நான் முதலில் கேட்டேன்.

'பொறுப்பில்லாத குடிகாரனுக்குப் பிறந்திருக்கும் நீ உன்னைப் பாதுகாத்துக் கொள்ள இந்தப் பயிற்சி உதவும்' என்றார்.

நான் வாட்போரிலும் வில்வித்தையிலும், குதிரை ஏற்றத்திலும் பயில்விக்கப்பட்டேன். அதற்குப் பிறகு என் பெரிய தந்தை என்னைக் கொட்டும்தளத்திற்கு அனுப்பினார். அனுப்பும்போது சொன்னார்:

'முல்லை! கொட்டும்தளத்தில் தலைவனாக உன் தந்தை இருக்கிறான். குடியை இன்னும் விடவில்லை. படைகளை குடிகாரன் நிர்வகிக்க முடியாது. நீ அவனுக்கு உதவியாக இருந்து அங்குள்ள காட்டுவாசிகளையும் படையில் சேர்த்துப் பயிற்சி அளித்துவிடு. அப்படிக் கொட்டும்தளம் வலுப்பட்டால் இந்தக் காயலுக்கும் அதற்கும் தாமிரபரணிக் கரையோரமே சிறு சிறு படைவீடுகளை அமைத்து இரண்டையும் ஒரு சங்கிலித்

தொடர் ஆக்கலாம். பிறகு பாண்டிய மகாராஜா நம்மிடம் எச்சரிக்கையாக இருப்பார்' என்று கூறினார்.

நான் திரும்பினேன், கொட்டும்தளத்திற்கு. பெரிய தந்தை கூறியபடி எனது தந்தையின் நிர்வாகத்தை மெல்ல மெல்ல என் கைவசமாக்கிக் கொண்டேன். கொட்டும்தளம் பெரிய படைத்தளமாகியது. காட்டுவாசிகளை வீரர்களாக்கினேன். வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்தது போல் என் பெரிய தந்தை உங்களால் கொல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆத்திரமுற்று உங்களை அழிக்க சபதம் செய்தேன். என் தந்தை மூர்க்கராதலாலும் குடிகாரன் ஆகையாலும் அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

மெல்ல மெல்லப் புரட்சிப்படையைப் பாண்டிய ராஜ்யத்தின் எல்லைகளில் ஊடுருவ விட்டேன். கொட்டும் தளமே பாண்டியப் பகுதிதானே! அந்தப் பகுதியை விரிவடையச் செய்வது அதிகக் கஷ்டமாயில்லை. சீக்கிரம் படையும் வலுத்தது. புரட்சியும் வலுத்தது. பாண்டிய மன்னனும் இதை அடக்கத் தீர்மானித்ததாகக் கேள்விப்பட்டேன். ஆகையால் பாண்டியத் தலைநகருக்கு அருகிலும் நடமாடினேன். மீதி உங்களுக்குத் தெரியும். என் லட்சியத்தைத் துறந்தேன். என்னைப் பெற்ற தந்தைக்கும், என்னை வளர்த்த பெரிய தந்தைக்கும் துரோகியானேன். உங்களிடம் என் இதயத்தைப் பறிகொடுத்தேன். பிறந்த வீட்டுக்குக் கோடரிக்கொம்பானேன்'' - இப்படிப் பேசிய முல்லை தனது தலையை முழந்தாள்களில் புதைத்துக்கொண்டாள். துன்பத்தால் துக்கம் பீறிட்டு அவளைக் குலுங்க அழவைத்ததால் அவள் உடல் ஆடியது.

அவள் பூவுடலை இறுக ஆதரவுடன் அணைத்தான் பராந்தகன். அவன் நினைப்பெல்லாம் காயலையும் ரகுநாத பாண்டியனையும் நோக்கிச் சென்றது.

அவன் செய்த ராஜதுரோகத்தை முல்லை அறியாததால் அதைப் பற்றி ஏதும் சொல்ல முடியவில்லை பாண்டி

இளவலால். ரகுநாதபாண்டியன் முல்லையை ஒரு கருவியாக உபயோகித்து கொட்டும்தளத்திலிருந்து காயல்வரை தொடர்ச்சியான அரண் அமைத்து பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை விழுங்கப் பார்த்த திட்டத்தை முல்லையின் கதையால் அறிந்து, அவள் பெரிய தந்தையின் துரோகம் வரவர அதிகமாவதை எண்ணி வருந்தினான்.

முல்லையைக் காத்து வளர்த்து ஒரு பெரிய வீராங்கனையாக்கிய ஒரு நல்ல காரியத்துக்கு ரகுநாதனை மன்னித்துக் கூட இருக்கலாம் என்று அந்தச் சந்தர்ப்பத்தில் எண்ணினான். இத்தனைக்கும் ரகுநாதபாண்டியனைத் தான் கொல்லவில்லையென்பதும் அவன் தற்கொலை செய்துகொண்டானென்பதையும் முல்லை அறியாததால் அவளிடம் அதையும் சொல்லித் துன்பமுட்களால் குத்தப்பட்டுள்ள அவள் இதயத்திற்கு மேலும் வேதனையை வளர்த்த இஷ்டப்படாத பராந்தகன், முல்லையை அணைத்த வண்ணமே ஏதும் பேசாமல் அவள் முதுகைத் தடவிய வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

நேரம் ஓடியதால் மாலைக் கதிரவன், மலை வாயிலில் விழுந்து இரவின் ஆட்சி தொடங்க இடம் தந்தான். இருள் மூள முற்பட்டதும் மெல்ல முல்லையின் தலையை நிமிர்த்திய பராந்தகன் அவள் கண்களைத் துடைத்து நெற்றியில் தனது இதழ்களைப் புதைத்தான். ''முல்லை! நீ சென்று முகம் கழுவி நெற்றியில் குங்குமம் இட்டு விளக்கை ஏற்று'' என்றான்.

முல்லை மெதுவாக எழுந்து உட்புறம் சென்றாள். சில விநாடிகளில் கோட்டையின் உட்புறத்தில் விளக்கொன்று மினுமினுத்தது. அதை ஒரு பிறையில் வைக்க கையை உயர்த்திய முல்லையின் வதனத்தின் மீது விளக்கொளி விழ, அவள் குங்குமத்திலகம் பளிச்சென்று தெரிந்தது, பாண்டிய இளவலின் கண்களுக்கு. அதைக் கண்ட அவனும் எழுந்து உள்ளே சென்று விளக்கு வைத்துவிட்டுத் திரும்பிய

முல்லையை, "முல்லை! நீ எத்தனை அழகாய் இருக்கிறாய் தெரியுமா?" என்று கேட்டான்.

அவன் முகத்தில் விரிந்த ஆசையை கவனிக்கவே செய்த முல்லை மெல்ல புன்முறுவல் செய்து, "நான் எப்பொழுது கிளம்பட்டும்?" என்று கேட்டாள்.

அவள் துன்பக்கதையில் தனது திட்டத்தை அடியோடு மறந்துவிட்ட பராந்தகன், "எங்கு?" என்று வினவினான்.

"அதற்குள் மறந்துவிட்டீர்களா? என்னைக் காயலுக்குப் போகச் சொல்லவில்லை...?" என்று வினவினாள்.

"ஆம். ஆம்! சொன்னேன்" என்று விழித்துக்கொண்ட பராந்தகன், "முல்லை! முதலில் நாம் இரவு உணவை முடித்துக்கொள்வோம். பிறகு உன்னை அனுப்பி வைக்கிறேன்" என்றான்.

"என்னை அனுப்பி வைப்பாளேன்? எனக்குப் போகத் தெரியாதா என்ன? இந்தக் காட்டுப்பகுதியில் எனக்குத் தெரியாத வழி ஏது?" என்று வினவினாள் முல்லை.

"உண்மைதான். இருப்பினும் புறப்பட நேரமிருக்கிறது. "முதலில் பெண்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்" என்றான் பராந்தகன்.

"பெண்கள் செய்ய வேண்டிய வேலையா? அப்படி ஏதாவது தனித்து இருக்கிறதா?" என்று கேட்டாள் முல்லை.

"ஏனில்லை? பெண்களின் முதல் இடம் சமையற்கட்டு... கணவனுக்கு உணவு தயாரித்தல்..."

"பிறகு?"

"கணவனுக்குப் பணிவிடை செய்தல்."

"பிறகு?"

"மாலையில் அவன் வரும்போது இன்முகம் காட்டி வரவேற்று உணவு படைத்தல்."

"பிறகு?"

இதற்குப் பதில் சொல்லவில்லை பராந்தகன். அவனும் பதிலை எதிர்பார்க்கவில்லை. இருவர் கண்களும் கலந்தன. அடுத்த விநாடி இருவருமே பெரிதாக நகைத்தார்கள். அந்த நகைப்பிலும் அவள் கண்களில் நீர்த் துளிகள் எட்டிப் பார்த்தன. அது அன்பு துளிர்த்த துக்கக் கண்ணீரல்ல, ஆனந்தத்தின் அருவி.

அந்த அருவியின் துளிகள் அவள் கன்னங்களில் வழிந்தோடியதைப் பராந்தகன் தனது உதடுகளால் துடைத்தான். "சரி, சரி. சீக்கிரம் உணவு தயாராகட்டும்" என்று அதட்டினான்.

அந்த அதட்டல் அவளுக்கு மிக இன்பமாயிருந்தது. அவளை வாழ்க்கையில் யாரும் அதட்டவில்லை. குழந்தைப் பருவத்தில் தாயின் அன்பை அனுபவித்திருந்தாள். பிறகு தந்தையின் குடி உளறல்களைக் கேட்டிருக்கிறாள். பிறகு பெரிய தந்தையின் செல்லத்தை அனுபவித்திருக்கிறாள். ஆனால், ஒரு புருஷனின் அதட்டல்! அது எத்தனை இன்பமாயிருந்தது அவளுக்கு! அந்த அதட்டல்கூடப் போதவில்லை அவளுக்கு. "அவன் ஏன் என்னை ஒரு முறை அறையைக் கூடாது?" என்று தன்னைக் கேட்டுக்கொண்டு உள்ளே சென்றாள்.

உள்ளே உணவுப்பொருள்கள் அதிகமில்லையென்றாலும் தான் வேட்டையாட வந்த சமயத்தில் உணவருந்த வைத்திருந்த மாவுகளைக் கொண்டு களியொன்று கிளறினாள். அத்துடன் சிறிது தேனை ஊற்றி அவனுக்கு அளித்தாள். அரச உணவை விட இன்பமாக அதைப் பராந்தகன் அருந்தினான். பிறகு அவளும் அருந்தியதும் அருவியின் குளிர் நீரை இருவருமே பருகினர். முதலில் உள்ளே வந்த பராந்தகன் அங்கிருந்த இரு அறைகளில் ஒன்றில் மல்லாந்து படுத்தான். படுத்து கூரையை நோக்கி ஏதோ சிந்திக்கலானான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் உள்ளே வந்த முல்லை அவன் படுத்துக் கிடப்பதைக் கண்டு, ''என்ன இதற்குள் படுத்து விட்டீர்கள்?'' என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை. ''நான் கிளம்ப நேரமாக வில்லையா?'' என்று இரண்டாவது கேள்வியைத் தொடுத்தாள்.

''அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன்'' என்றான் பராந்தகன்.

''எதைப் பற்றி?'' அவள் குழப்பத்துடன் கேட்டாள்.

''நீ போக வேண்டுமா என்பதைப் பற்றி'' என்றான் அவன்.

''திட்டம் மாறிவிட்டதா?''

''ஆம்.''

''வேறென்ன வேலை எனக்கு?''

பராந்தகன் சிந்தித்தான். ''சொல்கிறேன்'' என்றான். அவன் சொன்னான். அவள் கண்களில் ஆனந்த அருவி மீண்டும் துளிர்த்தது.

15. வலையில் சிக்கிய புறா

பஞ்சணையில் படுத்துறங்கும் பழக்கமுள்ள பாண்டிய இளவலுக்குப் பாழடைந்த கோட்டை அறையின் தரையே இன்பமாயிருந்ததால், நன்றாகக் கைகால்களை நீட்டியே அவன் படுத்துக் கிடந்தான். முல்லை பக்கத்தில் உட்கார்ந்திருந்தாலும் அவள் இதயத்தில் எட்டிப்பார்த்த இன்பம் இமைகளைத் திறந்து கண்களில் ஆனந்த பாஷ்யத்தை சிருஷ்டித்தாலும் அவன் இன்பம் எல்லையை மீறியே இருந்ததால் அந்த அறையின் தரைப்பூச்சு சில இடங்களில் நீங்கி ஓரிரண்டு கற்கள் அவன் முதுகில் குத்தியுங்கூட அவன் சிறிதும் துள்ளப்பட்டானில்லை. ஆனால், தன் உரையாடலைத் தவறாகப் புரிந்துகொண்டு தனது அணைப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்த முல்லையை

நினைத்து மட்டும் சிறிது துன்பச் சிதறல்களைச் சித்தத்தில் சிதற விட்டான். அவள் காயலுக்குப் போக வேண்டாமென்றும் வேறு வேலை இருக்கிறதென்றும் தான் சொன்னதற்கு அவள் காதல் வகுத்துக் கொண்டதை எண்ணி, 'பாவம்! பிறந்தது முதல் மகிழ்ச்சியை அறியாதவள். எதிலும் ஓர் இன்ப நிலையை சிருஷ்டித்துக் கொள்ளத் துடிக்கிறாள்' என்று உள்ளூர சொல்லிக்கொண்டான்.

அவள் ஏதோ சிந்தனைவசப்பட்டதைப் பார்த்த முல்லை, ''ஏதோ யோசனை பலமாயிருக்கிறது!'' என்றாள். அவன் மார்பில் முகத்தையும் புதைத்துக் கொண்டாள்.

அவள் குழலை அவன் கோதி விட்டான் ஆதரவுடன். ''ஆம் முல்லை! இது யோசிக்க வேண்டிய சமயம்தான்'' என்ற பராந்தகன் சிந்திக்கவில்லை, அவளுக்குப் பதில் சொல்ல. ''முல்லை! உன் கதை என் மனத்தை உலுப்பிவிட்டிருக்கிறது'' என்றான் துன்பம் துளிர்த்த குரலில்.

''உம்.'' அவன் மார்பில் படுத்தபடியே அவள் 'உம்' கொட்டினாள்.

''வாழ்க்கையில் துன்பத்தைத் தவிர நீ வேறெதையும் கண்டதில்லை'' என்றான் பாண்டிய இளவல். குழலைத் தடவிய அவன் கை அவள் முதுகில் இறங்கியது.

''சிலர் துன்பத்திற்காகவே பிறக்கிறார்கள்'' என்று முல்லை கசந்து பேசினாள்.

''சிறு வயதில் துன்பப்பட்டால் பிறகு இன்பத்தை இயற்கை கொடுக்கிறது'' என்ற பராந்தகன் ''முல்லை, உன் துன்பத்தைத் துடைக்க நான் இருக்கிறேன். எந்தக் கஷ்டத்தையும் என் தலையில் தள்ளிவிடு'' என்றும் சொன்னான். அவன் கை முதுகிலிருந்து இடைக்கும் அதற்கு அப்பாலும் இறங்கி அவன் சொற்களை உறுதி செய்தது.

அவன் கை அளித்த ஆறுதலால் ஆறுதலைத் தொடர்ந்த இன்ப உணர்ச்சிகளால் தடுமாறிய முல்லை அவன் மார்பில் லேசாகப் புரண்டாள். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. சிறிது மௌனத்திற்குப் பிறகு பராந்தகனே பேசினான். "முல்லை! நீ காயல்பட்டினம் போக வேண்டாம். இங்கே இருந்துகொண்டே உன் தந்தையை எதிர்ப்போம்" என்றான்.

"எப்படி?" என்று முல்லை கேட்டாள்.

"நீ உன் தாயை இழந்த பிறகு உன்னை வளர்த்தது யார்?" என்று வினவினான் பராந்தகன்.

"என் பெரிய தந்தை."

"உடனேயா அழைத்துப் போனார்?"

"இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு."

"இடையில்?"

முல்லை சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினாள். முடிவில், "யாருமில்லை" என்று சொன்னாள்.

"யாராவது இருந்திருக்க வேண்டும் முல்லை. தாய் போய் விட்டாள். தந்தை குடிகாரன். இந்த நிலையில் யாரோ ஒரு செவிலித்தாய் அல்லது உன் தாயின் வர்க்கத்தார் அல்லது நண்பர்கள் யாராவது உனக்கு ஆதரவு அளித்திருக்க வேண்டும். சிந்தித்துப் பார்" என்றான் பராந்தகன்.

முல்லை துக்கத்தால் பெருமூச்சு விட்டாள். "ஒருவர் இந்தக் கோட்டையிலேயே இருந்தார். அவர்தான் வளர்த்தார். அவர் இப்பொழுது இல்லை" என்றாள் பெருமூச்சின் ஊடே.

"இறந்துவிட்டாரா?"

"இல்லை. மறைந்துவிட்டார்."

"எப்பொழுது? ஏன்?"

"என் தந்தையின் கொடுமையைத் தாங்க முடியாமல் அவரை எதிர்த்துப் பேசினார். சிறு வயதில் என்னைத் தந்தை

குடிவெறியில் பலமுறை அடித்தது உண்டு. அப்படியொரு சமயத்தில் அவர் தந்தையைக் கண்டித்து அடிக்க ஓங்கிய கையை பலவந்தமாகப் பிடித்தார். பிடித்துத் தந்தையைச் சுழற்றிக் கீழே தள்ளினார். மறுநாள் அவரைக் கொன்றுவிடுவதாகத் தந்தை மிரட்டினார். அன்றிரவு என் தந்தையை எதிர்த்தவர் என்னையும் தூக்கிக்கொண்டு மறைந்துவிட்டார். சில நாள்களுக்கெல்லாம் நான் காயலில் பெரிய தந்தையிடம் இருந்தேன்..." என்ற முல்லையை இடைமறித்த பராந்தகன், "உன் தந்தையல்லவா உன்னைப் பெரிய தந்தையிடம் அனுப்பியதாகச் சொன்னாய்?" என்று வினவினான்.

"சொன்னேன். தந்தையைக் காட்டிக்கொடுக்காதிருப்பதற்காக. தந்தை என்ற பாசம் விடவில்லை எனக்கு" என்றாள் முல்லை.

"உன் தந்தைக்கு அந்தப் பாசத்தைக் காணோமே?" என்று கேட்டான் பராந்தகன்.

"பாசமில்லை என்று சொல்ல முடியாது. எல்லாம் மது செய்யும் வேலை. குடியின் ஆட்சி இல்லாத காலங்களில் அவர் என் மீது அன்பு காட்டியும் இருக்கிறார். ஆனால், அந்தச் சமயங்கள் மிகச் சொற்பம்" என்றாள் முல்லை.

பராந்தகன் படுத்த நிலையிலிருந்து அவளையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

"முல்லை! உன்னை முதலில் வளர்த்தவர் பெயர் சாம்பன் இல்லையே...?" என்று சர்வசாதாரணமாகக் கேட்டான் பாண்டிய இளவல்.

அவன் சாதாரணமாகத்தான் கேட்டான். ஆனால், அவன் கேள்வி அவளுக்குப் பெரு வியப்பையும் பேரதிர்ச்சியையும் தந்ததால் வியப்பும் அதிர்ச்சியும் கலந்த கண்களை அவனை நோக்கி உயர்த்தினாள் முல்லை. "நீங்கள் மந்திரவாதியில்லையே?" என்று வினவவும் செய்தாள்.

"இல்லை."

"பின் எப்படி அவர் பெயர் உங்களுக்குத் தெரிந்தது?"

"ஒரு பெரிய புரட்சிக்காரியை அடக்க வருபவன் அவளைப் பற்றி ஏதும் அறியாமலா வருவான்?"

இதைக் கேட்ட முல்லை நகைத்தாள். "வீரரே! நீர் திடீரென்று புறப்பட்டிருக்கிறீர், மதுரை அரண்மனையை விட்டு. ஆகையால் விசாரிக்க நேரமில்லை. சொல்லுங்கள் எப்படித் தெரியுமென்று" என்று கேட்டாள் நகைப்பின் ஊடே.

"அந்தச் சாம்பனை நான் ஒரு முறை உக்கிரன்கோட்டையில் சந்தித்தேன். ஏதோ பைத்தியம் பிடித்த மாதிரி இருந்தார். அங்கு விசாரித்ததில் தனது பெண்ணைப் பறிகொடுத்ததால் அப்படி இருக்கிறாரென்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். நான் விசாரித்த மறுநாள் அவர் அந்தக் கோட்டைப்புறத்தில் காணோம். எங்கு போனாரென்று யாருக்கும் தெரியவில்லை" இதைத் தீவிர சிந்தனையுடன் சொன்னான் பராந்தகன். மேலும் சொன்னான், "அந்தச் சாம்பன் இங்குதான் ஏதாவது ஓர் இடத்தில் இருக்க வேண்டும்" என்று.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் முல்லை.

"பெற்ற பாசமாவது விடும். ஆனால், வளர்த்த பாசம் யாரையும் விடாது. உன்னை வளர்த்துக் காத்து பெரிய தந்தையிடம் சேர்த்த மனிதர் நீ காயலில் வளர்ந்த போதும் வித்தை கற்ற போதும் பார்த்திருப்பார். இங்கும் உன்னைத் தொடர்ந்து வந்திருப்பார்" என்ற பராந்தகன், "அவரைக் கண்டுபிடித்தால் நமது காரியத்தில் முக்கால் முடிந்தது" என்றும் சொன்னான். மேலும் கேட்டான், "முல்லை! உன் தந்தையின் வீரர்களில் உன் கட்சிக்கு வரக்கூடிய வீரர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?" என்று.

"எத்தனையோ பேர் இருக்கிறார்கள்."

"அவர்களில் சிலரையாவது இங்கு வரவழைக்க முடியுமா?"

"முடியும்."

"அப்படியானால் அழைத்து வா" என்ற பராந்தகன், "இரவோடு இரவாகப் புறப்படு. நானும் துணை வருகிறேன்" என்றாள்.

அவன் சொற்படி கிளம்பினாள் முல்லை. பராந்தகன் தனது புரவி மீது அவளை ஏற்றி, அவள் பின்புறத்தில் தானும் தாவி உட்கார்ந்து புரவியைத் தட்டிவிட்டான். கடிவாளத்தை முல்லையின் கையில் கொடுத்து, "கடிவாளத்தை அதிகமாக இழுக்க வேண்டாம். லேசாகத் திருப்பினால் போதும்" என்றும் கூறினான்.

புரவியைத் திறமையுடன் செலுத்திய முல்லை பற்பல குறுக்குவழிகளில் அதை நடக்கவிட்டு கொட்டும்தளத்தின் கடைசி வீதியை அணுகினாள். "நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று கூறிவிட்டு அந்த வீதியின் வீடுகளின் பின்புறமிருந்த காட்டின் ஊடே நடந்து ஒரு மரத்தின் மறைவில் நின்று மெல்ல குயிலின் ஓசையைக் கிளப்பினாள். ஒரு முறைக்கு இருமுறை அப்படிக் கூவியதும் அந்த வீடுகளொன்றின் கொல்லைப்புறக் கதவு ஒன்று திறக்கப்பட்டு ஒருவன் வெளியே வந்தான். அப்படியும் இப்படியும் எச்சரிக்கையுடன் பார்த்துவிட்டு முல்லை இருந்த மரத்தை நோக்கி நடந்து வந்தாள். மரத்தருகில் வந்ததும், "அம்மணி! எங்கிருக்கிறீர்கள்?" என்று வினவினான் மெதுவாக.

மறைவிடத்திலிருந்து வெளியே வந்த முல்லை, "இப்படி வா!" என்றாள்.

அவள் அழைப்பை ஏற்று வந்த அந்த மனிதன், "அம்மணி! உங்கள் தந்தை உங்களுக்கு இழைத்த தீர்ப்பைப்பற்றி வீரர்கள் பலர் கொதித்திருக்கிறார்கள்" என்றான்.

"அவர்களில் நாலைந்து பேரை அழைத்து வர முடியுமா?" என்று வினவினாள் முல்லை.

"முடியும்" என்றான் அவன்.

"சரி. அழைத்து வா" என்றாள் முல்லை.

"உத்தரவு" என்று கூறிச் சென்ற அவன் திரும்ப நீண்ட நேரமானதால் முல்லை தான் நின்ற மரத்தடியில் உட்கார்ந்து கொண்டாள். வெகு சீக்கிரம் பல வீடுகளிலிருந்து வீரர்கள் கிளம்புவது தெரிந்தது அவளுக்கு. அவர்கள் எல்லோருமே எச்சரிக்கையுடன் வந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் உருவிய வாளிருந்தது. முல்லை உட்கார்ந்திருந்த மரத்தை அணுகியதும் அவளை எல்லோருமே வணங்கினார்கள். வணங்கியபடியே சூழ்ந்துகொண்டார்கள்.

அந்தச் சமயத்தில் பலமான சிரிப்பு ஒன்றும் கேட்டது. திடீரென பந்தமொன்று ஏற்றப்பட்டு காட்டுப்பகுதியில் வெளிச்சம் ஏற்பட சுற்றும் முற்றும் நோக்கினாள் முல்லை.

பந்தத்தை ஏற்றி நின்றான் முல்லைவேந்தன்.

"நீ இப்படி ஏதாவது குறுக்குவழியில் இறங்குவாயென்று தெரியும் எனக்கு."

"டேய்! இழுத்து வாருங்கள் இவளை!" என்று கடுமையாக உத்தரவும் இட்டான்.

"உன் ஆசைநாயகனை இழுத்து வர வீரர்களைப் பாண்டியன் கோட்டைக்கும் அனுப்பியிருக்கிறேன்" என்று இன்னொரு வெடியையும் வீசினான்.

பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு அவளை அவனே கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தான், எதிரே காணப்பட்ட இல்லங்களை நோக்கி.

வலையில் சிக்கிய புறாவென முல்லை ஏதும் பேசாமல் நடந்தாள்.

16. அரபு வணிகர்

காட்டு மரத்தடியில் உட்கார்ந்திருந்த முல்லையை கையைப் பிடித்துத் தரதரவென இழுத்துச் சென்ற முல்லைவேந்தன் அவளை எதிரிலிருந்த வீரர்களின் இல்லங்களில் தங்க வைக்காமல், தென்புறத்தில் ஓடிக்கொண்டிருந்த தாமிரபரணி அருவிக்கு அப்பாலிருந்த காட்டுப்பகுதிக்கு இழுத்துச் சென்றான். அங்கிருந்த காட்டுப்பகுதியில்தான் தானும் பாண்டிய இளவலும் கட்டப்பட்டு சுள்ளெறும்புகளுக்கு இரையாகப் போடப்பட்டிருந்ததை உணர்ந்த முல்லை, 'இங்கு எதற்காக அழைத்து வருகிறார் தந்தை?' என்று தன்னைத் தானே வினவிக்கொண்டாள். 'சுள்ளெறும்புகளுக்கு இரையாக்கும் உத்தேசமிருக்காது. ஒரு முறை கையாண்ட சித்திரவதையை திரும்பிக் கையாளும் வழக்கம் இவருக்கு இல்லை' என்று தனது வினாவுக்கு சமாதானமும் சொல்லிக் கொண்டு, காரணம் எதுவாயிருக்கும் என்ற சிந்தனையில் இறங்கினாலும் விடையேதும் கிடைக்கவில்லை அவளுக்கு. விடை கிடைத்தபோது தந்தையின் கொடுமை எந்த அளவுக்குச் செல்லும் என்பதைப் புரிந்துகொண்டாள்.

முல்லைவேந்தன் அவளை இழுத்த வண்ணம் அருவியைத் தாண்டி அப்பாலிருந்த அடர்ந்த காட்டில் புகுந்ததும், ஏற்கெனவே பாண்டிய இளவல் சிறை வைக்கப்பட்டிருந்த குடிசையை நாடிச் சென்றான். அந்தக் குடிசையை அடைந்ததும் அதில் நான்கு புது மனிதர்கள் உட்கார்ந்திருந்ததை கவனித்தாள் முல்லை. ஆனால், அவர்கள் யாரும் தமிழகத்தைச் சேர்ந்தவர் களல்லரென்பதையும், சிங்களத்தையோ, அரபுநாட்டையோ சேர்ந்தவர்களாயிருக்க வேண்டுமென்றும் முடிவுக்கு வந்தாள். அவர்கள் ஒவ்வொரு வரும் பயணத்துக்குச் சித்தமாய் ஒவ்வொரு சிறுமூட்டையுடன் உட்கார்ந்திருந்ததையும் ஒவ்வொருவர் இடுப்பிலும் பெரிய நீண்ட துணியொன்று

சுற்றப்பட்டிருப்பதையும் கண்ட முல்லை, தந்தையின் திட்டம் எதுவாகத்தானிருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள். ஆனால், அதிகமாகச் சிந்திக்க வைக்கவில்லை அவளை முல்லை வேந்தன். அந்த நால்வர் முன்னும் மகளை நிறுத்திய முல்லை வேந்தன், ''இவளைத்தான் சொன்னேன். சரியாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அந்த நால்வரும் அவளை நீண்ட நேரம் உற்றுப் பார்த்த பின்பு அவர்களில் தலைவனாகத் தெரிந்த ஒரு முதியவன் எழுந்து அவளைச் சுற்றிவந்து பின்னப்பட்டிருந்த நீண்ட குழலை உருவிப் பார்த்து முதுகையும் தடவிக் கொடுத்தான். பிறகு கைகளைப் பரிசோதித்தான். பிறகு சொன்னான், ''நல்ல வலுவுள்ள பெண்தான். ஆனால், அரபுநாட்டில் விலைபோவது கஷ்டம். அரபுநாட்டு அடிமை அங்காடியில் நல்ல பிற நாட்டு அழகிகளுக்குத்தான் நல்ல விலை கிடைக்கும்'' என்று.

இதைக் கேட்ட முல்லைவேந்தன், ''இவள் என்ன அழகில் குறைவா? இவளைக் கண்டு பாண்டிய நாட்டு இளவரசனே மயங்கியிருக்கிறான்'' என்றான்.

''இருக்கலாம். அரசகுலத்தாருக்கு ரசனை பலவிதமாயிருக் கலாம். அப்ஸரஸை மனைவியாயிருக்க ஆகோர அடிமைகளை நாடிச்சென்ற அரசர்கள் உண்டு. ஆகையால் ஒருவர் இஷ்டப்பட்டால் அவர் மன்னர் குலம் என்பதற்காக வாங்க முடியாது. அதுவும் நீங்கள் கேட்கும் விலை மிக அதிகம். இவள் பத்தாயிரம் பொன் நாணயங்களைத் தாங்கமாட்டாள்'' என்றாள் அரபுநாட்டு வணிகனான முதியவன்.

அவர்கள் அரபுநாட்டு வணிகர்களென்பதையும் அந்த நாட்டுச் சந்தையில் தன்னை விற்க முயல்கிறார்களென்பதையும் உணர்ந்த முல்லை சீற்றத்தின் சிகரமாக விளங்கினாள். திடீரெனத் தனது தந்தையை நோக்கித் திரும்பி அவர் கன்னத்தில் பளேரென தனது வலதுகையால் அறைந்து, ''சீ! நீயும் ஒரு

தகப்பனா? பாண்டிய வம்சத்தில் பெண்களை விற்கும் கயவனாக யாரும் பிறந்ததில்லை. நீ எப்படிப் பிறந்தாய்?'' என்று சொற்களில் தணலை உதிர்த்தாள்.

அவள் கொடுத்த அறையால் சிறிது நிகைத்தான். அதிர்ச்சி யும் அடைந்தான் முல்லைவேந்தன். முல்லை தன்னைக் கை தொட்டு அடித்தது அதுவே முதல் தடவையாகையால் அந்த இளம் கையில் அத்தனை பலமிருக்குமென்பதை அன்றுவரை அவன் அறிந்தானில்லை. ஆகையால் சற்று தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''அடீ! உனக்கு எத்தனை ஆணவம், நாலு பேர் முன்பு என்னை அடிக்க?'' என்று கேட்டு திரும்பி அவளை அறைய தனது முரட்டுக்கையை ஓங்கினான்.

அவன் கையை அரபு வணிகர்களின் முரட்டுக்கை பிடித்தது. ''ஐயோ! நாங்கள் வாங்கப் போகும் பெண்ணை நீங்கள் அடித்து அவள் கன்னத்தில் தழும்போ, வேறு குறையோ ஏற்படுத்தி விட்டால் அவளை விற்பது மிகவும் கஷ்டம். முதலில் விலையைப் பேசி முடிப்போம்'' என்றும் சொன்னான் வணிகர் தலைவன்.

அதனால் பெரிதும் ஆத்திரமடைந்த முல்லைவேந்தன், ''என் மகள் இன்னும் உன் பொருளாகிவிடவில்லை. உனக்கு உரிமை ஏற்படும் வரையில் அடிப்பேன். நாசம் செய்வேன். அது என்னிஷ்டம்'' என்று சீறினான்.

முதிய அரபு வணிகன் தனது பெரும் பற்களைக் காட்டி நகைத்தான். ''ஐயா! நீங்கள் சொல்வது உண்மை. ஆனால், நாங்களும் சிதைந்த பாத்திரத்தை வாங்க முடியாது. இங்கு உங்களிடம் பாண்டிய நாட்டு கள்ளமுத்துக்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டு நாங்கள் வந்தோம். வந்த இடத்தில் முத்துக்குப் பதில் பெண்ணைக் கொடுப்பதாகச் சொன்னீர். நாங்களும் சரியென்று ஏற்றுக்கொண்டோம், ஏதாவதொரு வியாபாரம் முடியட்டுமென்று. பெண்ணைக் காட்டுவதற்கே உங்களுக்கு

இரண்டு நாள் பிடித்திருக்கிறது. இனியும் வீணாகக் காலம் கடத்த வேண்டாம். இந்தப் பெண்ணுக்கு இரண்டாயிரம் பொற்காசு தருகிறோம். இஷ்டமிருந்தால் சொல்லுங்கள்'' என்று திட்டமாகச் சொன்னான் வணிகன்.

அவர்கள் மீது முல்லைவேந்தன் தனது கண்களை நாட விட்டான். பிறகு, ''இவளும் முத்துதான். ஏன், முத்தைவிடச் சிறந்தவள். சரி, ஐயாயிரம் கொடுக்கிறாயா?'' என்று வினாவினான் முல்லைவேந்தன்.

''முடியாது. மூன்று வரை உயர்த்தலாம்'' என்றான் இன்னொரு வணிகன். அவன் பார்ப்பதற்கு வாலிபனாயிருந்தான்.

அடுத்த விவாதம் மும்முரமாக நடந்தது. கடைசியில் நாலாயிரத்துக்கு விலை பேசி முடித்த அரபு வணிகன் தனது இடுப்பைச் சுற்றியிருந்த துணியைச் சற்று நீக்கி உள்ளிருந்த பையிலிருந்த பொன் நாணயங்களை எடுத்து எண்ணினான். அதைப் பெற்றுக்கொண்ட முல்லைவேந்தன், ''அடீ முல்லை! நீ அரபுநாட்டுக்குப் போ. ஆனால், அங்கு உன் காதலன் வர முடியாது'' என்று சொல்லித் திரும்பினான், வந்த வழியே செல்வதற்கு.

முல்லை திக்பிரமை பிடித்து நின்றாள். பெண்ணை விலை பேசும் தந்தை உலகில் இருப்பாரென்று அன்று வரை அவள் எண்ணியதில்லை. அவன் உண்மையில் தன் தந்தைதானா என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது. இன்னும் அவள் நெஞ்சுரத்துடன் தந்தையை நோக்கி, ''டேய்! பாதகனே! நான் மட்டும் உயிருடன் திரும்பினால் உன் கழுத்தைத் திருகி, கழுகுகளுக்குப் போடுகிறேன்'' என்று கோபம் மிகுந்த குரலில் கூறினாள்.

முல்லைவேந்தன் அப்பொழுது நன்றாகக் குடித்திருந்ததால் வெறி மிக்கவனாய் நகைத்து, ''எப்பொழுது நீ நமது புரட்சிக்கு எதிரியானாயோ அப்பொழுதே உன்னைத் தீர்த்துக்கட்டத்

தீர்மானித்தேன். சமயத்தில் ஆண்டவன் கை கொடுத்தார். இந்த வணிகர்களை என்னிடம் அனுப்பினார். உன்னைக் கொல்வதைவிட இது சிறந்த தண்டனை. இவர்கள் வந்த மரக்கலம் காயலில் இருக்கிறது. போய் வா. எந்த நாட்டின் சுதந்தர இயக்கத்தை நீ காட்டிக்கொடுத்தாயோ அந்நாட்டின் மண்ணிலிருந்து தொலைந்து போ. நாட்டுத்துரோகிக்கு இங்கு இடமில்லை. இனி இந்தப் புரட்சிக்கு நான்தான் தலைவன்'' என்று நகைப்பின் ஊடே கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து அகன்றான்.

அவன் பேசுவதைப் பார்த்துக்கொண்டிருந்த புதிய அரபு வணிகன், ''என்ன நாடு இது? சுயநலத்துக்காகப் பெண்ணையும் விற்கும் இந்த நாடு ஒரு நாடா? சே!'' என்று கூறி முல்லைவேந்தன் சென்ற திக்கை நோக்கித் தனது வாயிலிருந்து எச்சிலைக் காறி உமிழ்ந்தான்.

அப்பொழுது அந்த வாலிப வணிகன் சொன்னான், ''அவன் மனம் மாறுமுன்பு இப்பொழுதே நாம் புறப்படுவது நல்லது'' என்று.

''மனம் மாறினால் அவன் என்ன செய்ய முடியும்?'' என்று வினவினான் முதிய வணிகன்.

''திரும்பத் தனது ஆட்களுடன் வந்து இவளை மீட்டுச் செல்லலாம். நம்மையும் சிறை செய்யலாம். இந்த மாதிரிக் கயவர்கள் எதை எப்பொழுது செய்வார்கள் என்று சொல்ல முடியாது'' என்றான் வாலிப வணிகன்.

''நம்மைப் பிடிக்க இவனால் முடியாது. நாம் போகும் வழி இவனுக்கும் தெரியாது. இங்குள்ள யாருக்குமே தெரியாது'' என்று ரகசியமாகக் கூறிய முதிய வணிகன், ''சரி, இளம்புங்கள்'' என்று கூற, மூவரும் அவனைத் தொடர்ந்தனர்.

முதிய வணிகன் அந்தக் காட்டுப்பகுதியை நன்றாக அறிந்திருந்ததை சிறிது நேரத்திற்கெல்லாம் முல்லை தெரிந்து

கொண்டாள். இந்த நாலு அல்ல, நாற்பது பேரானாலும் தன்னைக் காயல்வரை கடத்திச் செல்ல முடியாதென்பதையும் யார் தன்னைப் பார்த்தாலும் இந்த வணிகன் உயிர் அரைக்காசு பெறாதென்பதையும் முல்லை புரிந்துகொண்டதால் அவர்களுடன் சர்வசாதாரணமாகவே நடந்தாள். அவள் நிதானத்தையும் துணிவையும் கண்ட வாலிப வணிகன் அவளை நெருங்கி, "உன் பெயரென்ன? முல்லையா?" என்று விசாரித்தான்.

"ஆம். விலகி நடந்து வா" என்ற சொற்கள் பாறையில் வீசப்பட்ட வாளின் ஒலியைப் போல உதிர்ந்தன.

அந்த வணிகன் அதற்குமேல் தொந்தரவு செய்யவில்லை. "எங்கள் மரக்கலத்துக்கு வா, பேசிக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு தள்ளியே நடந்தான்.

அவன் செய்கையை ஆமோதிப்பது போல் தலை அசைத்த முதிய வணிகன், "அதுதான் சரி. நமது காரியம் கைகூடும் வரை என் உத்தரவை மீறி எதுவும் செய்யக்கூடாது என்ற உறுதியின் மேல்தான் உங்கள் மூவரையும் இந்த வேலைக்கு அமர்த்தினேன்" என்று கூறியதன்றி எச்சரிக்கைப் பார்வையொன்றையும் அவர்கள் மீது வீசிவிட்டு முன்னால் வழிகாட்டி நடந்தான். பல குறுக்குவழிகளில் நடந்து மலையின் அழகான சரிவில் இறங்கிச் சென்றான். சரிவு மிக பயங்கரமாயிருந்தது. அதிலிருந்து மலையின் உயரத்தைப் பார்த்த முல்லை, "வணிகரே!" என்று மெல்ல அழைத்தாள்.

முதிய வணிகன் திரும்பி "என்ன... அம்மா?" என்று கனிவு நிரம்பிய குரலில் கேட்டான்.

"மேலே நீண்டிருக்கும் பாறையைப் பாருங்கள். இங்கு தற்கொலை செய்துகொண்டவர்கள் அந்தப் பாறையின் மீதிருந்துதான் குதிப்பார்கள். அதனால் இதற்குத் தற்கொலைப் பள்ளத்தாக்கு என்று சொல்வார்கள். இங்கு கழுகுகளும்

துஷ்டமிருகங்களும் ஏராளம். மிக அபாயமான பகுதி இது" என்று விளக்கினாள்.

முதிய வணிகர் மெல்ல நகைத்து, "அம்மா! மனிதனைவிட பிணம் தின்னும் கழுகு கிடையாது. ஒரு வித்தியாசம் உண்டு. கழுகு இன்னொரு கழுகைத் தின்னாது. மனிதன் இன்னொரு மனிதனைத் தின்று விடுவான். மனிதனைவிட துஷ்ட மிருகம் எதுவும் கிடையாது. எந்த மிருகமும் தனது குழந்தையிடம் இன்னொரு மிருகத்தையோ, மனிதனையோ நெருங்கவிடாது. உன் தகப்பன் செய்ததைச் சிந்தித்துப் பார்" என்று கூறிக்கொண்டே மலைச்சரிவில் குதித்து வேகமாகப் பயணம் செய்தான்.

அவன் நடந்த முறையிலிருந்து அவன் கொட்டும்தளப் பகுதிக்குப் புதியவனல்ல என்பதை முல்லை ஊகித்துக் கொண்டாள். அவன் எங்குதான் தங்களை அழைத்துச் செல்கிறான் என்பதை ஊகிக்க முடியாததால் மௌனமாகவே நடந்தாள். இப்படி அரை ஜாமம் அபாயமான அந்த மலைப் பகுதியில் பயணம் செய்த பிறகு ஒரு பாறை மீது நின்று தனது கையை அசைத்தான், எதிரே விரிந்து கிடந்த இருளை நோக்கி. பதிலுக்கு ஒரு சிறு விளக்கு மினுக் மினுக்கென்று தூரத்தே ஆடியதும், அதை நோக்கி மற்றவர்கள் பின்தொடர, நடந்தான் முதிய வணிகன்.

அந்த இடத்தை அடைந்ததும் அது ஒரு பெரிய குகை என்பதை உணர்ந்துகொண்டாள் முல்லை. அந்தக் குகை வாயிலில் நான்கு புரவிகள் நின்றிருந்தன. குகைக்கு அருகில் இரண்டு காட்டுவாசிகள் உட்கார்ந்திருந்தார்கள். முதிய வணிகன் வந்ததும் அவன் உள்ளே செல்ல காட்டுவாசிகள் வழிவிட்டு நிற்க, வணிகன் முல்லையுடன் உள்ளே நுழைந்தான். முல்லையை குகைக்குள் தங்கச் சொல்லிவிட்டு "அம்மா! இன்றிரவை நாம் இங்கே கழிக்கிறோம். நிம்மதியாகப் படுத்து உறங்கு" என்று கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

தனியே விடப்பட்ட முல்லை அந்த குகையைக் கூர்ந்து கவனித்தாள், அங்கிருந்த சிறு விளக்கின் உதவியால். குகை அகலமும் நீளமும் மிக வசதியாயிருந்தது. ஆகவே முல்லை விளக்கைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு படுத்தாள் தரையில். அலுப்பினால் சிறிது கண்களை மூடினாள். சிறிது நேரத்திற்கெல்லாம் விளக்கு யாராலோ ஊதப்பட்டு அணைந்தது. முரட்டுக்கையொன்று உடலுக்குக் குறுக்கே விழுந்தது.

17. குகைச் சிறையில்

உடலுக்குக் குறுக்கே உலக்கைபோல் விழுந்த முரட்டுக்கை யாருடையதாக இருக்குமென்ற சந்தேகமே இல்லாததால், முல்லை சிறிதும் அசையாமல் படுத்தபடியே கிடந்தாள் தரையில். ஆரம்பம் முதல் தன்னிடம் இச்சை காட்டியிருக்கும் அந்த வாலிப வணிகன்தான் இந்த துராக்கிருத செயலுக்குத் துணிந்திருக்க வேண்டுமென்பதை அவள் சந்தேகமறப் புரிந்து கொண்டாள். இரவு ஏறிவிட்டதாலும் குகைவாயிலில் இரண்டொருவர் பேச்சு காதில் விழுந்ததாலும் முதிய வணிகர் குரல் கேட்காததாலும் அவன் எங்கோ போயிருக்க வேண்டுமென்றும் அதன் விளைவாகத்தான் வாலிப வணிகன் தன்னை அணுகி இருக்கிறானென்றும் எண்ணினாள். அந்தப் புது ஆபத்தை நிதானமிழந்து சமாளிக்க முடியாதென்பதை உணர்ந்துகொண்ட முல்லை, அவன் கையை உடனடியாக எடுக்காமல் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதைப்போல் பாசாங்கு செய்தாள்.

அவள் உறங்குவதையும் தனது கை விழுந்த பின்பும் அவள் விழித்துக்கொள்ளாததையும் கண்ட வாலிப வணிகன் அவளை மெல்ல தனது இரு கைகளாலும் புரட்ட முற்பட்டான். அதனால் தூக்கம் கலைந்துவிட்டது போல் சற்றே திமிறி ஒரு புறமாகத் திரும்பிப் படுத்த முல்லை, தனது இடையில்

சேலையின் மடிப்புக்குள் செருகியிருந்த மெல்லிய கத்தியை எடுத்துக்கொண்டாள். அவளை மறுபடியும் மல்லாக்கச் செய்ய வாலிப வீரன் திருப்ப முற்பட்டதும் அவள் வேகமாகத் தானே திரும்பி கையிலிருந்த கத்தியை அவன் கழுத்தில் ஊன்றினாள். "நீ மூச்சுவிட்டாலும் உன் உயிரை இந்தக் கத்தி குடித்துவிடும். மெதுவாக எழுந்திரு" என்று ரகசியமாகப் பேசிய முல்லை, கத்தியை அவன் கழுத்தில் ஊன்றியபடியே தானும் அவனுடன் சேர்ந்து எழுந்து அவனைப் பின்புறமாகத் தள்ளினாள். மல்லாந்து எதிர்ப்பக்கமாக விழுந்த அவன் கழுத்தில் கத்தி முனையை லேசாகச் சிறிது ஊன்றிய முல்லை அவன் இடையிலிருந்த குறுவாளையும் தனது கையில் எடுத்துக் கொண்டாள். "யார் வெளியே?" என்று குரலும் கொடுத்தாள்.

"நாங்கள்தான்" என்று ஒலித்தது ஒரு வணிகன் குரல்.

"இங்கு இவர் உறங்குகிறார். ஆகவே யாரும் உள்ளே வர வேண்டாம்" என்ற முல்லை தனது வலதுகாலை மல்லாந்து கிடந்த வாலிப வணிகன் மார்பிலும் ஊன்றி நின்றாள். கையிலிருந்த குறுவாள் அவள் விரல்களில் லேசாக அசைந்து கொண்டிருந்தது.

"உறங்குகிறாரா?" என்று ஒரு வணிகர் நகைத்தார் வெளியிலிருந்து.

"ஆம், களைத்திருக்கிறார்" என்றாள் முல்லை.

"நன்றாகக் களைக்கட்டும்" என்று காவல் செய்த காட்டுவாசி ஒருவனும் சிரித்தான். பிறகு படுத்தான் உறங்க.

உள்ளேயிருந்த முல்லையும் மெதுவாக நகைத்தாள். பிறகு குகை மூலையிலிருந்த அவர்கள் பைகளிலொன்றை எடுத்து வர முற்பட்டு, "காதலரே! நான் மூலைக்குச் செல்வதால் தப்பிவிடலாம் என்று நினைக்க வேண்டாம். குறுவாளை நான் இருபதடிக்கு அப்பாலிருந்தே எறிய முடியும். குறி தப்பாது. ஆகவே உமது உயிர் போகக்கூடிய எந்த முயற்சியிலும் இறங்க

வேண்டாம்'' என்று ரகசியமாக அவனுக்கு மட்டும் கேட்கும் படிப் பேசிவிட்டு குகைமூலைக்குச் சென்று அங்கிருந்து மூன்று பைகளில் ஒன்றைச் சோதித்தாள். நீளமான இரண்டு துணிகளை எடுத்து வந்து வாலிப வணிகனின் கைகளைக் கட்டினாள்.

பிறகு அவன் வாயிலும் துணியை அடைத்து இறுக்கினாள். அடுத்துக் கேட்டாள், ''இங்கு ஏதாவது குவளை இருக்கிறதா?'' என்று.

இருக்கிறதென்று தலையை ஆட்டினான் வாலிபன். அவன் கண்கள் ஓடிய திசையிலிருந்த ஒரு மூட்டையை ஆராய்ந்து, அதிலிருந்த ஒரு மரக்குவளையை எடுத்துக்கொண்ட முல்லை மெல்ல வெளியே தலையை நீட்டினாள். வணிகரில் ஒருவன் கேட்டான், ''என்ன வேண்டும்?'' என்று.

''இதில் நீர் வேண்டுமாம் அவருக்கு'' என்ற முல்லை நிலத்தைப் பார்த்தாள் வெட்கத்துடன்.

''அவர் ஆகிவிட்டாரா?'' என்று கண்ணைச் சிமிட்டிய வணிகன் குவளையை வாங்கிக்கொண்டு, ''சற்று எட்ட அருவி யிருக்கிறது. அதிலிருந்து மொண்டு வருகிறேன்'' என்று கூறி குகை வாயிலிலிருந்து தடதடவென்று சரிவில் இறங்கிச் சென்றான்.

அரைவாசி உடல் குகைக்குள்ளும் அரைவாசி உடல் வெளியேயும் இருக்கும்படி நின்று வெளிப்புறத்தை நோக்கிய முல்லை, தன்னை வாங்கிய வணிகரில் முதிய வணிகர் மட்டும் அங்கில்லாததை கவனித்தாள். மற்ற மூவரில் ஒருவன் உள்ளே கிடக்க, ஒருவன் நீர் மொள்ளச் செல்ல, ஒருவன் மட்டுமே குகை வாயிலில் இரு காட்டுவாசிகளுடன் உட்கார்ந்திருப்பதை கவனித்த முல்லை, ''ஆமாம்! பெரியவரெங்கே?'' என்று வினவினாள் மீதியிருந்த ஒரே வணிகனை.

''கொட்டும்தளம் போயிருக்கிறார்'' என்றான் வணிகன்.

''என்ன காரியமோ?'' என்று முல்லை வினவிக்கொண்டே வெளியில் வந்தாள்.

''யாரோ ஒருவரைப் பார்க்க'' என்று அந்த வணிகன் சொல்லிக்கொண்டிருக்கையிலே குகையின் பக்கத்தில் படுத்துக் கிடந்த இரு காவலரை கவனித்தாள். இருவரும் நன்றாக உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும், ''நீங்கள் சற்று எழுந்திருக்கிறீர்களா?'' என்று தனியாக உட்கார்ந்திருந்த வணிகனை வினவினாள்.

''எதற்கு?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்திருந்தான் வணிகன். அடுத்த வினாடி குறுவாளொன்று அவன் மார்பில் புதைந்தது. ''பேசாமல் திரும்பி முன்னே நட!'' என்று முல்லை யின் குரல் கடுமையாயிருந்தது.

வியப்பின் எல்லையை எய்திய விழிகள் முல்லையை நோக் கின. ''நீ மிகவும் சாமர்த்தியசாலி. அவன் என்ன ஆனான்?'' என்று குகைக்குள்ளே கையைக் காட்டினான் வணிகன்.

அதற்குப் பதில் இல்லாது போகவே, ''போய்விட்டானா? காமப்பித்தன், வேண்டியதுதான் அவனுக்கு'' என்று கூறிவிட்டு திரும்பி முன்னால் நடந்தான் வணிகன்.

குறுவாளை அவன் முதுகில் ஊன்றியவண்ணம் பின்னால் நடந்தாள் முல்லை. சரிவில் முன்னும் பின்னுமாக நடந்து கொண்டிருந்த சமயத்தில் ஏதோ பாறை தடுக்கிவிட்டதுபோல், ''அப்பா!'' என்று காலைப் பிடித்துக் கதறிக்கொண்டு ஒற்றைக் காலால் திரும்பிய வணிகன், திடீரென்று முல்லை மீது விழுந்து அவளை நிலத்தில் உருட்டி அவள் கையிலிருந்த குறுவாளை யும் பிடுங்கிக்கொண்டான். ''அடி சிறுக்கி! நட குகைக்கு'' என்று கூறி அவளைப் பிடித்துத் தள்ளினான் தனக்கு முன்பாக.

தனது திட்டம் தவறிவிட்டதை உணர்ந்து கொண்ட முல்லை பெருமூச்செறிந்தாள், ஒருமுறை. பிறகு பேசாமல் குகையை நோக்கி மலைச்சரிவில் ஏறத் தொடங்கினாள். குகையை

அடைந்ததும் குகைக்குள் அவளைப் பிடித்து முரட்டுத்தனமாக உள்ளே தள்ளிய வணிகன் தானும் உள்ளே வந்து வாலிப வணிகன் நிலையைப் பார்த்தான், வெறுப்பு எரிந்த விழிகளால்.

"உன்னைக் கட்டியும் போட்டுவிட்டாளா?" என்று கேட்டு அவன் கட்டுகளைத் தனது கால்கட்டை விரலாலேயே அவிழ்த்தான். விடுதலையடைந்து எழுந்து நின்ற வாலிபனை நோக்கிய வணிகன், "உன் அவசரத்துக்கு இது வேண்டும்" என்று கூறி அவனை வெளியே அழைத்துக் கொண்டு சென்று, "இனி ஒரு முறை அந்தப் பெண்ணை நாடினால் உன் கையை நாளை துண்டித்து விடுவேன். அவளுக்கு ஒரு சிறு தழும்பு ஏற்பட்டாலும் விலை போக மாட்டாள் நமது சந்தையில்" என்று எச்சரித்துவிட்டு, பழையபடி குகை வாயிலில் உட்கார்ந்தான். பக்கத்தில் வாலிப வணிகனும் உட்கார்ந்தான், தோல்வி தந்த வெட்கத்தால் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு.

குகைக்குள்ளேயிருந்த முல்லை தான் இனி தப்புவது கடினம் என்பதைப் புரிந்துகொண்டதால் குகையின் சுவரில் சாய்ந்து கொண்டு சிந்தனையில் இறங்கினாள். அப்பொழுதும் அவள் நம்பிக்கையைக் கைவிடவில்லை. 'என்னுடன் வந்த பராந்தகன் எங்கு போனார்? நான் வராததால் என்னைக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கமாட்டாரே. ஒருவேளை தந்தை அவரையும் சிறை செய்து விட்டாரா?' -வினாக்களை எழுப்பிக் கொண்டாள்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. எது நடந்தாலும் நடக்கட்டும் என்ற எண்ணத்தில் கண் அயர்ந்தாள் அவள். அவ்வப்பொழுது மலைக்காட்டில் ஏற்பட்ட துஷ்ட மிருகங்களின் அலறல்கூட அவளை எழுப்பவில்லை. எப்படியும் பராந்தகன் வருவானென்ற உறுதி அவளுக்கிருந்ததால் நிம்மதியாகக் கண்களை மூடிய வண்ணமே இருந்தாள். அத்தனை ஆபத்திலும் அவள் மெதுவாக உறக்கத்தின் வசப்பட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தக் குகைக்குள் ஏதோ நறுமணம் வீசியது. அரபு நாட்டார் சாதாரணமாக வைத்திருக்கும் நறுமண திராவகம்

ஏதாவதை வணிகரில் ஒருவர் பூசிக் கொண்டிருக்கலாம் என்று நினைத்தாள் அவள். ஆனால், அந்த நறுமணம் மேலும் பரவி அவள் நாசிக்குள்ளும் புகுந்ததால் அவள் சிறிது திணறினாள். பிறகு மெல்ல மயக்கம் தன்னை ஆட்கொள்ளும் உணர்ச்சி ஏற்பட்டது அவளுக்கு. அந்த அரை மயக்கத்தில் குகை வாயிலில் யாரோ இருவர் பேசும் ஒலியும் கேட்டது. அதில் ஒன்று முதிய வணிகன் குரலென்று தெரிந்ததும் பெரியதாகக் கூவ முயன்றாள். வாயிலிருந்து சத்தம் வரவில்லை. நாக்குச் சிறிது குழறிற்று, கண்கள் இருண்டன. குகையின் சுவரிலிருந்து சரிந்து தரையில் உருண்ட முல்லை அடியோடு சுரணையை இழந்தாள்.

18. இரண்டே வாரங்கள்

குகைக்குள் வீசிய நறுமணத்தால் மூர்ச்சையடைந்துவிட்ட முல்லை, சுரணை வந்து கண்விழித்த போது தன்னை முதிய வணிகன் குனிந்து நோக்கிக் கொண்டிருந்ததையும் இன்னும் யாரோ ஒருவர் சற்று எட்ட நடந்து கொண்டிருந்ததையும் கண்டாள். அவள் கண்விழித்ததும் முதிய வணிகர் ஆசுவாசப் பெருமூச்சு விட்டு, "கவலை வேண்டாம். குழந்தை விழித்துக் கொண்டுவிட்டாள்" என்று அன்புக் குரலில் கூறினார். அதைக் கேட்டதும் எட்ட நடமாடிக் கொண்டிருந்தவரும் அவளருகே வந்து அவள் பக்கத்தில் அமர்ந்து அவள் பூவுடலை மெதுவாகத் தூக்கி "முல்லை" என்று அன்புடன் அழைத்தார்.

அந்தக் குரல் பராந்தகன் குரலென்பதை அறிந்ததும் பூரணமாகத் துணிவு வரப்பெற்ற முல்லை சற்றே திரும்பி அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். பராந்தகன் அவள் முதுகை ஆதரவுடன் தடவிக்கொடுத்து, "முல்லை! விழித்துக் கொள். உன் அபாயம் நீங்கிவிட்டது" என்று தைரியம் சொன்னான் பாண்டிய இளவல்.

அவள் மார்பைவிட்டு முகத்தை எடுக்கவில்லை. ''நான் எங்கிருக்கிறேன்? இந்த முதிய வணிகர் ஏன் உங்களுடனிருக்கிறார்? என்னுடன் கொட்டும்தளம் வந்தவர் எங்கு போய்விட்டீர்கள்?'' என்று வினவவும் செய்தாள்.

பராந்தகன் மெதுவாகப் பேசினான், ''முல்லை! உன் தந்தை உன்னைச் சிறை செய்ததை தூரத்தில் புரவி மீதிருந்தே கவனித்தேன். உன்னை அழைத்துச் சென்றதையும் பார்த்தேன். அவர் அறியாமலே உன்னைத் தொடர்ந்தேன். நீ அரபு வணிகர்களிடம் விற்கப்பட்டதையும் பார்த்தேன். அப்பொழுதே உன்னை விடுவித்திருக்க என்னால் முடியும். ஆனால், உன் தந்தை விழித்துக் கொள்வார். நம்மைப் பிடிக்க ஒரு படையே வரும். அதையும் சமாளிக்கலாம். ஆனால், நான் வந்த காரியம் கைகூடாது. முல்லைவேந்தன் உன்னை ஒழித்துவிட்டதாக நினைத்து அயர்ந்திருப்பதில் அனுகூலங்கள் இருக்கின்றன. ஆகையால்தான் உன்னை உடனடியாக விடுவிக்கவில்லை'' என்று விளக்கினான்.

இந்த விளக்கத்துக்குப் பின் மெதுவாகப் பராந்தகன் மார்பிலிருந்து தனது முகத்தை நீக்கிய முல்லை எழுந்திருக்க முயன்று முடியாமல் தடுமாறினாள்.

''இன்னும் மயக்கம் சிறிது இருக்கிறது'' என்றும் சொன்னாள்.

இதைக் கேட்ட முதிய வணிகன், ''பாண்டிய இளவலே! அவசியத்துக்கு அதிகமாக மயக்க மருந்தை குகையில் தெளித்திருக்கிறீர் போலிருக்கிறது'' என்று கூறினார். பிறகு தனது மடியிலிருந்து சிறிய சம்புடமொன்றை எடுத்து அதிலிருந்து சிறு பொடியை முகருமாறு முல்லையிடம் நீட்டினார். அதை முகர்ந்ததும் தலையிலிருந்து பெரிய களம் அகன்றதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது முல்லைக்கு. சிறிது திடமாகவே நின்று ''அப்பாடா!'' என்று கூறிவிட்டு மெல்ல அங்குமிங்கும் நடமாடினாள்.

கொட்டும்தள மலைக்காற்று அந்த நேரத்தில் சுகமாக வீசிக்கொண்டிருந்தது. அக்கம்பக்க மரங்கள் சுகந்த மலர்களை உதிர்த்திருந்தன. வெயில் ஓரளவு ஏறியிருந்தாலும் மரங்களின் அடர்த்தியின் காரணமாக, அவர்கள் இருந்த இடத்தில் நிழலே காணப்பட்டது. தூரத்தில் மலைப்பாறையில் ஓடிக் கொண்டிருந்த சின்னஞ்சிறு அருவி மட்டும் வெயிலில் பளபளத்தது. நீர்த்திவலைகளில் கிரணங்கள் புகுந்த காரணத்தால் பற்பல வர்ணஜாலங்களையும் எழுப்பிக் கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்து முதிய வணிகனையும் பார்த்த முல்லை, ''ஐயா! தாங்கள் யார்? என்னை எதற்காக வாங்கினீர்கள்? எதற்காக இப்பொழுது இவருடன் சேர்த்து என்னை அந்தக் காமுகனிடமிருந்து தப்ப வைத்தீர்கள்?'' என்று கேள்விகளைத் தொடுத்தாள்.

இந்தக் கேள்விகள் எதற்கும் முதியவர் பதில் சொல்லவில்லை. பராந்தகனே பதில் சொன்னான், ''முல்லை! இவரை நன்றாக உற்றுப் பார்'' என்று.

முல்லை முதியவரைக் கூர்ந்து நோக்கினாளானாலும் ஏதும் விளங்கவில்லை அவளுக்கு. ''ஐயா! உங்களை எங்கோ பார்த்த நினைப்பு இருக்கிறது. ஆனால், திட்டமாக எங்கு பார்த்தோம். எந்தச் சந்தர்ப்பத்தில் பார்த்தோம் என்பது தெரியவில்லை'' என்று சொன்னாள்.

அடுத்து பராந்தகனே பேசினான். ''இந்த வேஷத்தைக் கலைத்துவிடலாமே'' என்று சிறிது அழுத்திக் கூறியதன்றி அவர் தலைமுண்டாசைத் தனது கைகளால் நீக்கவும் செய்தான். ''சரி, சரி. சட்டையை எடும்'' என்றும் உத்தவிட்டான்.

அவன் சொற்படி சட்டையை மட்டுமின்றி தாடி மீசைகளையும் களைந்துவிட்ட முதியவரைப் பார்த்ததும், முல்லையின் முகத்தில் வியப்பின் சாயை பெரிதும் படர்ந்தது. அவரை நெருங்கி, ''அப்பா!'' என்று அலறி அவரின் கழுத்தைக்

கட்டிக்கொண்டாள். அவள் கண்கள் முதியவர் கண்களுடன் கலந்தன. அவர் கண்களைப் பார்த்த வண்ணமே இருந்த முல்லையின் கண்களில் நீர் திரண்டு கன்னங்களில் வழிந் தோடியது. "இத்தனை நாள் என்னைவிட்டு எங்கிருந்தீர்கள்? எப்படி இருக்கிறீர்கள்?" என்று வினவினாள், உணர்ச்சிப் பெருக்கால் குரல் தழுதழுக்க.

"குழந்தாய்! உன்னைவிட்ட பிறகு நான் காயல் சென்றேன். அரபு வணிகனாக மாறினேன். அங்கும் உன் தந்தை என்னைத் தேடிக்கொண்டு வந்தார், அடையாளம் தெரியாததால் பிடிக்க முடியவில்லை. நான் கொட்டும்தளத்துக்குள் காலடி வைத்தால் கொன்றுவிடும்படி உத்தரவும் போட்டார். ஆகையால் நான் தலைமறைவாகவே இருந்தேன். அந்தச் சமயத்தில் உன் தகப்பனார் பாண்டிய மன்னனுக்கு எதிராகப் புரட்சி செய்வதாகவும் உன்னையும் உபயோகப்படுத்துவதாகவும் கேள்விப்பட்டேன். அன்றிலிருந்து இந்தக் கொட்டும்தளத்தின் மீது ஒரு கண்ணை வைத்திருந்தேன். இந்த வேடம் நன்றாகப் பொருந்திவிட்டதால் இங்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டும் இருந்தேன். உன் வளர்ச்சியைப் பார்த்தேன். உன் தந்தை தனது தீயவழிகளுக்கும் பேராசைக்கும் உன்னை ஒரு கருவியாக உபயோகப்படுத்துவதையும் பார்த்தேன். பிறகு உன் அருகாமையிலிருந்து நான் விலகவில்லை. உன்னை நான் உன் தந்தையிடமிருந்து அபகரிக்கத் தீர்மானித்தபோது இந்த பாண்டிய இளவல் வந்து சேர்ந்தார். உங்களிருவர் அன்பு வளர்ச்சியையும் கவனித்தேன். பாண்டிய இளவலைப் பற்றி நான் ஏற்கெனவே அறிந்திருந்ததால் என் கண்காணிப்புத் தேவையில்லை என்று நினைத்தேன். ஆனால், இப்பொழுது தான் தேவையிருந்தது" என்று விளக்கினார் முதியவர்.

அதுவரை பேசாமலிருந்த பராந்தகன், "முல்லை! நான் சொல்லவில்லை உனக்கு, வளர்த்த பாசம் போகாதென்று?" என்று வினவினான். "உன்னை வளர்த்தவர் பெயர் சாம்பனா

என்று கேட்டபோது நீ வியப்படைந்தாய் அல்லவா?" என்றும் கேட்டான்.

"ஆம்" என்றாள் முல்லை.

"இந்த முதியவர் ஏற்கெனவே காயலில் பாண்டியர் ஒற்றராக இருந்தவர். இந்த வேடத்தை நாங்கள்தான் இவருக்கு அணிவித் தோம். அரபுநாடுகளுக்கு நமது முத்து களவு போவதால் அதை வேவு பார்க்கவும் இவரை நியமித்தோம். இவரை நான் பலமுறை பார்த்த போதெல்லாம் 'முல்லை! முல்லை!' என்று புலம்பிக்கொண்டிருப்பார். தூங்கும்போது அந்த ஜபம் அதிக மாகும்.

"நீ ஒரு வளர்ப்புத்தந்தையைப் பற்றிச் சொன்னதும் அது சாம்பனாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். ஆகவே, உன் தந்தை உன்னை சாம்பனுக்கு விற்றதும் என் கவலை பறந்தது. உன் தந்தை உன்னைத் தொலைத்துவிட முன்பே தீர்மானித்திருக்க வேண்டும். ஆகவே இந்த முதிய வணிகருக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறார். அரபு வணிகரான முல்லா ஆட்களை இங்கிருந்து பிடித்து அரபுநாட்டுக்கு அனுப்புவதாக வதந்தியைக் கிளப்பிவிட்டதே நான்தான். அந்த வதந்திவலையில் விழுந்த உன் தந்தை இவரை வரவழைத்தார். இவரும் இன்னும் மூவருடன் இங்கு வந்தார். உன்னை குகையில் விட்டதும் திரும்பவும் கொட்டும்தளம் நோக்கி வந்தார் என்னைத் தேடி. நான் அவர்களைத் தொடர்ந்தே வந்ததால் என்னைக் கண்டுபிடிப்பது கஷ்டமாயில்லை உன் வளர்ப்புத்தந்தைக்கு. பிறகு இருவரும் உன்னை எப்படி விடுவிக்கலாம் என்று திட்டமிட்டோம்.

"நான் எத்தனை சொல்லியும் வளர்ப்புத்தந்தை உன் விடுதலையைத் தாமதிக்க மறுத்தார். உடன் வந்த வணிகர்கள் உண்மை வணிகர்களென்றும் அவர்களிடம் உன்னைத் தனித்து விட்டிருப்பது தவறென்றும் சொன்னார். எதையும் முல்லை சமாளிப்பாள் என்று சொல்லிப் பார்த்தேன். அவர்

கேட்கவில்லை. அவர் நினைத்தது சரியாகப் போயிற்று. நாங்கள் குகையை அணுகிக் கொண்டிருந்த சமயத்தில்தான் உன்னை வணிகரில் ஒருவன் உருட்டித் தள்ளினான். பிறகு குகைக்குள் அழைத்துச் சென்றான். அதைக் கண்ட உன் வளர்ப்புத்தந்தை கொதித்தார். அவர் ஆத்திரத்தை நான் அடக்கி, அவரை முன்னே செல்லவிட்டேன், காவலரையும் வணிகரையும் அடக்க...'' என்ற பராந்தகனை இடைமறித்துப் பேசினார் முதியவர்.

''என்னைக் கண்டதும் புலிகள் நரிகளாயின. உன்னை குகைக்குள் தள்ளிய வணிகனை உள்ளேயே படுத்துக் காவல் செய்யச் சொன்னேன். காட்டுவாசிகளைத் தூங்குமாறு உத்தரவிட்டேன். எல்லோரும் உறங்கியதும் பராந்தகனிடம் மயக்கத் துளிகளைக் காட்டுவாசிகள் முகத்திலும் குகையிலும் தெளிக்கச் செய்தேன். பிறகு உன்னைத் தூக்கிக்கொண்டு இங்கே வந்தோம்'' என்று கதையை முடித்தார் சாம்பன்.

''அடுத்து என்ன செய்ய உத்தேசம்?'' என்று வினவினாள் முல்லை.

''அடுத்து புரட்சியை ஒடுக்க வேண்டும். பாண்டியர் பேராட்சியின் தர்மமான அரசாங்கத்தில் புரட்சி நினைக்க முடியாத விஷயம்'' என்றார் சாம்பன்.

''புரட்சிக் கூட்டம் இருக்குமிடம் தெரியுமா உங்களுக்கு?'' என்று முல்லை வினவினாள்.

''தெரியும். ஆனால், அதை எச்சரிக்கையுடன் அழிக்க வேண்டும்'' என்றார் சாம்பன்.

''சென்ற இரு தினங்களில் புதுப்புது ஆட்கள் அந்தப் படையில் சேர்ந்திருக்கிறார்கள்'' என்றான் பராந்தகன்.

''புதுப்புது ஆட்கள் என்றால்...?'' முல்லை கேட்டாள் சந்தேகத்துடன்.

''திருடர்கள், ஏற்கெனவே கொலைக்குற்றத்திலிருந்து தப்பியவர்கள் தவிர சிங்களத்தவர் சிலர் சேர்ந்திருக்கிறார்கள்'' என்று சொன்னான் பராந்தகன்.

''சிங்களவரா?'' என்று வியப்புடன் வினவினாள் முல்லை.

''ஆம்.''

''அவர்கள் எதற்குச் சேர்ந்தார்கள்?''

''எப்பொழுதும் தமிழ்நாட்டு விவகாரங்களில் கலந்து கொள்வது அவர்களுக்கு சகஜம். முத்துப் பொக்கிஷம் ஒன்று பாண்டிய நாட்டில் இருக்கிறதல்லவா?''

''அதனால்...?''

''அதை வெளிநாட்டுக்குக் கடத்த அவர்கள் துணை புரிகிறார்கள்!''

''அதனால் அவர்களுக்கு என்ன பயன்?''

''இங்குள்ள பாண்டியரை பலவீனமாக்கலாம். முத்து விற்பனையையும் ஏராளமாகச் செய்யலாம். இது பெரிய அரசியல் விவகாரம். உன் தந்தைக்கு ஆசை காட்டி இந்தப் புரட்சிக்குத் தூண்டியதில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்று உன் வளர்ப்புத்தந்தை சொல்கிறார்.''

இதைச் சொன்ன பராந்தகன் சாம்பனை நோக்கினான். சாம்பன் சொன்னார், ''உண்மை முல்லை. அவர்களும் இவன் பேராசைக்கு ஒரு காரணம். சிங்களம் நல்ல நாடு. ஆனால், இப்பொழுது அதனால் பெருங்கேடு நமக்கு'' என்று.

''எப்படியிருந்தாலும் இன்னும் பதினைந்து நாள்களில் உன் தந்தையின் புரட்சியை உடைக்க வேண்டும்'' என்றான் பராந்தகன். ''ஆம், இன்னும் இரண்டே வாரங்கள்! இங்கு நான் வந்த பணி முடிந்துவிடும்'' என்றான் பராந்தகன்.

19. மலைக் கழுகுகள்

கொட்டும்தளத்துக்குத் தான் வந்த பணி, அதாவது முல்லைவேந்தனின் புரட்சியை அடக்கும் அலுவல், முடிந்து விடுமென பராந்தகன் அத்தனை திட்டமாகச் சொன்னது பெருவியப்பாக இருந்தது முல்லைக்கு. முல்லைவேந்தனின் முழுசக்தியும் அவன் திரட்டியிருக்கும் காட்டுவாசிகளின் படையின் எண்ணிக்கையும் தெரியாததாலேயே அவன் அத்தனை திட்டமாகவும் அலட்சியமாகவும் தனது தந்தையை ஒடுக்கும் பணியைப் பற்றிப் பேசுகிறான் என்று நினைத்ததால் சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினாள் அவள். பிறகு வினவினாள், ''தந்தையின் படைபலம் உங்களுக்குத் தெரியுமா?'' என்று.

பராந்தகன் புன்முறுவல் செய்தான். ''சுமார் ஐயாயிரம் காட்டுவாசிகள் இருந்தார்கள். இப்பொழுது சேர்ந்திருக்கும் சிங்களவரையும் குற்றவாளிகளையும் சேர்த்தால் இன்னும் மூவாயிரம் அதிகமாகும். ஆக மொத்தம் எட்டாயிரம் பேர்'' என்றான் பராந்தகன் புன்முறுவலின் ஊடே.

அவன் சொன்னதைக் கேட்ட சாம்பன், முல்லை இருவருமே பெருவியப்படைந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். முதியவர் கேட்டார், ''பாண்டிய இளவலே, காட்டுவாசிகள் தொகையை முல்லை சொல்லியிருக்கலாம். ஆனால், புதிதாகச் சேர்ந்தவர் எண்ணிக்கை எப்படித் தெரிந்தது உங்களுக்கு?'' என்று.

''தவறு தந்தையே! இவரிடம் காட்டுவாசிகள் தொகையைக் கூட முழுமையாகச் சொல்லவில்லை. இவரே எப்படியோ அறிந்திருக்கிறார்'' என்று தெரிவித்தாள் முல்லை குரலில் பெரிதும் வியப்பு ஒலிக்க.

''அது கிடக்கட்டும். சிங்களவர், குற்றவாளிகளின் எண்ணிக்கை எப்படித் தெரிந்தது?'' என்று மீண்டும் வினவினார்

முதியவர். ''தவிர அவர்களைச் சேர்த்து இன்னும் ஒரு வாரம் கூட ஆகவில்லையே!'' என்றும் கேட்டார்.

பராந்தகன் இதற்கு உடனடியாக பதில் சொல்லவில்லை. ''ஆனால், முல்லைவேந்தனிடமிருக்கும் எட்டாயிரம் மொத்தப் படை புரட்சிக்குப் போதாது. உண்மையில் அது எந்த இடத்தையும் தாக்க முடியாது. பிடிக்கவும் முடியாது. ஆகையால் நாம் உதவ வேண்டும்'' என்று சிறிது சிந்தித்த பிறகு சொன்னான் பராந்தகன்.

இதைக் கேட்ட சாம்பன் தேள் கொட்டியது போல் துள்ளி எழுந்தார். ''என்ன சொன்னீர்கள்? புரட்சிக்காரருக்கு நாம் உதவ வேண்டுமா?'' என்று திகிலுடன் கேட்கவும் செய்தார்.

ஆனால், பராந்தகனின் குணத்தை ஓரளவு உணர்ந்திருந்த முல்லை ஆத்திரப்படவுமில்லை. ஏதும் உடனடியாகக் கேட்கவுமில்லை. பராந்தகனே கேட்டான், ''முல்லை! நீ ஏதும் சொல்லவில்லையே என் யோசனை பற்றி?'' என்று வினவினான்.

''சொல்வதற்கு என்ன இருக்கிறது? மாமனாருக்கு உதவ விரும்புகிறீர்கள். அது சொந்த வீட்டுக்குப் பாதகமாக இருந்தாலும் இந்தக் காலத்துப் பிள்ளைகள் கவலைப்படு வதில்லை. காலத்துடன் ஒத்துப்போகிறீர்கள்'' என்றாள். லேசாக நகைக்கவும் செய்தாள்.

சாம்பன் முல்லையை மிக உஷ்ணமாகப் பார்த்து, ''முல்லை! இது விளையாடும் விஷயமல்ல. பாண்டிய இளவல் ஏதோ தீவிரத் திட்டம் தயாரித்திருக்கிறார். அதன் முகப்பு இது. அவர்தான் விளக்க வேண்டும் அவர் திட்டத்தை'' என்றார்.

பராந்தகன் மலைப்பாறையில் உட்கார்ந்த வண்ணம் எட்டத் தெரிந்த கொட்டும்தள குடிசைகளையும் விடுதியையும் நோக்கினான்.

"முல்லைவேந்தன் படையின் முக்கியப் பிரிவு அதோ அந்த விடுதிகளிலும் குடிசைகளிலும் பரவிக் கிடக்கிறது. மீதி ஒரு பகுதியை ஏற்கெனவே கொட்டும்தள வழியின் பக்கக் காடு களில் வைத்திருந்த முல்லைவேந்தன், நேற்றிரவு வழிகளை அடைத்து கொட்டும்தளத்தை முத்திரையிட்டு மூடிவிட்டான். இன்று முதல் அங்கு யாரும் உள்புகவும் முடியாது. உள் வளர்ப்புத்தந்தை சொன்ன சிங்களவரும் குற்றவாளிகளும் கொட்டும்தளத்தின் எல்லைகளில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். கொட்டும்தளத்துள் நுழையும் யாரையும் திருப்பி அனுப்பிவிட முல்லைவேந்தன் உத்தரவிட்டுவிட்டார். திரும்ப மறுப்பவர் உடனடியாகக் கொல்லப்படுகிறார்கள். நேற்று அப்படி இருவர் மாண்டிருக்கிறார்கள். அடுத்து வருபவர்களுக்கு எச்சரிக்கையாக அந்த இருவர் சடலங்களும் உச்சிப்பாறையொன்றில் கிடத்தப் பட்டிருக்கின்றன. இன்று காலையில் அந்த இடத்தையும் பார்த்தேன்!" என்று விளக்கினான்.

"நீங்கள் நேற்று முதல் என்னிடமிருந்து பிரியவில்லையே. அந்தச் சடலங்களை எப்பொழுது பார்த்தீர்கள்?" என்று வினவினார் சாம்பன்.

"இன்று காலையில் பார்த்தேன்" என்று பராந்தகன் சொன்னான்.

"எப்படிப் பார்த்தீர்கள்?" என்று சாம்பன் கேட்டார்.

"இஷ்டமிருந்தால் நீங்களும் பார்க்கலாம்" என்று கூறிய பராந்தகன் சாம்பனையும் முல்லையையும் அழைத்துக் கொண்டு அந்த மலைச்சரிவின் உச்சியில் நின்றுகொண்டிருந்த தனது புரவியைச் சுட்டிக்காட்டி, "வாருங்கள், நண்பர் இருக்கு மிடம் போவோம்" என்று கூறி உச்சியை நோக்கி நடக்க லானான்.

அவனுக்குப் பின்னால் நடக்க முற்பட்ட சாம்பன் பக்கத்தில் வந்து கொண்டிருந்த முல்லையை நோக்கி, "புரவியை நட்

புரிமை கொண்டாடுகிறார். அதுவும் இவர் சொற்படி கேட்கிறது. பாண்டிய இளவலின் வாழ்க்கையே ஒரு விசித்திரம்" என்றார்.

முல்லை நகைத்தாள். "அது மட்டுமா அப்பா? திருட்டுக்குக் கூட்டாக இருக்கும் ஒரு புரட்சிக்காரன் மகளை மணக்கவும் விரும்புகிறார்" என்றாள்.

இப்படிப் பேசிக்கொண்டே அவர்கள் உச்சியை நோக்கி நடந்தபோது பராந்தகன் புரவி திரும்பி அவர்களை நோக்கிப் பெரிதாகக் கனைத்தது. அதனால் சற்று துரிதமாக உச்சியை நோக்கி ஓடிய பராந்தகன் கண்களை தூரத்தே செலுத்திச் செயலற்று நின்றான். அந்த இடத்தை அடைந்த மற்ற இருவரும் திகைத்தனர், தூரத்தே தங்கள் கண்களுக்கு முன்னால் எழுந்த காட்சியைப் பார்த்து.

தூரத்தில் சிறு குன்று போல் எழுந்து தன்னந்தனியாக நின்ற ஒரு மொட்டைப்பாறை மீது பெரும் கழுகுகள் பல கூட்டமாக உட்கார்ந்து எதையோ கொத்திக்கொண்டிருந்தன. திடீர் திடீரென நாலைந்து கழுகுகள் மேலெழுந்து வட்டமிட்டு மீண்டும் சர்ரென்று இறங்கின. அடுத்து கழுகுகள் எல்லாமே மேலே பறந்து விட்டதால் பாறையின் உச்சி நன்றாகவே தெரிந்தது. அதன் மீது சின்னாபின்னமாகக் கிடந்த இரு உடல்களில் எலும்புகளும் ஆங்காங்கு பிய்ந்து கிடந்த சின்னஞ்சிறு சதைகளுமே தெரிந்தன.

அந்தச் சதைகளைக் கழுகுகள் விட்டுப் போகக் காரண மில்லை என்று பராந்தகன் நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில் மேலே வட்டமிட்ட கழுகுகளையும் பாறையையும் கவனித்து, "கழுகுகள் மாமிசத்தை மிச்சம் வைக்கும் பழக்க மில்லையே! ஏன் மேலே பறக்கின்றன?" என்று சாம்பன் கேட்டார்.

"அவை தாமாகப் பறக்கவில்லை யாரோ ஓட்டியிருக் கிறார்கள்" என்று பராந்தகன் சொன்ன சமயத்தில் முல்லை,

"அதோ பாருங்கள்!" என்று பாறை அருகாமையிலிருந்த ஒரு மரத்தைக் காட்டினாள்.

அந்த மரத்தருகே இரண்டு புரவி வீரர்கள் தங்களுக் கிடையில் ஒருவனைக் கட்டி இழுத்து வந்து பாறை மீது தள்ளிவிட்டுத் திரும்பினார்கள். பாறை மீது கிடத்தப்பட்டவன் பெரிதாக அலறினான். கழுகுகள் அந்தப் பாறையை நோக்கி மேலிருந்து வேகமாக இறங்கின. அடுத்து அந்த மனிதன் அலறல் அதிகப்பட்டது. கழுகுகளின் கூட்டத்தில் அவன் மறைந்தான். அவன் ஓலம் மெல்ல மெல்லக் குறைந்தது. கழுகுகளின் கூச்சலும் அதிகப்பட்டது.

அந்தக் கோரக்காட்சியைப் பார்க்க முடியாமல் முல்லை தனது முகத்தை சாம்பன் மார்பில் புதைத்துக் கொண்டாள். வளர்ப்புத்தந்தையான சாம்பன் மனமும் நெகிழ்ந்து கிடந்தது. மகளை மெதுவாக அணைத்து அவள் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்தார்.

"அப்பா! இந்தக் கொடுமை மனிதர்கள் செய்யக்கூடியதா?" என்ற வினவினாள். எதற்கும் அசையாத அவள் மனமும் துன்பத்தில் நிளைத்ததால் குலுங்கிக் குலுங்கி அழவும் செய்தாள்.

"அம்மா! முல்லைவேந்தன் அழிவு ஆரம்பித்து விட்டது. அழாதே. கொடுமைக்கு எப்பொழுதும் இயற்கையின் பதில் உண்டு" என்று சமாதானப்படுத்த முயன்றார் சாம்பன்.

பராந்தகன் அவர்களிருவரையும் பார்க்கவில்லை. அவன் முகத்தில் ஏதோ கல்லு போன்ற சாயை விரவிக்கிடந்ததே தவிர, அதில் உணர்ச்சி எதுவும் காணோம். அவன் கழுகுகளை உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்து, "முதியவரே! உமது மகளை அழைத்துக் கொண்டு அவள் இருந்த பாண்டியன்கோட்டைக்குச் செல்லும். நான் முல்லையைக் குகையில் இம்சை செய்ய முயன்ற உமது

சகோதர வணிகர்களையும் காட்டுவாசிகளையும் அழைத்துச் செல்கிறேன். இன்னும் ஒரு வாரத்துக்கு நான் திரும்ப மாட்டேன். கவலை வேண்டாம்" என்று கூறிவிட்டுத் தனது புரவியின் மீது ஏறினான்.

"செல்லுமிடத்தைச் சொல்லலாமா?" என்று சாம்பன் கேட்டார்.

முல்லை பராந்தகனைத் திரும்பி நோக்கினான். அவள் கண்களிலும் சாம்பன் கேள்வியே தொக்கி நின்றது. அவ்விரு வரையும் நோக்கி பராந்தகன், "நான் போகுமிடம் எனக்கே தெரியாது. ஆனால், என்ன செய்யப் போகிறேன் என்பது தெரியும். நான் திரும்பும்வரை பாண்டியன் கோட்டையிலிருந்து நிளம்பாதீர்கள்" என்று கூறிவிட்டுத் தன் புரவியை மலைச் சரிவில் வேகமாகச் செலுத்தினான்.

முல்லை அவன் புரவி சென்ற அசுர வேகத்தை கவனித்தாள். திரும்பி ஒருமுறை பராந்தகன் தனது கையால் ஏதோ சைகை செய்துவிட்டுச் சென்றான். அடுத்த சில நாழிகைளில் புரவியும் எசமானும் கண்ணுக்கு மறைந்து விட்டார்கள். மலையின் பெரும்காடு அவர்களை விழுங்கிவிட்டது.

20. மறைவிடம்

கொட்டும்தள மலைச்சரிவின் அடர்ந்த காட்டுப்பகுதியில் புரவியுடன் மறைந்துவிட்ட பராந்தகன் தனது புரவியை வேகமாக காட்டுக்காவலர் இருவரும் வணிகர் இருவரும் இருந்த குகையை நோக்கிச் செலுத்தினான். குகையின் முகப்பில் இரண்டு காட்டுவாசிகளைத் தவிர அரபு வணிகர் மூவரும் மிகுந்த சிந்தனையுடன் உட்கார்ந்திருந்ததையும் அவர்கள் அடிக்கடி வேறு யாரையோ எதிர்பார்த்து பார்வையை மலைச் சரிவின் மற்றொரு பக்கத்தில் ஓட்டிக் கொண்டிருந்ததையும்

கண்ட பராந்தகன், அவர்கள் கண்களில் படாமல் மற்றொரு பக்கமாக குகைக்குப் பின்புறம் ஏறி வந்து புரவியின் மீது அமர்ந்தவண்ணமே, ''ஐயா நீங்கள் யார்?'' என்று குரல் கொடுத்தான்.

அவன் குரலைக் கேட்ட ஐவரும் ஒருமுகமாக அவனை நோக்கித் திரும்பினர். அவர்களில் நடுத்தர வயதினனாகக் காணப்பட்ட ஒரு வணிகன், ''நீ யார்? இங்கு எங்கு வந்தாய்?'' என்று வினவினான்.

பராந்தகன் மெதுவாகப் புரவியிலிருந்து தரையில் குதித்து அவர்களை நோக்கி நடக்க முற்பட்டதும் முல்லையை மீண்டும் நிறை செய்து குகைக்கு இழுத்து வந்த நடுத்தர வயதுள்ள வணிகன் தனது கைகளிலிருந்த குறுவாளைக் காட்டி, ''நில் எட்டவே. கேட்டதற்கு பதில் சொல்'' என்று மிரட்டினான்.

பராந்தகன் நகைத்தான் மெதுவாக, ''சமத்! அதற்குள் என்னை மறந்துவிட்டாயா?'' என்றும் வினவினான்.

சமத் வியப்பை விரியவிட்டுக் கொண்டான். '' என் உண்மைப் பெயர் உனக்கு எப்படித் தெரிய வந்தது?'' என்று கேட்டான், வியப்பு சொற்களிலும் ஒலிக்க.

''எப்படித் தெரிய வந்தால் என்ன? இப்பொழுது நம்ப முடியவில்லையா?'' என்று வினவிய பராந்தகன் தனது புரவிமீது சேணத்தைப் போட்டுவிட்டு நடந்து அவர்கள் எதிரே உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுதும் அவன் மீது நம்பிக்கை வராத முல்லையைக் கெடுக்க முயன்ற வாலிப வணிகன், ''பெயரில் என்ன இருக்கிறது? அதை எங்காவது விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்'' என்று கட்டிக் காட்டினான்.

இதைக் கேட்டதும் முதலில் பேசிய நடுத்தர வயதினனான சமத், ''முட்டாள்தனமாகப் பேசாதே. என் பெயர் நமது இனத்தாரைத் தவிர இந்த நாட்டில் யாருக்கும் தெரியாது''

என்று எரிந்து விழுந்து, ''ஐயா! இந்தக் காமுகனைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நீங்கள் யாரென்று சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

''என் பெயர் கடம்பன். முல்லாவின் நண்பன்'' என்று பெரிய பொய்யைச் சொன்னான் பராந்தகன்.

கடம்பன் என்ற பெயருடன் முல்லா என்று முதியவர் பெயரையும் சேர்த்துச் சொன்னதும் மூன்று வணிகர்களுக்கு மட்டுமின்றி காட்டுவாசிகளுக்கும் அவனிடம் நம்பிக்கை ஏற்படவே அவர்களும் அவனை நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள். அந்த சகஜ நிலையில் ஒருவன் கேட்டான்: ''முல்லா இப்பொழுது எங்கே?'' என்று.

''காயலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார். உங்களையும் உடனடியாகக் காயலுக்கு வரச் சொன்னார். உங்களை அழைத்து வர என்னை அனுப்பினார்'' என்று விளக்கினான் பராந்தகன்.

''காயலுக்குப் புறப்பட்டுவிட்டாரா! எப்படி? தனியாகவா?'' என்று வினவினான் சமத்.

இதைக் கேட்ட பராந்தகன் முகத்தில் பெருவியப்பைக் காட்டினான். ''என்ன கேள்வி இது?'' என்று வியப்புடன் வினாவொன்றையும் எழுப்பினான்.

''ஏன்? கேள்விக்கு என்ன?'' என்று வாலிப வணிகன் கேட்டான்.

''தவறில்லை, தவறில்லை'' பராந்தகன் குரலில் சந்துஷ்டி இருந்தது.

''என்ன தவறில்லை?'' சமத் சந்தேகத்துடன் கேட்டான்.

''தனியாகவா என்ற கேள்வி என்னைச் சோதிக்கும் கேள்வி. நான் உண்மையாக முல்லாவின் நண்பனா என்பதை அறிவதற்காகக் கேட்டிருக்கிறீர்கள். அவர் தனியாக எப்படிப்

போக முடியும், விற்பனைக்கு வாங்கிய பெண்ணை விட்டு?'' என்று பராந்தகன் வினவியதும் அவன் எதிரே உட்கார்ந்திருந்த வணிகரில் இருவர் எழுந்தே விட்டனர்.

சமத் மட்டும் எழுந்திருக்கவில்லை. சந்தேகக் கண்கள் பராந்தகன் மீது நிலைத்தன. ''இப்பொழுது முல்லாவும் பெண்ணும் எங்கே?'' என்று வினவினான்.

''ஏற்கெனவே சொன்னேன் காயலை நோக்கிச் செல்வதாக'' என்று பராந்தகன் சொற்களில் சிறிது கடுப்பைக் காட்டினான்.

''எங்களை விட்டு அவர் மட்டும் ஓட வேண்டிய காரணம் என்ன?'' என்று சமத் கேட்டான்.

பராந்தகன் சமதையும் அவன் நண்பர்களையும் ஒருமுறை கூர்ந்து நோக்கினான். பிறகு சொன்னான், ''சமத்! காரணம் உனக்கே புரிந்திருக்க வேண்டும்'' என்று.

''என்ன காரணம்?'' என்று சமத் வினவினான்.

அவன் கேள்விகளுக்குக் காரணத்தைப் பராந்தகன் உணர்ந்தே இருந்தான். பெண்ணின் விலை முழுவதையும் முல்லா விழுங்கிவிட்டால் என்ன செய்வது என்ற சந்தேகமே இத்தனை கேள்விகளை வீசச் செய்கின்றன என்பதைப் புரிந்து கொண்ட பராந்தகன் தனது கண்களில் தீயைப் படரவிட்டுக் கொண்டான். சுடும் விழிகளால் சமதை நோக்கிய அவன், ''சமத், தூங்குமூஞ்சிகளை நம்பி இந்த வியாபாரத்தில் இறங்கியதைப் பற்றி பெரிதும் வெறுக்கிறார் முல்லா. நேற்றிரவு நாங்கள் இங்கு வந்தபோது நீங்கள் எல்லோருமே உறங்கிக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் வாங்கிய மனித சரக்கும் உறங்கிக் கொண்டிருந்தது. அதனால் முல்லா சினந்தார். 'கடம்பா! இதைப் பார். இந்த முல்லையின் காதலன் வந்தால் நமது கதி என்ன?' என்று எரிந்து விழுந்தார்'' இதை மெல்லச் சொன்னான் பராந்தகன்.

சமதின் கண்கள் எழுந்தன பராந்தகனை நோக்கி, ''இவள் காதலனா? அவன் யார்?'' என்று சொன்னான்.

''இவளுக்கு ஒரு காதலன் இருக்க வேண்டும். அதனால்தான் அவ்வளவு முரண்டினாள் என்னிடம்'' என்றான் வாலிப வணிகன்.

''வாயைத் திறக்காதே. எல்லாம் உன்னால் வந்த வினை'' என்ற வாலிப வணிகனை அடக்கிய சமத், பராந்தகனை நோக்கி ''அவளுக்குக் காதலன் இருப்பதற்கும் முல்லா எங்களை விட்டுப் போவதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று வினவினான்.

சமதின் வினாவைக் கேட்ட பராந்தகன் புன்முறுவல் செய்து, ''தாங்கள் இந்த ஊருக்குப் புதிதோ?'' என்று கேட்டான்.

''புதிதாக இருந்தால் என்ன?'' சமத் வினவினான் சலிப்புடன்.

''என்ன ஆபத்து என்று புரியவில்லை உங்களுக்கு?'' என்றான் பராந்தகன்.

''இதில் ஆபத்து ஏது?''

''அவள் காதலன்தான் ஆபத்து. அவன் மிகவும் கொடியவன். முல்லை விற்கப்பட்டது அவனுக்குத் தெரிந்தால் இந்தக் கொட்டும்தளமே தூள் பறக்கும்.''

''அப்பேர்ப்பட்டவனா?''

''ஆம்.''

''பெயரைக் கேட்டால் நீங்கள் திடுக்கிடுவீர்கள்.''

''சொல்லுங்கள் பெயரை.''

''சொல்கிறேன். ஆனால் அஞ்சாதீர்கள்'' என்று பூர்வ பீடிகை போட்டுக் கொண்ட பராந்தகன், ''பாண்டிய இளவரசன் பராந்தகனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்று வினவினான்.

இதைக் கேட்டதும் சமதின் முகத்தில் மட்டுமன்றி மற்றவர் முகங்களிலும் திகில் தெரிந்தது. ''கேள்விப்பட்டிருக்கிறோம். பெரிய வீரரென்று கேள்வி'' என்றான் வாலிப வணிகன்.

''அது மட்டுமல்ல, மிகவும் கொடியவன்'' என்றான் பராந்தகன்.

பராந்தகனை சமத் வெறுப்புடன் நோக்கி, ''வீரர்களை இழிவு செய்யும் நாடு இது. பராந்தகன் மகாவீரனென்று கேள்வி. தவிர நாட்டில் எந்த இடத்தில் குழப்பம் இருந்தாலும் அதை அவன் தன்னந்தனியாகச் சென்று அடக்குவதாகக் கேள்வி. அதற்காக அவன் செய்யும் பயணத்தைப் பாண்டியன் பவனி என்று மக்கள் அன்புடன் பேசுவதாகவும் கேட்டிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட வீரன் எப்படிக் கொடியவனாக இருக்க முடியும்?'' என்று வினவினான்.

''வீரனாயிருப்பவன் கொடியவனாக இருக்க முடியாதென்று எங்கு சொல்லியிருக்கிறது?'' என்று பராந்தகன் வினவினான்.

''எங்கும் சொல்லத் தேவையில்லை. வீரமும் கொடுமையும் இணையாது'' என்றான் திட்டமாக சமத்.

''எப்படியிருந்தாலும் அவன் முல்லையின் காதலன். அவளை நீங்கள் சிறை செய்ததை உணர்ந்தால் நீங்கள் யாரும் உயிருடன் தப்ப முடியாது. ஆகவே அவன் முல்லை விற்கப்பட்டதை உணருமுன்பு அரபு நாட்டுக்குக் கப்பலேறி விட வேண்டுமென்று முல்லா நினைக்கிறார். அதனால்தான் காயலுக்குத் துரிதமாகச் சென்றுவிட்டார். சீக்கிரம் கிளம்புங்கள்'' என்றான் பராந்தகன்.

அதற்குப் பிறகு யாரும் ஆட்சேபணை கிளப்பினார்கள் இல்லை. காட்டுவாசிகள் மட்டும் பராந்தகன் பெயரைக் கேட்டதால் அச்சத்துடன், ''எங்கள் ஊதியத்தைக் கொடுத்தால் நாங்கள் போகிறோம். பாண்டிய இளவரசருக்கும் முல்லைக்கும் சம்பந்தமிருப்பது எங்களுக்குத் தெரியாது'' என்று கூறினார்கள்.

அவர்கள் ஊதியத்தைக் கொடுத்துவிடும்படி பராந்தகன் கூறவே அவர்களுக்கு சமத் பணத்தைக் கொடுத்தான். அடுத்து மற்ற வணிகர்கள் மூட்டைகளைக் கட்டி எடுத்துக்கொண்டு முன்னே செல்ல பின்னே தனது புரவியில் ஏறிக்கொண்டு பயணப்பட்டான் பராந்தகன். முதல் நாள் பகல் பயணம் எந்தவிதச் சிக்கலுமில்லாமல் நடந்தது. முதல் நாள் இரவில் பயணத்தைத் தொடர இஷ்டப்படாத பராந்தகன் மூன்று வணிகருடன் மலைக்காட்டின் ஒரு பகுதியில் தங்கினான்.

''இது நல்ல மறைவிடம். இங்கு நாமிருப்பது யாருக்கும் தெரியாது'' என்று கூறிப் புரவியிலிருந்து இறங்கினான், பாண்டிய இளவல்.

''யாருக்கும் தெரியாது'' என்று பராந்தகன் சொன்னது மட்டும் சரியல்ல. ஒருவருக்குத் தெரிந்தது. அவர் அந்த மறைவிடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

21. நெருங்கிய அழிவு

காட்டுவாசிகள் இருவரையும் கத்தரித்துவிட்டு அரபு வணிகர் மூவருடன் காயல் பாதையிலிருந்த மறைவிடத்துக்கு வந்ததும் அங்கு அன்றிரவைக் கழிக்கத் தீர்மானித்த பராந்தக பாண்டியன் ஏற்பாட்டை வணிகர் மூவரும் பாராட்டவே செய்தனர். கொட்டும்தள நெடிய மலைச்சரிவில் அடர்ந்த காட்டின் நடுவே இருந்த அந்த வட்டமான இடைவெளியைவிட மறைவுக்குச் சிறந்த இடம் ஏதுமில்லையென்றே சமதும் அவன் சகாக்களும் நம்பினர். காட்டுமரங்கள் உயர்த்தியாகவும் அடர்த்தியாகவுமிருந்ததால் அந்தச் சிறு வட்டச் சமவெளியை மலை மீதிருந்துகூட யாரும் பார்க்க முடியாதென்பது சமதுக்கு நன்றாகப் புரிந்தது. அதற்குத் திட்டமான வழியும் இல்லாததாலும் காட்டின் எந்த வழியில் புகுந்தாலும் மாறி வேறிடம் செல்ல வசதியிருந்ததாலும் மிகவும் பழக்கப்பட்ட,

இந்தக் காட்டை அணு அணுவாக அறிந்தவர்களைத் தவிர வேறு யாரும் அணுக முடியாதென்று சமத் தீர்மானித்தான். ஆகவே கேட்டான் பாண்டிய இளவலை நோக்கி, ''கடம்பரே! இந்த மலைக்காட்டில் உங்களுக்குப் பரிச்சயம் அதிகம் போலிருக்கிறது?'' என்று.

பாண்டிய இளவல் முகத்தில் பெருமகிழ்ச்சியைக் காட்டினாள். ''இந்த மலையின் குழந்தை நான். தாயை அறியாத சேய் உண்டா?'' என்றும் வினவினாள்.

''இல்லை இல்லை'' என்ற சமத், ''உங்களைப் போலவே முல்லாவும் இந்த வழிகளை அறிந்திருக்கிறார். ஆனால், அவர் இந்த மலையின் சேய் அல்ல'' என்றான் சமத்.

''சேய் இல்லாவிட்டாலென்ன? அடிக்கடி வணிகத்துக்கு இங்கு வருகிறாரல்லவா? அதனால் மலைவழிகள் பரிச்சயமாயிருக்கும். ஆனால், இந்த வழி முல்லாவுக்குக்கூடத் தெரியாது'' என்ற பாண்டிய இளவல், ''இரவு ஏறிவிட்டது. குறைந்த பட்சம் இரண்டு ஜாமங்கள். அதாவது விடியும் வரை நீங்கள் நிம்மதியாக உறங்கலாம்'' என்றும் கூறினாள். மற்றவர்களுக்கு வழிகாட்ட தனது புரவியின் பக்கத்தில் தொங்கிய தோற்பையிலிருந்து ஒரு சிறு துணியையும் எடுத்துத் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டாள். படுத்துக் காலை நீட்டி சற்று நெளிந்து புரண்டு சோம்பல் முறித்து, ''நல்ல மறைவிடம். இங்கு யமன்கூட வர முடியாது'' என்று கூறி, நிம்மதியாகக் கண்களை மூடவும் செய்தாள். சிறிது நேரத்தில் அவள் மூச்சு ஒரே சீராக வருவதை சமதும் மற்றவர்களும் கவனித்தாலும் அவர்கள் படுக்கவில்லை.

வாலிப வணிகன் முட்டிகளைக் கட்டிக்கொண்டு தரையில் உட்கார்ந்த வண்ணம், ''சமத், இவனை நீ நம்புகிறாயா?'' என்று வினவினான்.

சமத் வாலிப வணிகனை உற்று நோக்கினான். ''நம்பவில்லை. வேறுவழி இருந்தால் சொல்'' என்று கேட்டான்.

''முல்லாவை நம்பினோம்...'' என்று சுட்டிக் காட்டினான் வாலிப வணிகன்.

''ஆம்'' என்று ஆமோதித்தான் சமத்.

''அவரை நீண்ட காலமாகவே நமக்குத் தெரியும்.''

''ஆம்!''

''இம்மாதிரி பலவகை வாணிபங்களுக்கு நம்மை அழைத்து வந்திருக்கிறார்.''

''ஆம்!''

''அவரே நம்மைவிட்டு ஓடிவிட்டார் சொந்த லாபத்தைக் கருதி.''

இதற்கு சமத் சொன்ன பதில் வாலிப வணிகனை அதிர்ச்சியுறச் செய்தது. ''உனக்கு எப்படித் தெரியும்?'' என்ற வினவினான் சமத்.

''சமத்'' வியப்புடன் வினவினான் வாலிப வணிகன்.

''அவர் நம்மைவிட்டு ஓடிவிட்டாரென்பது இவன் சொல்லித் தானே நமக்குத் தெரியும்? இவன் உண்மை சொல்கிறானென்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டான் சமத்.

''சமத்?'' வாலிப வணிகன் பேரதிர்ச்சியைக் காட்டினான். ''உன்னை நம்பித்தானே நாங்கள் இவன் பேச்சை நம்பினோம். உன்னை நம்பித்தானே இவனுடன் வந்தோம்?'' என்று கூறினான்.

அறிவாளியான சமத் லேசாக நகைத்தான். ''இந்த மாதிரி வியாபாரத்தில் யாரும் யாரையும் நம்புவதில்லை தம்பி! திருடர்கள் பரஸ்பரம் நம்ப முடியாது. ஆனால் இவனுடன் ஏன் வந்தோம்? முல்லா வராததிலிருந்து அவர் பெண்ணுடன் காயல் போயிருக்க வேண்டுமென்பது தெளிவு. இல்லையானால் அவர்

ஏன் திரும்பவில்லை குகைக்கு? சரி, அவர்தான் திரும்பவில்லை. குகையிலிருந்த பெண் எப்படி குகையிலிருந்து மறைந்தாள்? நாம் உறங்கிக் கொண்டிருக்கையில் முல்லா பெண்ணை அழைத்துச் சென்றார் என்பது இவன் கதை. உறங்கினால் அவர் நம்மை ஏன் எழுப்பவில்லை? இப்படிப் பல கேள்விகள் உண்டு தம்பி. இவனை நம்பி வர நான் முட்டாளல்ல. முல்லா வராததிலும் அல்லது வந்து நம்மை விட்டுச் சென்றதிலும் மர்மமிருக்கிறது. நாம் இவனை நன்றாகக் கவனிப்போம். இவனை விட்டால் நாம் தப்பிச் செல்ல வேறு வழியுமில்லை. முல்லைவேந்தன் பெரிய திருடனென்று கேள்வி. நம்மைப் பிடித்து மீதிப் பணத்தையும் விழுங்கி நம்மையும் சிறையிலடைத்து விடுவான். ஆகையால்தான் நான் காயலுக்குச் செல்ல உட்பட்டேன்'' என்று விளக்கினான் சமத் தனது சந்தேகங்களை.

வாலிப வணிகன் அவனை பிரமையுடன் பார்த்தான். ''சமத் நீ ஒருவன் மட்டுமில்லாவிட்டால் நாங்கள் இத்தனை நேரம் சிறையிலிருப்போம்'' என்று பாராட்டினான் பிரமிப்பின் ஊடே. ''இனி நாம் என்ன செய்வது?'' என்றும் வினவினான்.

சமத் இகழ்ச்சியாகப் புன்னகை ஒன்றை உதடுகளில் படரவிட்டுக் கொண்டான். ''தற்சமயம் செய்யக்கூடியது எதுவு மில்லை. படுத்துக்கொள். அவசியம் வந்தால் எழுப்பு கிறேன். எதற்கும் கை உனது குறுவாளிடம் இருக்கட்டும். எந்த விநாடியிலும் உன்னைப் பாதுகாத்துக்கொள்ள சித்தமாயிரு'' என்று கூறிவிட்டுத் தானும் மல்லாந்து தரையில் படுத்து தனது இடையில் செருகியிருந்த குறுவாளின் பிடியில் கையை வைத்துக்கொண்டு கண்களை மூடினான். ''நல்லவேளை! இது யாரும் வர முடியாத மறைவிடம்'' என்றும் சொல்லிக் கொண்டான்.

ஆனால், அந்தச் சமயத்தில் அந்த வட்டச் சமவெளிக்கு வரும் வழியில் காட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார் ஒருவர், தனது

புரவியுடன். புரவி நல்ல வலுவான அரபுப் புரவி. அதன் மீது வந்தவரும் திடகாத்திர மனிதர். சற்று நேரத்திற்கு ஒரு முறை அவர் நாற்புறமும் பார்த்துக் கொண்டு மரங்களுக்கு இடையில் புரவியைச் செலுத்தினார். அந்தப் புரவிக்கும் அந்த வழி தெரிந்திருக்க வேண்டும். அது மிகவும் சாமர்த்தியமாகக் காட்டு மரங்களின் அடர்த்திக்குள் நடந்து வெகு அடர்த்தியான பகுதிகளிலிருந்து விலகியும் மற்ற இடங்களில் எசமான் மீது கிளைகள் படாமல் சற்று விலகி முளைத்திருந்த மரங்கள் கொடுத்த இடைவெளியில் நுழைந்தும் நடந்ததிலிருந்து அது அந்தக் காட்டை நன்றாக அறிந்திருக்க வேண்டுமென்று புலனாயிற்று.

அதன் மீதிருந்த மனிதர் சாட்சாத் ராட்சஸன் போலிருந்தாலும் அவர் கச்சையிலோ, பக்கவாட்டிலோ எந்தவித ஆயுதமும் தென்படவில்லை. மடியில் மட்டும் செருகி ஆடிய ஒரு சிறு பையை அடிக்கடி ஆவலுடன் தொட்டுப்பார்த்து மகிழ்ச்சிப் புன்முறுவலை முகத்தில் விரிய விட்டுக் கொண்டார். இப்படிப் பயணம் செய்தவர் வணிகரும் பாண்டிய இளவலும் மறைந்திருந்த வட்டச் சமவெளிக்கு முன்பாகவே தமது புரவியை நிறுத்திக்கொண்டு மரங்கள் மூலம் வட்டத்திலிருந்த வணிகர்களையும் பராந்தகனையும் உற்றுப் பார்த்து ''நல்ல உறக்கத்திலிருக்கிறார்கள்'' என்று கூறி திருப்தியுடன் தலையை அசைத்தும் கொண்டார். பிறகு சற்று யோசித்துவிட்டுத் தமது இடையில் தொங்கிய பையிலிருந்த ஒரு சிறு உருண்டை வில்லை எடுத்து இரண்டாகப் பிரித்திருந்த அதன் கிளையில் தொங்கிய வாரை சற்று இழுத்துப் பார்த்தார். அடுத்து கீழே குனிந்து ஒரு சிறு கல்லை எடுத்து வாரின் நடுவிலிருந்த சிறு தோலில் வைத்து இரு விரல்களால் அழுத்தி வாரை இழுத்துக் கல்லை மெதுவாகப் பறக்கவிட்டார். கல்லும் விர்ரென்று கிளம்பி பராந்தகன் மார்பு மீது பட்டென்று விழவே, பராந்தகன் மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

கண்களைத் திறந்து மார்பின் மீது விழுந்து கிடந்த கல்லை எடுத்து உருட்டிப் பார்த்து புன்முறுவல் கொண்டான். பிறகு அதை எடுத்துக் காட்டை நோக்கி எறிந்தானானாலும் அதிக தூரம் செல்லாமல் பத்தடி தூரத்திலேயே விழுந்துவிட்டது. அது 'டக்'கென்று விழுந்த சத்தம் மற்ற வணிகர்களை எழுப்பாததைக் கண்ட பராந்தகன் மிகுந்த திருப்தியுடன் எழுந்து உட்கார்ந்து மற்றவர்களை நோக்கினான்.

மூன்று அரபு வணிகர்களும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை பல விநாடிகள் உற்று பார்த்த பிறகு எழுந்த பாண்டிய இளவல் காட்டின் அடர்த்தியை நோக்கி நடந்தான் மெதுவாக. அவன் நடந்ததும் படுத்தபடியே அவளை ஏறிட்டு நோக்கிய தனது புரவியை அவன் சைகைகாட்டி அடக்கிவிட்டுச் சென்றான். காட்டுக்குள் மறைந்ததும் புரவி மெதுவாக எழுந்து காட்டின் முகப்புக்குச் சென்று அங்கிருந்த புற்களை மேயத் துவங்கியது. நிமிடத்துக்கொருதரம் படுத்திருந்த வணிகர்களைப் பார்க்கவும் செய்தது.

இத்தனைக்கும் சமத் உறங்கவில்லை. காட்டுப்பகுதியில் புரவி ஒன்றின் காலடிச் சத்தம் கேட்டதுமே விழித்துக் கொண்டான். இருப்பினும் அடுத்து நடப்பதை அறிய விழிக்காதது போலவே அரைவாசி மூடிய கண்களுடன் படுத்துக் கிடந்தான். பாண்டிய இளவல் காட்டுக்குள் புகுந்தபோது அவன் புரவிக்குக் காட்டிய சைகையையும் அதற்குப் புரவி தலையாட்டியதையும் கண்டான். அதுவரை புரியாத பெரு உண்மை அவனுக்குத் திடீரெனப் புலனாகவே அவன் முகத்தில் அச்சமும் விரியலாயிற்று. படுத்தபடியே தனது முழங்கையால் பக்கத்திலிருந்த வாலிப வணிகனைக் குத்திய சமத் அவனை எதற்கும் சித்தமாயிருக்கும்படி எச்சரிக்கை செய்துவிட்டு தான் மட்டும் மெதுவாக எழுந்து பராந்தகன் புரவி புல் மேய்ந்து கொண்டிருந்த இடத்தை அணுகினான். அவன் அணுகியதும் புரவி காட்டுக்குள் புகுந்தது. அதைப் பின்பற்றி காட்டுக்குள்

புகுந்தான். அது நான்கு அடிகள் முன் நடந்ததும் அது மேலும் பாச்சு காட்டி நடக்கவே அவன் சினம் கொண்டு தனது குறுவாளை எடுத்து அதன் கண்ணை நோக்கி வீசச் சித்தமானான். குறுவாளைப் பற்றிய அவன் கை இரும்புக் கரமொன்றால் பிடிக்கப்பட்டது. பிடித்தது யாரென்று பார்க்கத் திரும்பினான் சமத். திரும்பியவன் தனது கண்களை நம்பாமல் "தாங்களா?" என்று பிரமை தட்டிய சொற்களை உதிர்த்தான்.

"நான்தான்!" என்ற அந்த மனிதன், "பராந்தகனின் கடைசி கட்டம் நெருங்கிவிட்டது. இந்தக் காடு முழுவதும் எனது வீரர்கள் இருக்கிறார்கள். நீ மட்டும் சொன்னபடி கேள். உனக்கு முல்லையும் கிடப்பாள். பணமும் நிரம்பக் கிடைக்கும்" என்றான்.

பாண்டிய இளவல் தப்ப முடியாதென்பதையும் அவன் அழிவு நெருங்கிவிட்டதையும் சமத் புரிந்துகொண்டான். "நான் என்ன செய்ய வேண்டும்? உத்தரவிடுங்கள்" என்று தன்னைப் பிடித்து நின்றவனிடம் கூறினான்.

22.பழிவாங்கும் படலம்

அடிக்கடி பாய்ச்சல் காட்டி காட்டுக்குள் நடந்த பராந்தகன் புரவியின் கண்ணுக்குத் தனது குறுவாளைக் குறிவைத்த அந்த நடுத்தர அரபு வணிகன், தனது கை பின்புறமிருந்த ஓர் இரும்புக்கையால் பிடிக்கப்பட்டதால் சினமுற்றுத் திரும்பிப் பார்த்ததும் கையைப் பிடித்தவன் யாரென்பதை உணர்ந்ததன் விளைவாக பிரமைக்கும் அச்சத்துக்கும் இலக்கானான். அவன் கையை முல்லைவேந்தன் பற்றியிருந்தாள் தனது கையொன்றால். "தாங்களா!" என்று அவனைப் பார்த்து பயத்துடன் விசாரித்த வணிகனை, இதழ்களில் குரூரமான புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டு, உஷ்ணமும் ஏளனமும் விரிந்த கொடிய விழிகளால் நோக்கினான் முல்லை

வேந்தன். ''ஆம்! நான்தான், என் மகளை நீங்கள் குறைந்த விலை கொடுத்து வாங்கி விட்டீர்கள். ஆனால், அவளை இங்கிருந்து கொண்டு போய்விட முடியாது'' என்றும் சொன்னான்.

பதிலுக்கு லேசாக நகைத்த அந்த நடுத்தர வயதுள்ள வணிகன், ''உங்கள் பெண் போயாகிவிட்டது காயலுக்கு. இனி அவளை யாராலும் மீட்க முடியாது'' என்றான்.

முல்லைவேந்தன் முகத்தில் சீற்றம் விரிந்தது. ''சுத்தப் பொய். கொடடும்தள கட்டுக்காவலை மீறி யாரும் மலைப் பாதையில்கூட இறங்க முடியாது'' என்றான் சொற்களிலும் சீற்றம் துலங்க.

''முடியாது என்று நீங்கள் மனோராஜ்யம் செய்யலாம். ஆனால், அவள் காயல் போய்விட்டாள். இனி அவளை உங்களால் மீட்க முடியாது!'' இதைத் திடமாகச் சொன்னான் வணிகன்.

''யார் அழைத்துப் போயிருக்கிறார்கள்?'' இம்முறை சந்தேகத்துடன் வந்தது முல்லைவேந்தன் கேள்வி.

''முல்லா'' என்றான் வணிகன்.

''முல்லாவா! யார் அது?'' வேந்தன் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

''எங்கள் தலைவர். உங்களிடமிருந்து பெண்ணை விலை பேசி வாங்கியவர்'' என்று விளக்கினான் வணிகன்.

''அந்தக் கிழவனா?'' இகழ்ச்சி இருந்தது வேந்தன் குரலில்.

''கிழவராயிருக்கலாம் முல்லா. ஆனால் திறமை மிக்கவர். எடுத்த காரியத்தை சாதிக்காமல் விடமாட்டார்.'' தலைவனுக்குப் பரிந்து பேசினான் வணிகன்.

''விடுவார். வேறு வழியில்லை. இந்தக் கொட்டும்தள வாயில்கள் எல்லாவற்றையும் அடைத்து விட்டேன். உத்தரவை

மீறிப் போக முயன்றவர்களைக் கழுகுப்பாறைக்கு அனுப்பி னேன். கொட்டும்தள மக்கள் திகிலுடன் இருக்கிறார்கள். கொட்டும்தள மலைச்சரிவின் பக்கப் பகுதிகளும் வீரர்களால் கண்காணிக்கப்பட்டிருக்கின்றன'' என்று சுட்டிக் காட்டினான் முல்லைவேந்தன்.

சமத் சிறிது சிந்தித்தான். பிறகு சொன்னான், ''இத்தனை யையும் மீறி நாங்கள் வெளிவந்திருக்கிறோமே, எப்படி?'' என்று.

முல்லைவேந்தனின் மூளையில் அப்பொழுதுதான் சிறிது வெளிச்சம் உதயமாகவே, ''ஆமாம். எப்படி வந்தீர்கள்? இந்த மறைவிடத்திற்கு ஒரு ரகசிய வழி இருக்கிறது. ஆனால் யாருக்கும் தெரியாதே'' என்று சொல்லி ''யாரது சொல்லிவிடு'' என்ற கேள்வி தொனிக்க தனது கண்களை வணிகன் மீது நிலைக்க விட்டான்.

முல்லைவேந்தனின் சங்கடமும் சந்தேகமும் சமதுக்குத் தெரிந்து விட்டதால் அவன் எரிகிற விளக்கைத் தூண்டி விட்டு, ''எல்லாம் தெரிந்த ஒருவன் இருக்கிறான். அவன் துணையுடன் வந்தோம். அவன் ஏதோ மலை வழியில் திருப்பித் திருப்பி அழைத்து வந்தான். அவன் உதவியில்லாமல் நாங்கள் திரும்பிச் செல்லவும் முடியாது'' என்று கூறி முல்லைவேந்தன் மூளைக்கு அதிக வெளிச்சத்தை அளித்தான்.

''அவன் பெயர்?'' கேள்வி திடீரென எழுந்தது வேந்தனிட மிருந்து.

''கடம்பன்.''

''கடம்பனா?''

''ஆம்.''

''அப்படியொரு மகாவீரன் இருப்பதாகக் கேள்வி இல்லையே.''

"இப்பொழுது கேள்விப்படுங்கள். கடம்பன் மகா தந்திரசாலி. முல்லாவை காயலுக்கு அனுப்பியதே அவன்தான். முதல்தரத் திருடன், நயவஞ்சகன்" என்று கடம்பனைப் பற்றி வசை பாடினான் வணிகன்.

முல்லைவேந்தனுக்கு ஏதுமே புரியவில்லை. கடம்பன் என்று எந்த வீரனைப் பற்றியும் அவன் அன்றுவரை கேள்விப்பட்டதில்லை. அப்படியே இருந்தாலும் இஷ்டப்படி கொட்டும்தளத்துக்குள் நுழையவும் வெளியே செல்லவும் அவனென்ன மாரீசனா என்று தன்னுள் கேள்விகளை எழுப்பிக் கொண்டான். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்த புரவியை நோக்கினான். "அது யார் புரவி?" என்றும் விசாரித்தான்.

"கடம்பன் புரவி" வணிகன் அலட்சியமாக பதில் சொன்னான்.

"அதை ஏன் கொல்ல முயன்றாய்?"

"கடம்பனைப் போலவே அதுவும் வஞ்சக நெஞ்சமுள்ளது."

"எப்படித் தெரியும் உனக்கு?"

"அவன் சொல்கிறபடியெல்லாம் ஆடுகிறது."

இதைக் கேட்டதும் உண்மை உதயமாகவே "முட்டாள்! முட்டாள்!" என்று கூறினான் முல்லைவேந்தன்.

"என்ன வேந்தரே?" ஏதுமே புரியாமல் கேட்டான் சமத்.

முல்லைவேந்தன் முகத்தில் இகழ்ச்சி மேலும் படர்ந்தது. "மடையா! உங்களை அழைத்து வந்தவன் கடம்பனுமில்லை, காத்தவராயனுமில்லை. அவன் பாண்டிய இளவரசன் பராந்தகன். அவனிடம் நீங்கள் சிக்கிக் கொண்டதைவிட சிங்கத்தினிடம் சிக்கிக் கொண்டிருக்கலாம். சிங்கம் உங்களை ஒரு முறை அடித்துக் கொன்றுவிட்டுப் போய்விடும். இவன் அப்படியல்ல, முல்லையை நீங்கள் விலைக்கு வாங்கியதற்கு

உங்களைச் சிறுகச் சிறுக சித்திரவதை செய்து கொல்லுவான்" என்ற முல்லைவேந்தன், "சரி, இப்பொழுது அவன் எங்கே?" என்று வினவினான்.

"சற்று முன்புதான் இந்தக் காட்டிற்குள் நுழைந்து சென்றான்" என்ற வணிகன் தனது நிலையையும் சக வணிகர்கள் நிலையையும் குறித்துப் பெரும் துன்பச் சூழலில் ரிக்கினான்.

முல்லைவேந்தன் கண்கள் குறுகின. சினந்து நோக்கின வணிகனை. "வணிகரே! பராந்தகன் சுதந்திரமாயிருக்கும் வரை நமது புரட்சி நடவாது" என்றான்.

"நாங்கள் ஒன்றும் புரட்சி செய்யவில்லையே" என்றான் வணிகன்.

"இனிமேல் செய்யப் போகிறீர். பராக்கிரம பாண்டியன் எழுச்சியில் நீர் ஓர் அங்கம். இன்னும் இரண்டு நாளில் இந்தச் கொட்டும்தளம் அமர்க்களப்படும். போர் இதை சூழ்ந்து கொள்ளும். அந்தப் போர் முனையின் முகப்பில் நீங்களும் உங்கள் நண்பர்களுமிருப்பீர்கள்" என வெறிதொனித்த குரலில் வேந்தன் சொன்னான்.

வணிகனுக்கு ஏதுமே புரியாததால் மிரள மிரள, "யார் பராக்கிரம பாண்டியன்?" என்று கேட்டான்.

முல்லைவேந்தன் பேசவில்லை. தனது மார்பைத் தட்டிக் காட்டினான். "தாங்களா!" என்று வியந்து வினவினான்.

"ஆம்"

"முல்லைவேந்தன்?"

"அதுவும் நான்தான்."

"கடம்பன் மாதிரி?"

"என்ன கடம்பன் மாதிரி?"

"அவரும் இரண்டு பெயர்களை வைத்துக் கொண்டிருக்க வில்லையா?" என்ற வணிகன், "ஆமாம். இந்த நாட்டில் எதற்காகப் பெரிய மனிதர்களெல்லாம் இரண்டு பெயர் வைத்துக் கொள்கிறார்கள்?" என்று கேட்டான்.

"எங்களிஷ்டம்" என்ற முல்லைவேந்தன், "இந்தத் தர்க்கம் இருக்கட்டும். முதலில் பராந்தகனைப் பிடிப்போம்" என்றான்.

"எப்படி?" என்று வினவினான் வணிகன்.

"வழி இருக்கிறது" என்ற முல்லைவேந்தன், "நன்றாகக் கேட்டுக் கொள். உன் சகோதர வணிகர்களை அழைத்துக் கொண்டு கொட்டும்தளம் போ..." என்றான். சமத் இடை மறித்து, "எப்படி உள்ளே நுழைவது?" என்று விசாரித்தான்.

முல்லைவேந்தன் கீழே கிடந்த கூழாங்கற்களைக் காட்டினான். அதில் நல்ல வெள்ளையாயுள்ளதை எடுக்கச் சொன்னான். சமத் அதை எடுத்ததும், "இதை நுழைவாயிலில் காட்டு. உள்ளே அனுமதிக்கப்படுவாய் உன் நண்பர்களுடன்" என்றான்.

"பிறகு?" என்று சமத் வினவினான்.

"நமது பழிவாங்கும் படலம் துவங்குகிறது. அதற்குப் பூர்வாங்கமாக என் மகளையும் முல்லாவையும் பிடிக்க வேண்டும்" என்று கூறிய முல்லைவேந்தன், அடுத்து மிக பயங்கரமான பழித்திட்டமொன்றையும் சமதுக்கு எடுத்துச் சொன்னான். சமத் விழித்தான். "இப்படியும் ஒரு கிராதகன் உலகில் உண்டா?" என்று எண்ணமிட்டான்.

இருப்பினும் முல்லைவேந்தன் உத்தரவுப்படி நடக்க ஒப்புக் கொண்டான். தனது வணிகர்களுடன் நுழைந்து விட்டான். அவன் நுழைந்து தளத்தின் நடுப்பகுதிக்கு வந்தபோது பேரதிர்ச்சி அடைந்தான். மற்றொரு திக்கிலிருந்து இரு புரவிகள் கடும் காவலில் வந்தன. அந்தப் புரவிகளில் தாடி மீசையில்லா முல்லாவும் வேந்தன் புதல்வி முல்லையும் வந்து கொண்டிருந்

தார்கள். பராக்கிரம பாண்டியனின் பழிவாங்கு படலத்தின் முதல்படி துவங்கிவிட்டதை சமத் உணர்ந்தான்.

அவர்களிருவரையும் எட்ட புரவியில் உட்கார்ந்த வண்ணம் முல்லைவேந்தன் வரவேற்றான். "சாம்பா! உன் தாடியும் மீசையும் என்னை ஏமாற்றவில்லை. எனது புரட்சிக்கு எதிராக நீங்களிருவருமே சதி செய்யதிருக்கிறீர்கள். நாளை மாலைக்குள் பராந்தகன் இங்கு வந்து சிறைப்படாவிடில், சாம்பா நீ தூக்கில் தொங்குவாய். அந்த என் மகளுக்குத் தனி தண்டனை ஏற்பாடு செய்திருக்கிறேன். 'ஏன் பெண்ணாகப் பிறந்தோம்' என்று அவள் ஏங்கும் பெரும் தண்டனை அவளுக்குக் காத்திருக்கிறது" என்று கூறிக் காவலரை நோக்கி, "இவர்கள், இருவரையும் சிறையில் தள்ளுங்கள்!" என்று உத்தரவிட்டான்.

23. ஆடு புலி ஆட்டம்

கொட்டும்தளத்தின் மனோரஞ்சகமான சூழ்நிலையில் அந்த விடியற்காலையில் நல்ல கட்டுக்காவலுக்குள், முல்லை யும் முல்லாவும் இரு புரவிகளில் வந்ததையும் அவர்கள் இருவரையும் முல்லைவேந்தனே எதிர் கொண்டதையும், முல்லா தாடியிழந்து விட்டதையும் கண்ட சமதும் அவன் சகவணிகர்களும் பெருவியப்பை அடைந்தார்களென்றால், முல்லை வேந்தன், முல்லாவை சாம்பன் என்று அழைத்ததும் வியப்பின் உச்சியை அடைந்தார்கள். ஓர் இந்துவா அப்படி வேஷம் போட்டு நம்மை வருஷக்கணக்கில் ஏமாற்றினான் என்று நினைத்ததன்றி திகிலும் அடைந்தார்கள். ஆனால், முல்லா என்ற சாம்பன், முல்லைவேந்தன் சொன்ன எதையும் மறுக்காமலும் அலட்சியமாகப் புரவியிலிருந்து கீழே இறங்கி முல்லைவேந்தனை அணுகி, "பராக்கிரமா! பராக்கிரமம் சிறிதும் அற்றவனே, பாண்டியன் குலத்தின் கோடரிக்காம்பே! பெண் பாசமில்லாத மூர்க்கனே! உன் மிரட்டல்கள் என்னைப்

பணிய வைக்க முடியாது. உன்னைக் கண்டு நான் சிறு வயதிலும் அஞ்சியதில்லை. இப்பொழுதும் அஞ்சப்போவதில்லை. ஒரு புத்திமதி மட்டும்சொல்கிறேன். உன் மந்த புத்தியில் ஏறுமானால் கேள். இப்பொழுதே பராந்தகனிடம் சரண் அடைந்துவிடு. இல்லாவிட்டால் நீ அழிவது திண்ணம். சுயநலத்தை முன்னிட்டு நீ நடத்தும் இந்தப் போலிப்புரட்சியும் சிதைவது திண்ணம்'' என்று இரைந்து பேசினான்.

கொட்டும்தள நடுச்சதுக்கத்தில் புரவி மீது அமர்ந்து இருசிறைப் பறவைகளையும் கவனித்த முல்லைவேந்தன், சாம்பனின் சொற்களைக் கேட்டுப் பெரிதாக நகைத்தான். ''சாம்பா! பிரசங்கம் நன்றாகச் செய்கிறாய். அஞ்சாதே! நாளை மாலைக்குள் நீ தூக்கில் ஆடும் முன்பு இன்னும் நீண்ட பிரசங்கம் செய்ய அனுமதி தருகிறேன்'' என்று கூறினான் நகைப்பினூடே. பிறகு மகளை நோக்கி, ''அடி பராந்தகன் வேசி! உனக்கு நாளைக்கு என்ன தண்டனை என்று இப்பொழுது சொல்லமாட்டேன். நாளை புரியும் உனக்கு'' என்று சொல்லிவிட்டு அவர்களை இழுத்துச் செல்லுமாறு, காவலர்களுக்குக் கட்டளையிட, நான்கு காவலர்கள் முன்னேறினார்கள். அவர்கள் தனது புரவியை நெருங்கும் முன்பே முதியவனான சாம்பன் கீழே குதித்து, ''என்னைத் தொடாதே! சிறைக்கு வழிகாட்டு'' என்று கூறி நடக்கத் தொடங்கவே, காவலர்கள் இருவர் அவனை சம்பிரதாயத்துக்காக மட்டும் தொடர முற்பட்டனர்.

இவையனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த முல்லை, தந்தையை மிக அலட்சிய விழிகளால் நோக்கினாள். பிறகு புரவியிலிருந்து இறங்கி நன்றாக நிமிர்ந்து ராணிபோல் நின்றாள். தன்னை அணுக வந்த வீரர்களை நோக்கி, ''என் மீது கையை வைத்தால் இங்கேயே பிணமாகிவிடுவீர்கள். பக்கவாட்டில் வாருங்கள்'' என்று அதட்டிவிட்டு, அவர்கள் தனது பக்கங்களில் நின்று கொண்டதும் நிமிர்ந்த தலையுடனும் இகழ்ச்சி கலந்த

நோக்கை நாற்புறத்திலும் வீசிக்கொண்டும் சிம்மாசனத்தை நோக்கி நடக்கும் ராணி போல் கம்பீரமாக நடந்து சென்றாள்.

அவள் தோரணையும் நடையும் காவலரை அவள் மிரட்டிய விதமும் எல்லாமே முல்லைவேந்தன் மனத்திற்குப் பெரும் சங்கடத்தையும் சினத்தையும் விளைவித்ததானாலும் அவன் எதும் பேசாமல் வெறித்து அவளைப் பார்த்தவண்ணம் புரவியில் அமர்ந்திருந்தான். சாம்பனும் முல்லையும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் எட்ட நின்றிருந்த மூன்று அரபு வணிகரும் மெள்ள முல்லைவேந்தனை நோக்கி நடந்து தலை தாழ்த்தி, ''தங்கள் உத்தரவுப்படி வந்து விட்டோம்'' என்று ஏக காலத்தில் கூறினார்கள்.

அவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்தான் பராக்கிரம பாண்டியன். ''நல்லது! வாருங்கள். நமது மாளிகையில் பேசுவோம்'' என்று தனது புரவியை மெதுவாக நடத்திக் கொண்டு போக வணிகரும் பின்தொடர்ந்தார்கள். மாளிகைக்குச் சென்றதும் அவர்களை உள்ளே அழைத்துச் சென்ற பராக்கிரமன், முகப்பு அறையிலிருந்த பெரிய சிங்காதனத்தில் உட்கார்ந்துகொண்டு அவர்களை எதிரே நிற்கவைத்தே பேசினான். ''உன் பெயர் என்ன?'' என்று வாலிப வணிகனைக் கேட்டான்.

''என் பெயர் சலீம். இவர் சமத், அவர் கபீர்'' என்று மூவர் பெயரையும் சொன்னான் வாலிப வணிகன்.

முல்லைவேந்தன் தனது இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டு, ''சலீம், சமத், கபீர்! உங்கள் மூவரில் என் மகளை அடைய ஆசைப்பட்டது யார்?'' என்று ஓர் இடியை எடுத்து வீசினான்.

அதைக் கேட்ட சலீம் தனது ஆயுள் முடிந்துவிட்டதென்று அஞ்சினான். ஆனால், அவனைக் காக்க சமத் பதில் சொன்னான், ''மகாராஜா! உங்கள் பெண்ணை விற்கத்தான் வாங்கினோம், ஆசைப்பட அல்ல'' என்று.

முல்லைவேந்தன் சிந்தனை செய்வதாகப் பாசாங்கு செய்துவிட்டு, "எனது ஒற்றர்கள் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் யாராவது முல்லைமீது ஆசைப்பட்டால் அது தவறில்லை. யாரையும் மயக்கும் அழகு அது. பாண்டிய இளவலே மயங்கிவிட்டானே?" என்று சொன்னான். அத்துடன் மகிழ்ச்சிக்குரலில் கேட்டான், "என்னை மகாராஜா என்று அழைத்தாயே, எப்படி? நான் மகாராஜா அல்லவே" என்று.

சமத் சமயத்தை நன்றாக உபயோகித்துக் கொண்டான். "இன்று இல்லாவிட்டால் புரட்சி முடிந்ததும் நமது எதிரிகள் மடிந்ததும் தாங்கள் மகாராஜாதான்!" என்று புகழ்ச்சித் தூபம் போட்டான்.

முல்லைவேந்தன் முகத்திலிருந்த கடுமை நீங்கி மந்தகாசம் படர்ந்தது, "சொல்வதை ஜாக்கிரதையாகக் கேளுங்கள். முல்லையை முதலில் கழுகுப்பாறைக்கு அனுப்ப நினைத்தேன். ஆனால், அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். ஆயிரம் இருந்தாலும் அவள் என் மகள். தவிர, நான் சொன்ன சொல் மீறாதவன். விற்ற பொருளை வாங்குவது அதர்மம் என்று முடிவுக்கு வந்தேன். மீண்டும் அவளை உங்களிடம் கொடுத்து விடத் தீர்மானித்தேன்..." என்ற முல்லைவேந்தன் சிறிது நிதானித்தான்.

"தங்கள் தரும சிந்தை வேறு யாருக்கும் கிடையாது" என்றாள் சமத்.

"நியாயத்துக்கு நீங்கள் இலக்கணம்" என்றான் இன்னொரு வணிகன்.

வாலிப வணிகன் முகத்தில் ஆவல் பெருகிக் கிடந்தது. "மகாராஜா! நீங்கள் செய்யும் தியாகம் மகத்தானது" என்றாள். முல்லையை அணைக்க மறுபடியும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற நினைப்பில் அவன் முகம் பெரிதும் மலர்ந்தது.

அப்பொழுதுதான் முல்லைவேந்தன் தனது சுபாவத்தைக் காட்டினான். "முல்லையைக் கொடுப்பதில் தியாகம் ஏதுமில்லை. விற்பனை தியாகமாகுமா?" என்று நிதானமாக வினவினான்.

சமதின் முகத்தில் சந்தேகம் நிலவியது. "என்ன சொல்கிறீர்கள் மகாராஜா?" என்று வினவினான் முல்லை வேந்தனை நோக்கி.

"விற்பனை தியாகமாகாது என்று சொன்னேன்" என்று சிறிது அழுத்திச் சொற்களை உதிர்த்தான் பராக்கிரமன்.

"ஏற்கெனவே விற்ற பொருள்தானே?" என்றான் சமத்.

"அதை நீங்கள் கைவிட்டீர்கள். மிகுந்த சிரமப்பட்டு அதைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்தேன். ஆகையால் இப்பொழுது அது என்னைச் சேர்ந்தது. ஆனால், நான் தர்மவழியை விட்டு அகலமாட்டேன்..." என்றான் பராக்கிரமன்.

"என்ன சொல்கிறீர்கள் மகாராஜா?" என்று வாலிபவணிகன் கேட்டான்.

"வேறு யாரிடமும் அவளை விற்க எனக்கு மனமில்லை. உங்களுக்கே விற்றுவிடுகிறேன். ஐயாயிரம் பொன் பணம் கொண்டுவந்துவிடுங்கள்" என்ற முல்லைவேந்தன், தானே சிருஷ்டித்திருந்த சிங்காதனத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

அவன் சொற்களைக் கேட்ட மூன்று அரபு வணிகரும் திகைப்படைந்தனர். "மகாராஜா! எங்களிடம் பணம் ஏது?" என்றான் சமத்.

"வணிகர்களிடமா பணமிருக்காது? எப்படியாவது ஏற்பாடு செய்யுங்கள். முடியாவிட்டால் நாளை சொல்லுங்கள்" என்றான் பராக்கிரமன்.

"எதற்கு மகாராஜா?" சமத் வினவினான்.

"பணமில்லாவிட்டால் படையில் சேரலாம்!" புரட்சி மகாராஜா புன்முறுவல் கொண்டார். தமது பயங்கர மீசையைத் துடவிக் கொண்டார்.

சமத் மிரண்டு விழித்தான். "எந்தப் படையில்?" என்றான் அச்சத்துடன்.

"புரட்சிப்படையில்!"

"புரட்சிப்படையா?"

"ஆம், நாளை இந்தச் சதுக்கத்தில் முக்கியத் தலைவர்கள் கூடுகிறார்கள். நீங்கள் அதில் சேரும் வாய்ப்பைத் தருகிறேன்."

"எதற்கு அந்த வாய்ப்பு?"

"தூக்கிலிருந்து தப்ப" என்ற முல்லைவேந்தன், சிங்காதனத் திலிருந்து எழுந்தான். அதே சமயத்தில் இரு காவல் வீரர்கள் அந்த அறைக்குள் நுழைய அவர்களில் ஒருவன், "வணிகர் களுக்கு விடுதி சித்தமாயிருக்கிறது" என்று அறிவித்தான்.

"அழைத்துச் செல்லுங்கள். இவர்கள் நமது விருந்தாளிகள். தேவையான வசதிகளனைத்தையும் செய்து கொடுங்கள்" என்று உத்தரவிட்டு மாளிகைக்குள் சென்றுவிட்டான் முல்லை வேந்தன்.

வணிகர் மூவரையும் அடுத்த வீதியிலிருந்த சிறு வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்ற வீரர்கள் அவர்கள் தங்க ஓர் அறையைக் காட்டினார்கள். "வீட்டில் யாருமில்லை. நீங்கள் எங்கும் புழங்கலாம். பிற்கட்டில் நீராட வசதியிருக்கிறது. நாங்கள் அவ்வப்பொழுது வந்து பார்த்துக் கொள்வோம்" என்று கூறிவிட்டுச் சென்றார்கள். அன்று முழுவதும் வணிகர்களுக்கு ராஜ உபசாரம் நடந்தது. உபசரிக்க பணிமக்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். நீராடியதும் அவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. விசாரணை பலத்தோடு காவல் பலமும் இருப்பதை சமத் கவனித்தான். அந்த விடுதிக்கு எதிர் விடுதித் திண்ணையில் நாலைந்து சோம்பேறிகள் உட்கார்ந்து சதா

ஆடுபுலி ஆடிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திற்கு ஒருமுறை அவர்கள் தங்கள் விடுதியை கவனிப்பதையும் சமத் கவனித்தான். அவர்கள் சோம்பேறிகள் அல்லவென்பதையும் தங்களைக் கண்காணிக்கும் ஒற்றர்களென்பதையும் சமத் உணர்ந்து கொண்டான். நடுப்பகல் சற்றுத் தாண்டியதும் விடுதியின் புழக்கடைக்குச் சென்று உலாவினான். அந்த விடுதியின் பின்புறத்தில் எழுந்திருந்த பெரும் பாறை மீது மற்றும் இருவர் ஆடு புலி ஆடுவதைக் கண்டான். வீடு நன்றாகச் சூழப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்டு மீண்டும் உள்ளே வந்தான். மற்றவர்களுக்கு உள்ள விஷயத்தைச் சொல்லி, "எச்சரிக்கையாயிருங்கள். பராக்கிரமனும் பராந்த கனும் ஆடும் இந்த ஆட்டத்தில் யார் புலி, யார் ஆடு என்பதை சீக்கிரம் கவனிப்போம்" என்றான் சமத்.

அன்று முழுவதும் அடிக்கடி கொட்டும்தள முரசு ஒலித்துக் கொண்டிருந்தது. ஜனநடமாட்டமும் அதிகமாக இருந்தது. இரவும் மெதுவாக நெருங்கி விளக்கு வைத்தாகிவிட்டது. "நாளை மாலை சகலமும் வெட்ட வெளிச்சமாகிவிடும்" என்றான் சமத்.

"ஆம்" என்று வாலிப வணிகனும் ஒப்புக்கொண்டான்.

அதே நேரத்தில் சிறையில் தள்ளப்பட்ட சாம்பனும் முல்லையும் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். "அப்பா! நாளை என்ன நடக்கும்?" என்று முல்லை கேட்டாள்.

"அது ஆண்டவன், பராந்தகன் இருவருக்கும்தான் தெரியும். இருவரும் எங்கிருக்கிறார்களென்று தெரியவில்லை. எப்படி ஆண்டவன் செயல்படாது இருப்பதில்லையோ, அப்படியே பராந்தகனும் கையைக் கட்டிக்கொண்டிருக்க மாட்டான். இந்த ஆடுகள் மீது புலியைப் போல் பாய்ந்து வருவான். பொறுத்துப் பார்" என்று தைரியம் சொன்னான் முல்லைக்கு.

அந்த நேரத்தில் மலைச்சரிவில் சிறு அருவியொன்றின் கரையில் பராந்தகனும், மறைவிடத்தில் அரபுப் புரவி மீது நுழைந்த ராட்சஸனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். "இந்த நாடகத்துக்கு நாளை முடிவு கட்டுகிறேன்" என்று சபதம் செய்தான் பராந்தகன்.

"நாளைக்கா?" என்று கேட்டான் பக்கத்திலிருந்த ராட்சஸப் பிரகிருதி.

"ஆம், கன்னித்தேவா! நினைத்ததை முடிப்பவன்தான் தமிழன். அம் என்றால் ஆயிரமும் ஆகாதோ என்றொரு தமிழ்க்கவி பாடவில்லை?" என்று கேட்டான் பராந்தகன்.

"ஆம். பாடினார்!" என்ற கன்னித்தேவன் இடியிடி என நகைத்தான்.

24. தூக்குமேடை

ராட்சஸ ரூபியான கன்னித்தேவன் நகைத்ததைக் கண்ட பராந்தகன் வினவினான், "தேவா! எதற்காக நகைத்தாய்?" என்று.

"போருக்குக் கவிதையை உவமையாகக் காட்டினீர்களே, அதற்காக நகைத்தேன்" என்றான் கன்னித்தேவன்.

"கன்னித்தேவா! கவிகளை அற்பமாக நினைக்காதே. அவர்கள் சொல் அம்பினும் கூர்மையானது. எதையும் அழிக்க வல்லது" என்று கூறினான். "அதுசரி! நீ எப்படி திடீரென்று இங்கு வந்து சேர்ந்தாய்?" என்று விசாரிக்கவும் செய்தான்.

"காயலுக்கு ஓலை வந்தது உங்களை கவனிக்கும்படி." என்று சொன்னான் கன்னித்தேவன்.

"யார் அனுப்பியது ஓலை?" பராந்தகன் குரலில் சந்தேகம் இருந்தது.

"ராணியார் அனுப்பினார்கள்!"

"யாரது ராணி? என் அண்ணன் மனைவியா?"

"தங்களிடம் அவர்களுக்கு ஏது அத்தனை அக்கறை?"

"வேறு ஏது ராணி பாண்டிமண்டலத்தில்?"

"அடுத்து வரப் போகும் ராணி!"

"அப்படியொருத்தி இருக்கிறாளா?"

"இருக்கிறார்! நீலவல்லியார்." இதை மிக மெதுவாகவும் மரியாதையுடனும் சொன்னான் கன்னித்தேவன்.

நீலவல்லியின் பெயரைக் கேட்டதும் சற்று நிமிர்ந்து உட்கார்ந்த பராந்தகன், "நீலவல்லியா?" என்று வியப்புடன் வினவினான்.

கன்னித்தேவன் தனது சிறிய கண்களைச் சிமிட்டினான். "அவர்கள்தான். சாதாரணமாக நீங்கள் எந்த அலுவலுக்குப் போனாலும் பதினைந்து நாள்களுக்கு மேல் வெளியூரில் இருக்க மாட்டீர்களாம். இப்பொழுது ஒரு மாத காலம் ஆகிவிட்டதாம். ஆகையால் உங்களைக் கண்டுபிடிக்கவும் நிலைமையை ஆராய்ந்து எழுதவும் கட்டளை நிரூபம் வந்தது. உடனடியாகக் கிளம்பினேன்" என்று விளக்கினான் கன்னித்தேவன்.

நீண்ட சிந்தனையில் அமர்ந்தான் பராந்தகன். நீலவல்லி தன்னை நினைத்து உருகுவதை உணர்ந்ததால் அவன் உணர்ச்சிகள் வேகமாகச் சுழன்றன, அவன் உள்ளத்தில். "பாவம்! நிஷேத தினத்தன்று விட்டு வந்து விட்டேன். அவள் மனப்பதைப்பு எனக்கல்லவா தெரியும்?" என்று உள்ளூர சொல்லிக்கொண்டான்.

பராந்தகனை மேலும் குத்த கன்னித்தேவன் சொன்னான், "உங்களை ராணியார் நம்பவில்லையென்றும் கேள்வி!" என்று.

"என்ன, நம்பவில்லையா?" வியப்புடன் வினவினான் பராந்தகன்.

''இல்லை. இங்குள்ள முல்லை மிகுந்த அழகியாம். உங்களுக்குப் பெண்பித்து அதிகமாம். ஆதலால் உங்களைக் கைப்பிடியாக அழைத்து வரும்படி உத்தரவு'' என்ற கன்னித் தேவன் இகழ்ச்சியாகப் பார்த்தான் பாண்டிய இளவலை.

பராந்தகன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ''கன்னித் தேவா! என் குணம் உனக்குத் தெரியுமல்லவா?'' என்று வினவினான், புன்முறுவலின் ஊடே.

''நன்றாகத் தெரியும். அதனால்தான் பதில் எழுதி விட்டேன்.'' என்றான் தேவன்.

''என்ன பதில் எழுதினாய்?''

''முல்லை வெறும் காட்டுமிராண்டிப் பெண் என்றும் சிறிதும் அழகில்லை என்றும் மகா கோரமென்றும் ராணியார் கவலைப்பட வேண்டாமென்றும் எழுதிவிட்டேன். உங்களைப் பிடித்து அனுப்புவதாகவும் எழுதினேன்'' என்றான் கன்னித் தேவன்.

சிறிதே சினம் தெரிந்தது பராந்தகனின் முகத்தில். ''கன்னித் தேவா! நீ பரம முட்டாள். முல்லை பேரழகி என்று நீலவல்லிக்குத் தெரியும். நீ எழுதுவதை அவள் நம்பமாட்டாள். சந்தேகப்பட்டால் புறப்பட்டும் வருவாள். இங்கு அவள் மட்டும் வந்தாலோ நாம் தொலைந்தோம்'' என்றான் பராந்தகன் சினத்துடன்.

''நாமென்று சொல்லாதீர்கள் பிரபு! தங்களுக்குத்தான் தொல்லை. இரண்டு பெண்டாட்டிக்காரன் வாழ்க்கையே தொல்லை வாழ்க்கை'' என்ற கன்னித்தேவன், ''ராணியார் வருவதற்குள் இந்தக் கொட்டும்தளப் புரட்சியைத் தீர்த்துவிட்டு நீங்கள் மதுரைக்கு ஓடிவிட வேண்டும்'' என்று சுட்டிக் கட்டினான் கன்னித் தேவன்.

பராந்தகன் சிந்தனையில் இறங்கினான். ''சரி, நீ எத்தனை வீரர்களை அழைத்து வந்திருக்கிறாய்?'' என்று வினவினான்.

''இருநூறு வீரர்கள்'' என்று உடனடியாக பதிலிறுத்தான் கன்னித்தேவன்.

''சரி, வெள்ளைக் கூழாங்கல்லை என் மீது அடித்தாயே அதன் மர்மம் உனக்கு எப்படித் தெரிந்தது?''

''நான் எனது ஆட்களுடன் இங்கு வந்து இரண்டு நாள்களாயிற்று. நேற்று மாலை வரை எதிர்ப்பக்க மலைச்சரிவில் பதுங்கி இருந்தேன். நேற்று கொட்டும்தளம் சென்று புலனறிந்தேன். சிறு வெள்ளைக்கூழாங்கல்தான் கொட்டும் தளத்துக்குள் நுழையும் அனுமதிச்சீட்டு என்பதைப் புரிந்து கொண்டேன். ஆகையால் அந்த மாதிரி கற்களாக நிறையப் பொறுக்கிக் கொண்டேன். தாமிரபரணி அருவிக்கரையிலிருந்து எனது வீரர்களுக்கும் அளித்திருக்கிறேன்'' என்று விளக்கிய கன்னித்தேவனைக் குதூகலத்தால் முதுகில் அறைந்தான் பராந்தகன்.

அத்துடன் சொன்னான், ''தேவா! இந்தக் கூழாங்கல் அடையாளமுறை கொட்டும்தளத்தில் பழைய பாண்டியர் களால் ஏற்படுத்தப்பட்டது. தாமிரபரணியால் வளப்படுத்தப் படும் இந்த நாட்டில் சகல அரசாங்க அலுவல்களுக்கும் ரகசிய ஓலையாக அதன் மடியில் கிடக்கும் வெள்ளைக் கூழாங்கற்களே இருக்கட்டும் என்று சுந்தரபாண்டியர் தீர்மானித்தார். இந்த முறையை முல்லைவேந்தனும் கையாள்கிறாள். இதனால் தானும் பெரிய அரசனென்று நினைக்கிறான்'' என்று.

இதற்குப் பிறகு பராந்தகன் பேசவில்லை. சிந்தனை வசப்பட்டான், பல நிமிடங்கள். பிறகு, ''கன்னித்தேவா! நீ வராமலே இந்தப் புரட்சியை நான் ஒடுக்கியிருப்பேன்! புரட்சி இருவர் கைகளில் இருக்கிறது. ஒருவன் முல்லைவேந்தன், இன்னொருத்தி முல்லை. இப்பொழுது சிறைப்பட்டிருக்கிறாள்'' என்றான்.

''என்ன! முல்லை சிறைப்பட்டுவிட்டாளா?'' என்று வினவினான் கன்னித்தேவன்.

''சந்தேகமில்லை. என்னுடன் வந்த அரபு வணிகரைக் காணோம். தவிர, முல்லைவேந்தனின் காட்டுக் காவலிலிருந்து கொட்டும்தளத்தைவிட்டு முல்லை நகர முடியாதென்பதும் வேந்தனுக்குத் தெரியும். வெளியே செல்லாவிட்டால் முல்லை மறைந்திருக்கக்கூடிய ஒரே இடம் பாண்டியரின் பழைய கோட்டை. அதை முல்லைவேந்தன் நன்றாக அறிவான். முல்லை அவனிடம் சிக்கிவிட்டாள்'' என்று திட்டமாக அறிவித்த பாண்டிய இளவல், ''உனது வீரரில் ஒருவனை அனுப்பி நடப்பதை அறிந்து வா. இரண்டொருவர்களை இங்கு வைத்துக்கொண்டு மீதி வீரர்களை ஐவர் ஐவராகப் பிரித்து நாளை மாலைக்குள் கொட்டும்தள நடுத்திடலுக்கு வந்து சேரும்படி அனுப்பிவிடு'' என்று பராந்தகன் உத்தரவிட, தலையாட்டினான் கன்னித்தேவன். ''தங்கள் கட்டளை'' என்றும் சொன்னான்.

பொழுது விடிந்ததும் பராந்தகன் கன்னித்தேவனின் இருநூறு வீரர்களைக் கூட்டி அவர்கள் கொட்டும்தளத்தில் நுழைய வேண்டிய முறைகளையும் செய்ய வேண்டிய பணிகளையும் விளக்கினான். ''நீங்கள் ஐவர் ஐவராகப் பல வழிகளில் நுழைந்து கொட்டும்தளக் காவல்படையுடன் கலந்துவிடுங்கள். புரட்சியில் சேருவதாக ஒப்புக்கொண்டால் உங்களுக்கு எந்தத் தீங்கும் நேரிடாது. என் ஊகம் சரியானால் நாளை மாலை கொட்டும்தள நடுச்சவுக்கத்தில் பல விபரீதங்கள் நிகழ்வதைப் பார்க்கலாம். அங்கு வந்து சேருங்கள்'' என்றும் கட்டளை யிட்டான். அவர்களில் எத்தனை பேர் வில்லாளிகள் என்பதை உணர்ந்ததும் ஒருவன் வில்லை மட்டும் தான் வாங்கிக்கொண்டு ''நீங்கள் நால்வரும் எச்சரிக்கையுடனிருங்கள், நாளைக்கு என் அம்பு பாய்ந்ததும் சட்டென்று நடுத்தளத்துக்குள் நுழைந்து திரும்பி அம்புகளை நாம் குறிப்பிடும் நபர்களை நோக்கிக் குறி

வையுங்கள். பிறகு கட்டளைப்படி நடவுங்கள்'' என்று கூறி அனுப்பினான்.

பிறகு கன்னித்தேவன் வீரர்கள் பிரிந்து சென்றனர். பொழுது விடிந்தது, நகர்ந்தது. கொட்டும்தளச் சதுக்கத்தில் விபரீத நிலை உருவாகிக் கொண்டிருந்தது. சதுக்கத்தின் நடுவில் நான்கு தச்சர்கள் தூக்குமேடை அமைத்துக் கொண்டிருந்தார்கள். மேடை நடுப்பகலில் முடிந்து மிக அழகாகக் காட்சி அளித்தது. அந்த அழகை பயங்கரமாக அடிக்க மாலை வேளையும் நெருங்கியது.

மாலையில் பகலவன் மலைவாயிலில் விழும் நேரத்தில் சாம்பனை இரு வீரர்கள் மேடையை நோக்கி இழுத்து வந்தார்கள். மேடை மீது ஏற்றிக் கழுத்தில் தூக்குக்கயிற்றையும் மாட்டினார்கள்.

25. சமயத்தில் எதுவும் முரடு!

மாலை முழுவதும் முற்றாவிட்டாலும் இருள் புகும் சமயமாகிவிட்டதால் எங்கும் விளக்குகள் எரியத் துவங்கிய மங்கல நேரம் அது. அந்த நேரத்தில் மங்கலமும் அமங்கலத் துடன் இணைய முடியும் என்பதற்கு அறிகுறியாக சாம்பன், கழுத்தில் மாட்டப்பட்ட தூக்குக்கயிறுடன் நின்றான். அந்த நிலையிலும் அவன் முகத்தில் அச்சம் சிறிதுமில்லை. தனக்கு எதிரே அரைச் சந்திர வட்டமாக நின்ற புரட்சி வீரர் கூட்டத்தை யும் அவர்கள் முன்பு நின்ற முல்லை வேந்தனையும் மிக அலட்சியமாகப் பார்த்தான் சாம்பன். சாகும் தறுவாயிலும் அவன் காட்டிய அலட்சியத்தையும் திமிரையும் கண்ட முல்லைவேந்தன், முகம் கோபாக்கினியால் கொழுந்து விட்டெரிய உள்ளே எழுந்த புயல் அதை வீசிப் பெரு நெருப்பாக்க, கடுமையுடன் பேசினான். ''சாம்பா! மலை வாயிலில் பகலவன் விழுந்து விட்டான். அடுத்து நீயும்

அவனுடன் மறைந்துவிடும் நிலைமை வருகிறது. கடைசியாக நீ சொல்ல வேண்டியது எதுவாயிருந்தாலும் சொல்லலாம். புரட்சியின் எதிரிகளின் கதி என்னவென்பதற்குக் கொட்டும்தள மக்களுக்கு நீ ஓர் உதாரணமாவாய். ஆகையால் தூக்குக்கயிறு இறுகு முன்பு உன் கட்சி ஏதாவதிருந்தால் சொல்லிவிடு'' என்றான் முல்லைவேந்தன்.

சாம்பன் லேசாக நகைத்தான். ''டேய், பராக்கிரமா! இந்த சாவைப்பற்றி நான் கவலைப்படவில்லை. உன் அழிவுக்கு இது முதல்படி. வரகுண மகாராஜாவின் பெரிய பாண்டிய சாம்ராஜ்யத்தை உன்னுடைய கைக்கூலிகளான கொள்ளைக் காரர்களையும் சிங்களவர்களையும் கொண்ட சிறு கூட்டத்தால் அழிக்க முடியும் என்று நினைப்பது முட்டாள்தனம். வெகு சீக்கிரம் பாண்டியர் படை இங்கு புகுந்து உன்னுடைய முட்டாள்தனத்தில் பங்கு கொண்ட அனைவரையும் வெட்டித் தீர்த்துவிடும். ஆகையால் உன் வாழ்வும் இன்னும் இரண்டு நாள்களுக்கு மேல் இல்லை. ஆகவே சாகும்போது கத்தும் கோழியைப்போல் நீயும் இஷ்டமானதைக் கத்தித் தீர்த்துவிடு. சாம்பன் மரணத்துக்கு அஞ்சுபவனல்லன்'' என்று சாம்பன் விளக்கிவிட்டு மீண்டும் ஒருமுறை நகைத்தான். மறுபடியும் எதிரே கூடியிருந்த வீரர்களை நோக்கி, ''நீங்கள் வீரர்களானால் இந்தப் போலிப்புரட்சிக்கு பலியாகாதீர்கள். இவன் சுயநலத் திற்காக இந்த புரட்சியைக் கிளப்பியிருக்கிறான். வரகுண மகாராஜா உங்களுக்கு என்ன குறை வைத்திருக்கிறார்? உங்கள் வாழ்வில் சுகமில்லையா? பணமில்லையா? சுதந்திரந் தானில்லையா? என்ன இல்லை? சிந்தித்துப் பாருங்கள். பெண்ணையே பிறருக்கு விற்க முயலும் இவனிடம் என்ன நன்மையை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்றும் வினவினான் உணர்ச்சி நிரம்பிய குரலில்.

இதைக் கேட்டதும் கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. ''முல்லையையா விற்கப் போகிறார்?'' என்று சிலர் கேட்கவும் செய்தார்கள் உரக்க.

அது சாம்பன் காதிலும் விழுந்திருக்க வேண்டும். ''விற்கப் போகிறாரா! இல்லை, ஏற்கெனவே விற்றுவிட்டார். முல்லாவாக வேஷம் போட்ட என்னை அரபு வணிகர் என்று நினைத்து என்னிடமே விற்றார். மீண்டும் விற்கத் தயங்கமாட்டார். சுயநலத்துக்கு இவன் எதையும் விற்பான். உங்களைக்கூட நாளைக்கு விற்றுவிடுவான்'' என்று கூறினான்.

முல்லைவேந்தன் முகம் கடுகடுத்தது. அதற்கு மேல் சாம்பனைப் பேசவிடுவது தவறு என்று நினைத்தான். ஆகவே, ''சரி! இவன் உளறலைக் கேட்டது போதும். இவன் நிற்கும் அடிப்பலகையைத் தட்டிவிடுங்கள். சுருக்கு இறுகி இவன் அந்தரத்தில் தொங்கலாடி மடியட்டும்!'' என்று பெரிதாகக் கூவினான். அதற்காகக் கையை அசைத்தும் ''உம் ஆகட்டும். தயக்கம் வேண்டாம்'' என்றும் கூறினான். அத்துடன் தனது புரவிக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஐந்து புரட்சிப் படைத் தலைவர்களையும் நோக்கி, ''இங்கு ஏதாவது கலவரம் நடந்தால் அதைச் சந்திக்கச் சித்தமாகுங்கள்'' என்று உத்தரவிட, அந்த ஐந்து பேரும் தங்கள் புரவிகளை நடத்தி முல்லை வேந்தனிடமிருந்து சிறிது பிரிந்து உருவிய வாட்களுடன் நின்றனர்.

அவர்கள் அப்படிச் சித்தமானதும் தனது வாளை உயர்த்திய முல்லைவேந்தன் ''சரி, முடித்துவிடு'' என்று தூக்குமேடைக்கு அருகே நின்ற கொலையாளியைப் பார்த்துக் கூவ, அவன் தனது கையிலிருந்த இரும்பு உலக்கையால் சாம்பன் அடியிலிருந்த மரப்பலகையை அகற்ற உலக்கையை ஓங்கினான்.

அந்த உலக்கையின் அடி விழுவதற்கு அரை விநாடி முன்பாக பிரமிக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. அவன்

உலக்கையைக் கீழே கொண்டுவந்த அதே சமயத்தில் சாம்பன் கழுத்திலிருந்த கயிறு எங்கிருந்தோ பறந்து வந்த ஓர் அரைச் சந்திர வாளினால் அறுக்கப்பட்டது. இன்னும் ஐந்து அம்புகள் மக்களை அடக்கி நின்ற ஐந்து புரட்சித் தலைவர்கள் மார்பு களிலும் ஒரே சமயத்தில் தைத்தன. கழுத்தில் கயிறு அறுந்ததும் சாம்பன் ஒரே தாவில் எதிரே புரவியில் உட்கார்ந்திருந்த முல்லைவேந்தன் மீது தாவி அவனைப் புரவியிலிருந்து இழுத்துக்கொண்டு கொட்டும்தளத் தரையில் விழுந்தான். அம்புகளால் துளைக்கப்பட்ட மற்ற ஐந்து தலைவர்களும் புரவியிலிருந்து சரிந்து விழுந்தார்கள். அவர்களில் இருவர் மாண்டுவிட்டதால் அவர்கள் சவக் கண்கள் ஆகாயத்தை நோக்கி நிலைகுத்தி விழித்தன. மற்ற மூவரும் மரண முனகலாக முனகினார்கள்.

திடீரெனப் பல புரவிகள் வரும் சத்தம் கேட்டது. தலை வர்கள் இறந்து முல்லைவேந்தன் கதி என்ன ஆயிற்றென்று தெரியாததாலும், சுற்றி நின்ற புரட்சி வீரர்கள் ஆயுதங்களைத் தூக்க முற்பட்ட சமயத்தில் அந்த அணி வகுப்பை ஐந்து ஐந்து பேராக நுழைந்து படையைத் துண்டித்து விட்ட வீரர்களை அடுத்து ராட்சஸன்போல் கன்னித்தேவன் அந்த அரங்குக்குள் நுழைந்து தனது பெருவாளை உயர்த்தி, ''யாரும் சிறிது அசங்கினாலும் கொல்லப்படுவீர்கள். காவல்படை உங்களைச் சூழ்ந்து நிற்கிறது'' என்று தனது ராட்சஸக் குரலில் கூவினான்.

அந்தச் சமயத்தில் தூக்குமேடைக்குப் பின்புற மலைப்பாதை யின் எழுச்சியில் தனது பெரிய புரவியின் மீது இறங்கி வந்து மேடைமீது தாவி நின்ற பராந்தகன், அந்தக் கூட்டத்தைப் பார்த்துக் கையமர்த்திவிட்டுக் கம்பீரமான குரலில் பேசினான். ''கொட்டும்தளவாசிகளே, பாண்டியக் குடிமக்களே! யாரும் எந்தவித ராஜதுரோகச் செயலிலும் ஈடுபட வேண்டாம். அப்படி ஈடுபட்டால் இந்தத் தூக்குமேடை பயனற்றதாக ஆகாது. தினம் நான்கு பேர் வீதம் தொங்க வேண்டும். நான் இங்கு வந்தபோது

இந்தப் புரட்சியைப் பெரிதாக மதித்து வந்தேன். இதை ஒடுக்கும்படிப் பாண்டிய மன்னர் ஆணையிட்டபோது இது உறுதியுள்ள புரட்சிக் கூட்டமாயிருக்குமென்று நினைத்தேன். ஆனால், இதில் உறுதியோ கட்டுக்கோப்போ எதுவும் இல்லை. முல்லை வேந்தன் என்ற பராக்கிரம பாண்டியன் சுயநலத்திற் காகத் திரட்டிய சிறு கூட்டமென்பதை உணர்ந்தேன். ஆகவே இதை இரத்தம் சிந்தாமல் முடிக்கும் வகையைத் தேடினேன். ஆனால் எனக்கு பலத்த எதிரி ஒருவர் இருந்தார். அவரிடம் சிறிது அஞ்சினேன். அவள்தான் முல்லை. அவள் புத்தி இந்தப் புரட்சியைவிட்டு அகன்றதும் இது குலைய முற்பட்டது. பராக்கிரமனுக்குப் பராக்கிரமந்தானில்லையென்றால் புத்தி பலமும் இல்லை'' என்று கூறிய பராந்தகன் கீழே நின்ற சாம்பனை நோக்கி, ''பராக்கிரமனை இப்படிக் கொண்டு வா'' என்று கட்டளையும் இட்டான்.

சாம்பன் பராக்கிரமனைத் தரதரவென்று இழுத்து வந்து கன்னித்தேவன் உதவியுடன் மேடைமீது ஏற்றி நிறுத்தினான்.

அவனை இகழ்ச்சியுடன் பார்த்து மீண்டும் எதிரே நின்ற கூட்டத்தையும் பார்த்து, ''இந்தப் பராக்கிரமனை நான் மதுரை அழைத்துச் செல்கிறேன். இவன் கதியை மன்னர் நிர்ணயிப்பார். அதுவரை இங்கு சிறையிருப்பான்'' என்ற பராந்தகன் ''மக்களே! புரட்சி வீரர்களே! அமைதியாகக் கலைந்து செல்லுங்கள். பாண்டிய சாம்ராஜ்ய சக்கரவர்த்தி வரகுண மகாராஜாவின் பெயரால் உத்தரவிடுகிறேன். சாதாரணக் குடிமக்கள் அமைதியுடன் இல்லத்தை நாடுங்கள். புரட்சியில் சேர்ந்திருப்பவர்கள் காயலிலிருந்து வந்திருக்கும் இதோ இந்தக் கன்னித்தேவன் வீரர்களிடம் சரணடையுங்கள். இங்கு வராதிருக்கும் வீரர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறேன். உடனடியாகப் படையிலிருந்து விலகி, மலைக்காடுகளிலிருந்து விலகி உங்கள் ஊருக்குச் செல்லுங்கள். தமிழ்நாட்டு விவகாரத்தில் காரணமின்றித் தலையிட்டிருக்கும் சிங்களவர்

தங்கள் நாடு திரும்பட்டும். இனி அவர்களுக்கு இங்கு இடமில்லை. இன்னும் மூன்று நாள்களுக்குப் பிறகும் இங்கிருப்பவர்கள் சிறை செய்யப்படுவார்கள். இல்லையேல் அழிக்கப்படுவார்கள்'' என்று இரைந்து பேசினான். பிறகு பராக்கிரமனை கன்னித்தேவனிடம் அளித்து, ''இவனைச் சிறையில் வை'' என்று உத்தரவிட்டு மேடையிலிருந்து இறங்கினான்.

பராந்தகன், மன்னன் மீது ஆணையிட்டுப் பிறப்பித்த உத்தரவைக் கேட்டதும் கொட்டும்தளக் கூட்டம் ஸ்தம்பித்து நின்றது சில விநாடிகள். பிறகு மெள்ள மெள்ளக் கலைந்தது. மேடையிலிருந்து இறங்கிய பாண்டிய இளவல் தனது புரவியின் மீது ஆரோகணித்து அதைச் செலுத்த முற்பட்டான். ''எங்கு போகிறீர்கள் இளவரசே?'' என்று வினவினான் கன்னித் தேவன்.

''சிறைக்கு'' என்றான் பராந்தகன்.

''சிறைக்கா!'' என்று வியப்புடன் வினவினான் கன்னித்தேவன் ஏதும் புரியாமல்.

''ஆம். அங்குதானே முல்லை இருக்கிறாள்'' என்ற பராந்தகன் தனது புரவியை நடத்தினான் கொட்டும்தள சிறைச்சாலையை நோக்கி.

அவன் வருவதற்கு முன்பே சிறைச்சாலைக்கு மாலை நிகழ்ச்சிகள் தெரிந்துவிட்டதால் அவனுக்குச் சிறைக் காவலர் தலைவணங்கி வழிபட முல்லையின் சிறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் பராந்தகன்.

முல்லை தலைகுனிந்து நின்றாள். பராந்தகன் அவளைத் தனது இரு கைகளாலும் அணைத்து வெளியே அழைத்துச் சென்று அங்கிருந்த தனது புரவியில் அவளை ஏற்றித் தானும் ஏறிக் கொண்டான். புரவி நகர்ந்து சிறைச்சாலை வீதியில் ராஜநடை போட்டுச் சென்றது. இருவரும் அன்று பாண்டியரின்

பாழடைந்த கோட்டைக்கு வந்தபோது நள்ளிரவாகி விட்டாலும் கோட்டையின் உட்புறத்தில் தீபம் எரிந்துகொண்டிருந்தது. புரவியிலிருந்து இறங்கிய பராந்தகன், முல்லையை இரு கைகளாலும் தூக்கிக்கொண்டு உள்ளே சென்றான். அங்கிருந்த படுக்கையில் கிடத்திவிட்டு தனது ஆடைகளைக் களைய முற்பட்டான்.

படுக்கையில் கிடந்த முல்லை கேட்டாள், ''இங்கு எதற்காக என்னைக் கொண்டுவந்தீர்கள்?'' என்று.

''நீ சிறையிலிருந்ததால்'' என்று சம்பந்தமில்லாமல் பதில் சொன்னான் பராந்தகன்.

''அதனால்?''

''உன்னை இங்கு கொண்டுவந்தேன்.''

''எதற்கு?''

''உன்னிடம் சிறைப்படுவதற்கு'' என்ற பராந்தகன் அவளை நெருங்கினான்.

இரு கைகள் அவனைச் சிறைப்படுத்தின.

நான்கு நாள்களுக்குப் பிறகு பாண்டியரின் பழைய கோட்டையிலிருந்து வெளி வந்த பராந்தகன் ''நண்பரே!'' என்று அழைக்க, ஓடிவந்த தனது புரவி மீது தாவி ஏறினான்.

முல்லை உச்சி வாயிற்படியில் கண் கலங்கி நின்றாள். ''என்னை விட்டுப் போகிறீர்கள்'' என்றாள்.

''திரும்பவும் வருவேன், முல்லை'' என்றான் பராந்தகன்.

''நான்கு நாள் சொர்க்கத்திற்குப் பிறகு நரக வாழ்க்கையில் தள்ளுகிறீர்கள்'' என்றாள் முல்லை நா தழுதழுக்க.

''முல்லை! நாம் அரச குலத்தவர். நாம் நமக்காக மட்டும் வாழ முடியாது. குடிமக்களுக்காக வாழுகிறோம். நீ புத்திசாலி. வருந்தாதே. திரும்பவும் வருகிறேன்'' என்று கூறினான் பராந்தகன்.

"தந்தையையும் அழைத்துச் செல்கிறீர்களா மதுரைக்கு?" என்று முல்லை கேட்டாள்.

"இல்லை. நீ அவரை விடுதலை செய்து ஆறுமாதங்களுக்குப் பாண்டிய நாட்டை விட்டு அனுப்பி விடு."

"இதுதானா நீதி?"

"ஆம், முல்லை. பாண்டிய நீதி, கருணையுடன் கலந்தது" என்ற பராந்தகன் புரவியை நடக்க விட்டான். புரவியும் அவனும் மறையும் மட்டும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள் முல்லை. "இது ஒரு கனவு" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அடுத்த மூன்றாவது நாள் மதுரை புகுந்த பராந்தகன் அண்ணனிடம் சென்று புரட்சி அடங்கிவிட்ட கதையைச் சொன்னான். மகாராஜா சொன்னார், "பராந்தகா! நீ ஒருவனே பெரும் படை. வேறு யாராலும் இப்படிப் புரட்சியை அடக்கிக் கலைத்திருக்க முடியாது" என்று. "சரி! நான் சொன்ன பரிசு கிடைத்ததா?" என்றும் ரகசியமாக வினவினார்.

"பரிசா!" என்று ஏதுமறியாதது போல் வினவினான் பராந்தகன்.

"அதுதானடா அந்தப் பெண் முல்லை" என்றார் மகாராஜா.

"அவள்! ஐயோ, அது பெரும் பிசாசு" என்று கூறினான் பராந்தகன்.

மகாராஜா நகைத்தார். "பிசாசா! சரி! நீ அதைப் பிடித்துக் கொண்டாயா, அது உன்னைப் பிடித்துக்கொண்டதா?" என்று வினவினார் நகைப்பின் ஊடே.

"மகாராஜா!" அதிர்ச்சியுடன் கேட்டான் பராந்தகன்.

"எல்லாம் தெரியும் போடா. தம்பி! உன் குணம் எனக்குத் தெரியாதா?" என்ற மகாராஜா, "சீக்கிரம் போ! இரவு முற்றி

விட்டது. பாவம் நீலவல்லி காத்திருப்பாள்" என்று மீண்டும் நகைத்தார்.

அன்று முதல் ஜாம முடிவில் நீலவல்லியின் பள்ளியறையில் நுழைந்தான் பாண்டிய இளவல். நீலவல்லி சர்வாலங்கார பூஷிதையாய் பஞ்சணையில் கிடந்தாள். அவள் கண்கள் மூடிக் கிடந்தன. பராந்தகன் அவள் துயிலுவதாக நினைத்துக் கதவைத் தாளிட்டு அடி மேலடி எடுத்து வைத்து நடந்தான் பஞ்சணையை நோக்கி. அதன் முகப்பில் உட்கார்ந்து தனது அங்கியைக் களைந்து கட்டிலைச் சுற்றியிருந்த கயிற்றுக் கொடியிலிருந்த மல்லிகைச் சரங்களுடன் தொங்கப் போட்டான். பிறகு குனிந்து தனது கழுத்தின் வீரப்பதக்கம் நீலவல்லியின் மார்பில்பட அவள் முகத்தை நாடினான்.

"கிட்டே வர வேண்டாம்" என்றாள் நீலவல்லி சினத்துடன்.

அவன் மார்புப் பதக்கம் அவள் மார்புமுனைகள் மீது சஞ்சரித்தது. அவள் இதழ்களைத் தீண்ட அவன் குனிந்தபோது பதக்கம் கடினமாக அவள் மார்பில் பதிந்தது.

"போங்கள்" என்றாள் நீலவல்லி.

"எங்கு?"

"முல்லையிடம்."

"எதற்கு?"

"இங்கு எதற்கு வந்தீர்கள், அதற்குத்தான்."

"நீலவல்லி..."

"உம்."

"நீ சொன்னது போல் முல்லை அழகல்ல."

"பொய்."

"சத்தியம்."

நீலவல்லி நகைத்தாள். "காரியம் ஆக வேண்டுமானால் புருஷன் ஆயிரம் சத்தியம் வேண்டுமானாலும் செய்வான்" என்றாள்.

"நீ வாயாடி ஆகிவிட்டாய்" என்றான் பராந்தகன்.

"வாயை அடக்க உங்களுக்குத் துப்பு உண்டா?" என்று அவள் வினவினாள்.

அடுத்து அவளால் பேச முடியவில்லை. அவன் வலிய உதடுகள் அவள் மலரிதழ்களை மூடின.

அது மட்டுமல்ல, உடலும் உடலை மூடியது. "முரடா!" என்று அழைத்த நீலவல்லி அவன் கழுத்தை வளைத்து இறுக்கி, "அந்தக் காட்டுப்பெண்தான் உங்களுக்குத் தகுதி" என்று முணுமுணுத்தாள்.

"அரண்மனைப் பெண்ணான நீ மட்டும் என்னவாம்? நீயும் முரட்டுப்பெண்தான்" என்ற பராந்தகன் அடுத்து ஏதும் பேச வில்லை.

அவளும் பேசவில்லை. உடல்கள் பேசின. உணர்ச்சிகளும் பேசின.

முற்றும்